# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 288 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 24, வெள்ளிக்கிழமை 09.09.2016


### யாழ்ப்பாணத்தில் 36 மதுபானச் சாலைகளை மூடக் கோரி மனு

யாழ்ப்பாணம், செப். 9
யாழ. குடாநாட்டில் இயங்கும் 36 மதுபானச் சாலைகள் சட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக் கப்படாத பிரதேசங் களிலேயே இயங்குவதாக மாவட்டச் செயலகம்

>> 24ஆம் பக்கம்

# மகிந்தவின் சகா துமிந்த உள்ளிட்ட ஐவருக்கு தூக்குத்தண்டனை

## பாரத லக்ஸ்மன் கொலை வழக்கில் கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 9
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட 4 பேர் கொல்லப்பட்ட வழக்கில், மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய சகாவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த சில்வா உள்ளிட்ட 5 பேருக்குச் சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.
இந்தக் கொலைகள் தொடர்பான வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்ப்பை

>> 23ஆம் பக்கம்

# டிப்பர் மோதியதில் நேற்றும் இருவர் சாவு

## வடக்கில் இரு வாரங்களில் 13 பேரைக் காவுகொண்டது விபத்து

யாழ்ப்பாணம், செப். 9
மன்னாரில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்துடன் கடந்த இரு வார காலத்தில் வடக்கில் 13 பேர் விபத்துக்களால் சாவடைந்தனர். இந்த மாதம் 4 ஆம் திகதியிலிருந்து

>> 23ஆம் பக்கம்

# போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து நியமனம் பெற்ற 20 ஆசிரியர்கள் சிக்கினர்

## அவர்களைப் பணி நீக்கியது வடக்குக் கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், செப். 9
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் கடந்த காலங்களில் போலிக் கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து 20 பேர் ஆசிரியர்களாக இணைந்துள்ளனர் எனக் கண்டறியப்பட்டது. அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.
இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இரவீந்திரன்

>> 23ஆம் பக்கம்

# கிறிஸ்தவ – இஸ்லாமிய மதங்களுக்கு அழைப்பிதழில் இடமில்லை




யாழ்ப்பாணம், செப். 9
கிறிஸ்தவ - இஸ்லாமிய மத அடையாளங்களை வெளிப்படுத்தாமல், ஜனாதிபதி இன்றைய தினம் கலந்துகொள்ளும் நிகழ்வுக்கான அழைப்பிதழ் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டு, யாழ். மாவட்டச் செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள அழைப்பிதழிலேயே, கிறிஸ்தவ - இஸ்லாமிய மத அடையாளங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
ஜனாதிபதி மைத்திரிபால

>> 23ஆம் பக்கம்

# புனர்வாழ்வுக்கு உட்படாமல் 275 பேர் வடக்கில் உள்ளனர்

## இப்படித் தெரிவிக்கிறார் யாழ். தளபதி

யாழ்ப்பாணம், செப். 9
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த 275 பேர் எந்தவித புனர்வாழ்வு நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படாத நிலையில் வடக்கில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களால் தேசிய பாதுகாப்புக்கு எதுவித அச்சுறுத்தலும் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க.
பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்த,

>> 23ஆம் பக்கம்

# கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் நேற்று விடுவிப்பு



கிளிநொச்சி, செப். 9
கிளிநொச்சி – கனகபுரம் மாவீரர்

>> 23ஆம் பக்கம்

# கிளிநொச்சியில் சடலமாக மீட்கப்பட்டவர் விபத்தினாலேயே சாவு

## பொலிஸார் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 9
கிளிநொச்சி - கண்டாவளையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டவர் வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்தமை நேற்று மாலை விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.
அந்த இடத்தில் விபத்தில் காயமடைந்த 2 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் மோதியதால் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதனால் அவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
காயமடைந்த இருவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அதன்போதே அவர்கள் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தனர். தாம் நாயுடன் மோதி

>> 23ஆம் பக்கம்



# யாழ். பொலிஸ் நிலையத்தை இன்று திறக்கிறார் மைத்திரி

யாழ்ப்பாணம், செப். 9
31 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், மீண்டும் அதே இடத்தில் இன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.
யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அழிவடைந்தது.
'யாழ்ப்பாணம்

>> 23ஆம் பக்கம்


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.75% (AER 6.96%) முதல் 9.25% (AER 9.65%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோருக்கான தொழிற்சந்தை யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 9

பரீட்சைக்குத் தோற்றிவிட்டுக் காத்திருக்கும் மாணவர்களுக்கும், வேலைவாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கும் இளையோருக்கும் திட்டமிடலை வழங்கச் சந்தர்ப்பம் தரும் வகையிலான கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண்காட்சியும் தொழிற் சந்தையும் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகிறது.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும் இந்தக் கண்காட்சியில் 45 இற்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் 3ஆம் நிலைக் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன. இதில் மாணவர்களது திறமைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களும், மாணவர்களது சுய மேம்பாட்டுக்கான உள ஆற்றுப்படுத்தல்களும் விழிப்புணர்வு செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களும், ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கும், உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றியவர்களும், வேலை ஒன்றை தேடிக்கொண்டு இருக்கும் இளையோர்களும் பங்குபற்றிக் கொள்வதனால், தமது ஆற்றல்களுக்கும் எதிர்கால இலக்குகளுக்கும் ஏற்ப பொருத்தமான கற்கைநெறி ஒன்றைத் தெரிவு செய்ய வழிவகுக்கிறது. அதன்மூலம் இலங்கையில் உள்ள 825 வகையான அரச, தனியார் துறையில் வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலை மாணவர்கள் பாடத்தெரிவு, பாடத்துறைத் தெரிவுகளை சரியாக தெரிவு செய்வதன் மூலம் எதிர் காலத்தில் கிடைக்கும் வாய்ப்புக்களை அறிந்து கொள்ள முடியும்.

இந்தக் கண்காட்சியில் மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர்களும் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும். தமது பிள்ளைகளின் திறமைகளை இனங்கண்டு அதற்குப் பொருத்தமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கும், தமது எதிர்கால வாழ்வை வளமானதாக மாற்றுவதற்கும் உங்களுக்கு கிடைக்கும் பொன்னான அரிய வாய்ப்பு இதுவாகும்.

தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் என்.வி.கியூ மட்டம் 17 வரை உள்ள சான்றிதழ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா பட்டச் சான்றிதழ்கள் வரை எமது பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு இளைஞர்கள், யுவதிகளும் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கற்கை நெறிகளை இலவசமாகவும் குறைந்த கட்டணத்திலும் கற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே இந்தக் கண்காட்சிக்கு மாணவர்கள், பெற்றோர்கள், இளைஞர்கள், யுவதிகள் யாவரும் பங்குபற்றி பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி சு.வீரசுதாகரன் கேட்டுள்ளார். (வ-4)

# தாளையடி, பளையில் பெருமளவு கஞ்சாவுடன் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப். 9

கிளிநொச்சி மாவட்டம் தாளையடி மற்றும் பளை ஆகிய பிரதேசங்களில் கடந்த இரண்டு நாள்களில் பெருமளவு கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என கிளிநொச்சி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மதுவரி திணைக்களத்தின் வடக்கு மாகாணத்திற்கான சிறப்புக் குழுவும் கிளிநொச்சி மதுவரித் திணைக்களமும் இணைந்து நடத்திய சிறப்பு தேடுதலின் போதே இரு இடங்களிலும் கஞ்சா கைப்பற்றப் பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை, கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினால் தாளையடி பகுதியில் மேற்கொண்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, விற்பனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட 8 கிலோ 185 கிராம் நிறையுடைய கஞ்சா மீட்கப் பட்டது. கஞ்சாவை வைத்திருந்த நபரும் கைது செய்யப் பட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

இதன் போது சந்தேக நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை நேற்று அதிகாலைப் பொழுதில் பளைப் பகுதியில் வைத்து 4 கிலோ 500 கிராம் கஞ்சா மதுவரித் திணைக்களகத்தினரால் கைப் பற்றப்பட்டது. கிளாலியில் இருந்து விற்பனைக்காக கொண்டு சென்ற நேரம் பளைப்பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டடார். சந்தேக நபரை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தியபோது, அவரை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-5-21-ரி3)

## பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது

காணி விடுவிக்குமாறு கோரி பரவிப்பாஞ்சான் மக்களினால் முன்னெடுக்கப்பட்ட உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுக் கைவிடப் பட்டது. 3 மாதங்களுக்குள் அனைத்துக்காணிகளையும் விடுவிப்பதாகவும் 15 நாள்களுக்குள் 3 ஏக்கர் காணியை விடுவிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வாக்குறுதியளித்தையடுத்துப் போராட்டத்தைக் கைவிட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை இராஜாங்க அமைச்சர் விஜயகலா நேற்றுமாலை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார். பாதுகாப்புறுச் செயலாளர் வழங்கிய வாக்குறுதிக்கமைய தான் வாக்குறுதியளிப்பதாகவும், குறித்த வாக்குறுதியை பாதுகாப்புச் செயலாளர் நாளை எழுத்து மூலம் வழங்குவதாகவும் அவர் கூறியதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். அதனையடுத்துப் போராட்டம் நிறைவுக்குக் கொண்டு வரப் பட்டது. (வ-4,33)

# உடுவில் மகளிர் கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின

உடுவில் மகளிர் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. புதிய அதிபர் இன்று (நேற்று) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். முன்னைய அதிபர், திங்கட்கிழமை தனது பொறுப்புக்களைக் கையளிப்பதாகத் தெரிவித்தார். பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் இன்றிலிருந்து (நேற்று) ஆரம்பமாகியுள்ளன' இவ்வாறு தெரிவித்தார் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா.

உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னைய அதிபரை தொடர்ந்தும் பதவியிலிருக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரி பாடசாலை மாணவிகள் சிலரால் கடந்த சில தினங்களாகப் போராட்டம் நடத்தப்பட்டு வந்தது.

நேற்றைய தினம் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது. பாடசாலைச் சுற்றாடலில் நேற்றுக் காலை பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டமும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் திடீரென மாணவிகள் சிலர், பாடசாலையிலிருந்து அழுதவாறு ஓடி வந்தனர். இவர்களை பெற்றோர் அழைத்துக் கொண்டு மல்லாகம் நீதிமன்றத்துக்குச் சென்றனர். நீதிபதியைச் சந்தித்தனர். இதன் பின்னர் நான்கு மாணவிகள் பாடசாலைக்கு மீளத் திரும்பி வந்தனர்.

இதன் போது பாடசாலைக்குள் பிரவேசிக்க பொலிஸார் அவர்களை அனுமதிக்கவில்லை. மாணவிகள் நால்வரும் வாசலிலேயே அமர்ந்திருந்தனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இருந்து வருகை தந்தவர்கள், முதலமைச்சரின் செயலாளர் உள்ளிட்டோரையும் பொலிஸார் பாடசாலையினுள் அனுமதிக்கவில்லை.

மல்லாகம் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சன், பாடசாலைக்கு வருகை தந்தார். நீதிபதி மாணவிகளையும் பாடசாலையினுள் அழைத்துச் சென்றார். இதன் பின்னர் பாடசாலை நடவடிக்கைகள் சுமுகமான நிலமைக்கு வந்தன.

இந்த விடயம் தொடர்பில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் தெரிவித்ததாவது:

நேற்று (நேற்று முன்தினம்) பேராலயத்தில் பதவியேற்ற அதிபர் திருமதி சனீதா பற்றீசியா ஜெபரட்ணம் தனது கடமைகளை இன்று (நேற்று) பொறுப்பேற்றார். மல்லாகம் நீதிபதி பாடசாலைக்கு வருகை தந்து, புதிய அதிபர் மற்றும் பழைய அதிபர், பாடசாலை மாணவிகளுடன் கலந்துரையாடல் நடத்தினார். மாணவிகள் கற்றல் நடவடிக்கையைத் தொடர்வதற்கு உறுதியளித்தனர்.

பழைய அதிபர் தனது பொறுப்புக்களை திங்கட்கிழமை கையளிப்பதாகவும், உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இந்த மாத இறுதிக்குள் வெளியேறுவதாகவும் தெரிவித்தார். நீதிபதி பெற்றோருடன் சந்திப்பு நடத்தினார். இதன் போது மாணவிகள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்பதையும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார் பேராயர். (வ-5-37)

# பொலிஸார் மாணவிகளை படம் எடுத்ததால் குழப்பம்

யாழ்ப்பாணம், செப். 9

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளையும், செய்தியாளர்களையும் சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒளிப்படம் எடுத்தார். எங்கள் பிள்ளைகளை ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று பொலிஸாரின் அலைபேசியை மறைத்தபோதும், அதனையும் மீறி அவர் தொடர்ந்தும் ஒளிப்படம் எடுத்தார். இவ்வாறு குற்றஞ்சாட்டினர் மாணவிகளின் பெற்றோர்.

ஒளிப்படம் எடுத்த போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக, செய்தியாளர்களினால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரியில் கடந்த சில தினங்களாக போராட்டம் இடம்பெற்று வந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம் பாடசாலைச் சூழலில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். பாடசாலைக்குள் இருந்து திடீரென மாணவிகள் சிலர் அழுது கொண்டு பாடசாலை வாயில் கதவை நோக்கி ஓடி வந்தனர்.

இதன் போது பொலிஸார் பாடசாலை வாயிற் கதவை மூடி வைத்தனர். பாடசாலைக்கு வெளியில் நின்றிருந்த மாணவிகளின் பெற்றோர், தமது பிள்ளைகளை வெளியில் விடுமாறு பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்தில் பொலிஸார் வாயிற் கதவை திறந்து விட்டனர்.

மாணவிகள் தமது பெற்றோருடன் செல்ல முற்பட்டபோது, வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் தனது அலைபேசியில் மாணவிகளை ஒளிப்படம் எடுத்தார். பெற்றோரும், மாணவிகளும் ஒளிப்படம் எடுக்க வேண்டாம் என்று திரும்ப திரும்பச் சொல்லியும், அதனைக் கேளாமல் அவர் ஒளிப்படம் எடுத்தார்.

இதனை சம்பவ இடத்தில் நின்றிருந்த செய்தியாளர்கள் ஒளிப்படம் எடுத்தனர். மாணவிகளை ஒளிப்படம் எடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் செய்தியாளர்களையும் ஒளிப் படம் எடுத்தார். பொலிஸார் ஒளிப்படம் எடுத்த விடயம், மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை, ஊடகவியலாளர்களான தம்மை ஒளிப்படம் எடுத்தமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் எல்.எச்.ஆர்.ரங்கன (87135) என்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராகச் செய்தியாளர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்தனர். (வ-5-37)

# தென்மராட்சி வயல்களில் வெடிபொருள்கள் மீட்பு

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்காகத் துப்புரவு செய்த வயல்களில் வெடிக்காத நிலையில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. அவை சாவகச்சேரி நீதிவானின் பணிப்பின் பேரில் சிறப்பு அதிரடிப் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன.

நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டுவில் பகுதி வயலில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்காகத் துப்புரவுப் பணிகள் மேற்கொண்ட வேளையில், அங்கு வெடிக்காத நிலையில் கைக்குண்டு காணப்பட்டது. வயல் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் [illegible] பெற்று அதனை [illegible] செய் தனர். நேற்றுமுன்தினம் கேரதீவு அறுகு வெளிப் பகுதியில் உள்ள 14 ஏக்கர் நெல் வயல்களில் படையினரின் முகாம் அமைந்திருந்ததால், துப்புரவு செய்யப்படாமல் காணப்பட்ட 3 ஏக்கர் வயலில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்காக [illegible] துப்புரவு செய்யப்பட்டது. அவ் வேளையில் வெடிக்காத நிலையில் இரண்டு எறிகணைகள் காணப்பட்டன. வயல் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்திருந்தார். அங்கு சென்ற பொலிஸார் துப்புரவு செய்வதை இடைநிறுத்தி, அங்குபாதுகாப்பை ஏற்படுத்திவிட்டுச் சென்றனர். இது தொடர்பாக பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றின் அனுமதியுடன் வெடிப்பொருள்களை செயலிழக்கச் செய்தனர் (வ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கைத்தொழில் கண்காட்சி நேற்று ஆரம்பம்

வடக்கு மாகாணக் கைத்தொழிற் கண்காட்சி நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது. வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களமும், கைத்தொழிற்றுறை திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்காட்சி மூன்று நாள்கள் நடைபெறுகிறது. அதன் ஆரம்ப வைபவம் நேற்று நடைபெற்றது. கண்காட்சியை வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் நாடாவெட்டி ஆரம்பித்துவைத்தார்.



உருக்குவார்ப்பு, பனையோலைப் பொருள்கள், சிரட்டையில் செய்யப்பட்ட பொருள்கள், சத்துணவுப் பொருள்கள், நெசவு உற்பத்திப் பொருள்கள், மண் பாண்ட பொருள்கள், சிற்பப்பொருள்கள், பல்வேறு உணவுப் பொருள்கள், அழகியல் பொருள்கள் எனப் பல உற்பத்திப் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப் பட்டிருப்பதோடு, இதில் பங்குப்பற்றிய உற்பத்தியாளார்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்திஆனந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் இணைப்புச் செயலாளர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜெயதிலக, மயூரன், இந்திரராஜா, வட தொழிற் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கம், வடக்கு முதலமைச்சரின் செயலாளர் திருமதி கேதீஸ்வரன், வவுனியா மாவட்டச் செயலாளர் றோகண புஸ்ப குமார, நெடுங்கேணி உதவிப் பிரதேச செயலாளர், பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், கிராமப்புற, நகர்ப்புற உற்பத்தியாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

"கைத்தொழிற் திணைக்களத்தினர் வடமாகாணத்தில் சிறிய மற்றும் நடுதர உற்பத்தியாளர்களை ஊக்குவித்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உற்பத்தியை மேற்கொண்டு வரும் இந்த உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிப்போம். இன்று வடக்கு மாகாண கைத்தொழிற்றுறை சார்ந்தவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை சந்தை வாய்ப்புத் தான். எந்தளவு பொருள்களையும் உற்பத்தி செய்து கொண்டுபோகலாம். அதற்குரிய சந்தைவாய்ப்பு இல்லையென்றால், அந்த உற்பத்திப் பொருள்களால் எந்தப் பயனும் இல்லை. சந்தை வாய்ப்பை எவ்வாறு பெறலாம் என்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அண்மையில் கனடாவில் இருந்து வந்தவர்கள் எமது உற்பத்திப் பொருள்களைக் கனடாவில் சந்தைப்படுத்த முன்வந்திருந்தார்கள். இது போன்று பலரும் முன்வரவேண்டும் என்பது தான் எனது வேண்டுகோளாகும்" என்று நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார். (வ-21,402)


## யாழ்ப்பாணம் மாநகர சபை பாதீடு -2017 இற்கான அபிவிருத்தி முன்மொழிவுகள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பாதீடு - 2017 இற்கான அபிவிருத்தி முன்மொழிவுகள் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்கள் சேவைக்கான விடயத் தலைப்புக்களில், யாழ்ப்பாணம் மாநகரசபைப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி முன்மொழிவுகளை பிரேரிப்பவர், அபிவிருத்தி நடைபெறவேண்டிய வட்டாரம், கிராம சேவையாளர் பிரிவு என்பவற்றுடன் 2016.09.21 ஆம் திகதிக்கு முன்னர் "**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "**யாழ்ப்பாணம் மாநகர சபை பாதீடு - 2017 முன்மொழிவு**" என குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

விடயத் தலைப்புக்கள்:
1. மாநகர எல்லைக்குட்பட்ட அபிவிருத்தியும் உட்கட்டுமானமும்
2. நகர திட்டமிடல்
3. திண்ம கழிவு முகாமைத்துவமும் சூழல் பாதுகாப்பும்
4. நீர் விநியோகமும் கழிவு நீர் அகற்றலும்
5. வீதிகள், வடிகால்கள், வாய்க்கால்கள், குளங்கள் புனரமைப்பு
6. தெரு விளக்குகள் அமைத்தல்
7. நூலகங்கள், கல்வி மற்றும் கலாசார மேம்பாடு
8. பொது சுகாதாரமும் சுகாதார நல மேம்பாடும்
9. பொழுதுபோக்கு அம்சங்களும் ஓய்வு வசதிகளும்
10. சபையின் வருமான மூலங்கள்

**குறிப்பு:**
பிரேரிக்கப்படும். முன்மொழிவுகளிலிருந்து வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தேவைக்கான முன்னுரிமை வரிசையில் மாநகர சபையால் தெரிவு செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்களே 2017 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் உள்ளடக்கப்படும். பாதீடு அமுலுக்கு வருமுன்னர் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

**ஆணையாளர் யாழ்.மாநகரசபை**

(G/26118/10.18)



## காணி விற்பனைக்கு

நல்லூர் சட்டநாதர் வீதியில் 3 பரப்புக் காணியும், 2பரப்பில் அமைந்துள்ள வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 703 7058



## சேவை நலன் பாராட்டு

Congratulations

திருமதி
**தில்லைநாயகி திலகசுந்தரராஜா**
(தரம் I தாதிய உத்தியோகத்தர்)

யாழ் போதனா வைத்தியசாலையில் 34 ஆண்டு காலமாக தாதிய சேவையை திறம்பட ஆற்றி இன்று மணிவிழாக் காணும் இவரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எல்லாம்வல்ல இறைவனின் அருள் இவருக்கு கிடைப்பதாக என்றும் வாழ்த்தி நிற்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1295
சீட்டிழுப்பு திகதி 2016.09.08

வெற்றி இலக்கங்கள்
04 06 13 57 A

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 23,972,660/=



## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 547
சீட்டிழுப்பு திகதி 2016.09.08
வியாழக்கிழமை

29 48 50 64 H

சுப்பர் ஜக்பொட்
ரூ.49,183,300/=
வெல்லப்படவில்லை



## மதுரா அழகுக்கலைப்பயிற்சி நிலையம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 12.09.2016
டிப்ளோமா கோர்ஸ்

பிறைடல் மேக்கப் (20), சாறிரொப்பிங் (10), பிறைடல் டிரெஸ்சிங் (6), பேசியல் (20), ஸ்ரெயிட்னிங், பேமிங், கேளிங், பிளக்ஸ்பொட்ட றீட்மென்ட், ஹெயார் (கலறிங் ஹென்னாட் றீட்மென்ட், டையிங், ஒயில்மசாஜ்) பிம்பிள்ட்றீட்மென்ட், மெசினறி ட்றீட்மென்ட் (3வகை), திரெட்டிங் வக்ஸிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில்ஆட், மெகந்திடிசைன் ஸ்கீன்அனலை சிங், டான்டப்ட்றீட்மென்ட், ஹெயார்செற்றிங், ஹெயார்ஸ்ரைல்(15) ஆகியன மேலும் தையல், கேக்ஐசிங் ஹான்ட்வேர்க், சாறிவேர்க் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

077 9362642



## பணியாளர் தேவை

சுப்ப மாக்கற்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.
ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**01) காசாளர்**
**02) விற்பனை உதவியாளர்**

தங்கள் சுயவிவரங்களை பின்வரும் முகவரிக்கு 15.09.2016 இற்கு முன் தபாலில் அனுப்பி வைக்கவும்.
(யாழ் மாநகர சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

பாரிராஜ்
இல.344, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## பதவி வெற்றிடங்கள்

**வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் (வ/து)**

**வடமராட்சிகிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் பின்வரும் பதவி வெற்றிடத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பதவி - கணக்காளர்**
**பதவி குறியீட்டு இல - 104/10**
**சம்பள அளவு - ரூபா.15305 - 170 X 10 - 190 X 10 - 18905**

### அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு பணியாளர் 11 ஆவது சம்பளதிட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 12 ஆவது சம்பளதிட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவி யொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திர சித்தி/கூட்டுறவுத்திணைக்களத்தினால் நடாத்தப் பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் இரண்டு (02) ஆண்டுக்கால அனுபவம் அல்லது க.பொ.த உயர்தராதரப்பத்திரபரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட மூன்று (03) பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் ஆகக்குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

வயது - 2016 செப்ரெம்பர் 28 ஆம் திகதியில் 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொது நியந்தனைகள்**

* **உள்ளக விண்ணப்பதாரிகளிற்கு மேற்குறிப்பிட்ட உச்சவயதெல்லைகள் ஏற்புடையதாகாது.**
* **வடமராட்சிகிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச எல்லைப்பரப்பில் நிரந்தர வதிவிடம் கொண்டவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.**
* **கூட்டுறவு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தாங்கள் பணியாற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.**

விண்ணப்பதாரிகள் தாங்களாவே விண்ணப்படிவங்களை தயாரித்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவங்களை தலைவர்/பொதுமுகாமையாளர் வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் பிரதான வீதி தாளையடி என்னும் முகவரிக்கு 28.09.2016 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். உங்களது தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்/பொதுமுகாமையாளர்
வடமராட்சி கிழக்கு.
கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
பிரதான வீதி, தாளையடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 9
நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆன்மிக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
நிகழ்வில் அடிப்படை மனித உரிமைகள் சட்டக்கல்வி பயிற்றுவிப்பாளர் வி.சுமதீஸ்வரனின் பஜனையும், சித்தமெல்லாம் சிவம் என்னும் தலைப்பில் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ க.சுமுக லிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன. (ற-ரி)

## விபத்தில் சிக்கியவருக்கு உடன் உதவி செய்ய முன்வரவேண்டும்

### வைத்தியர் ஜமுனாநந்தா அறிவுரை

யாழ்ப்பாணம், செப்.9
விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக உதவி செய்யும் மனநிலையை நாம் அனைவரும் உருவாக்க வேண்டும். அதனால் பெறுமதி மிக்க உயிர்களை காப்பாற்றலாம்.
இவ்வாறு யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவு பொறுப்பதிகாரி வைத்தியர் ஜமுனாநந்தா தெரிவித்தார்.
கடந்த சில தினங்களுக்கு முன்னர் கோப்பாய் பகுதியில் விபத்தில் உயிரிழந்த வைத்தியர் தங்கராஜா செந்வரனின் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் தாதியர் பயிற்சிக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் அஞ்சலியுரை யாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது–
விபத்து நடைபெற்றால் யாரும் அருகில் சுவப்போவதில்லை. சாட்சி சொல்ல வேண்டும் என்ற பயமே காரணம். அவ்வாறு இருக்காது காயப்பட்டவருக்கு உடன் முதலுதவி செய்யுங்கள். அவரைக் காப்பாற்றலாம். பொலிஸாருக்குப் பயப்படத் தேவையில்லை. அதற்கான பொறுப்பை நாங்கள் எடுக்கின்றோம். இன்று நாங்கள் வைத்தியர் செந்வரனை இழந்துள்ளோம். அன்று அவருக்கு சிறிய முதலுதவி உடனடியாக செய்திருந்தால் அவரைக் காப்பாற்றியிருக்கலாம். காயமடைந்த ஒருவருக்கு உடனடியாக உதவி செய்யும் மன நிலையை நாங்கள் எல்லோரும் வளர்க்க வேண்டும் – என்றார். (ற-ரி7)

## மாங்கல்ய தாரண விவாஹ நிகழ்வு மாற்றம் பற்றிய முக்கிய அறிவித்தல்

அன்புடையீர்!

எமது **கனிஷ்ட புதல்வன் திருநிறைசெல்வன் நிருபசர்மா** அவர்களுக்கும், எமது **ஏக புத்திரி திருநிறைசெல்வி ஜெஹானு** அவர்களுக்கும் **14.09.2016 புதன்கிழமை** நடைபெற இருந்த மாங்கல்யதாரண விவாஹ நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வானது துர்முகி வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள் **16.09.2016 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.22** மணிவரையுள்ள கன்னி லக்கினமும் சதய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் கோண்டாவில் சந்திக்கருகில் அமைந்துள்ள **ராஜேஸ்வரி மண்டபத்தில்** நடைபெறும் என்பதனை அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் அறியத் தந்து நிகழ்வில் கலந்து மணமக்களை ஆசிர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாலை 6.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் இடம்பெறும்.

சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்
கௌரிபாலா - குடும்பத்தினர்
சிவன்கோயில், வல்வெட்டித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு)

திருமதி சிவபாதசர்மா நகுலாம்பிகை
அருளம்பலம் ஒழுங்கை,
கல்வியங்காடு, நல்லூர்.

(J.4438)(13.18)

## தேர்தல் ஆணைக்குழு

### வாக்கு உங்கள் உரிமை

### வாக்களிப்பதற்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

- 2016 வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் ஆரம்பப் பணிகள் தற்பொழுது முடிவடைந்துள்ளன
- அதற்குரிய ஆவணங்கள் 2016 செப்டம்பர் 01-28 ஆந் திகதி வரையில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்படும்
  - ஒவ்வொரு மாவட்ட செயலகம்/ மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்
  - ஒவ்வொரு மாகாண பிரதான செயலாளர் அலுவலகம்
  - ஒவ்வொரு பிரதேச செயலகம்
  - ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனம்
  - ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம்
- உங்கள் பெயர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவெனப் பரிசீலித்துப் பார்த்து, பதிவு செய்யப்படவில்லையாயின் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- தகைமை இல்லாத ஒருவர் ஏதேனும் வீடொன்றின் கீழ் பதிவு செய்யப்படுவதற்காக கணக்கெடுக்கப்பட்டிருப்பின் உங்களுக்கு ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும்

உரிமைக் கோரிக்கை சமர்ப்பிப்பது அல்லது ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வாறு?

- விண்ணப்பப் படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட காட்சிப்படுத்தும் இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்
- உங்கள் விண்ணப்பப்படிவத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2016 செப்டம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னதாக உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

2016 தேருநர் இடாப்பில் உங்கள் பெயரை உட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாவென்பதை தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் தேருநர் இடாப்பு (வரைவு) ஊடாக பரீட்சித்துப் பார்க்க முடியும். அதற்காக தங்களுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், மாவட்டத்தையும் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் உட்சேர்த்தல் அவசியமானதாகும்.

தொலைபேசி இல 011-2868441,42,43
மின்னஞ்சல் info@elections.gov.lk
இணையத்தளம் www.elections.gov.lk

எச்.எம்.ரீ.டீ.ஹேரத்
செயலாளர், தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய
2016.09.09.

### மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872247 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2867472 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

சரியாகப் பதிவு செய்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
DMI COMPUTER EDUCATION
புதிய பிரிவு ஆரம்பம்
பிரிவு 1 - 10/9/2016 (Sat) 9:30 a.m.
பிரிவு 2 - 12/9/2016 (Mon) 9:30 a.m.
IT & English Diploma
Dip.in Information Technology
Dip.in Office Automation
Dip.in PC Application
Dip.in Microsoft Office
Dip.in Web Designing
Hardware , Mulitmedia
யாழில முதன்மை நிலை வகிக்கும் Spoken English
அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
Microsoft Online பரீட்சைகளூடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
இலகு தவணைக்கட்டண வசதிகள். ஆங்கிலம், இந்திய பாடநூல்கள்.
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, (பஸ்நிலைய தேநீர் ஆகாரம்) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19,A9 வீதி, (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655

YARL MOTHER CARE
நான்காம் ஆண்டில் உங்கள் சேவையில்!
09.09.2016
எமது சேவைகள்
1. சகல வைத்திய நிபுணர்களின் சேவைகள்
2. (Scan) "ஸ்கான்" & (Echo) "எக்கோ" வசதிகள்
3. (E.C.G) "ஈ.சி.ஜி" வசதிகள்
4. X-ray (எக்ஸ்றே)
5. சகல ஆய்வுகூடப் பரிசோதனைகள்
6. புற்றுநோயைக் கண்டறியும் பரிசோதனை (FNAC & PAP Smear)
யாழ் மதர் கெயார்
YARL MOTHER CARE
MEDICAL SPECIALIST
CONSULTATION CLINIC
இல. 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 221 9595 / 021 221 9797
021 222 9521
(பதிவு இல.85754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்புக்கு வடக்கில் இருந்தே 80 வீதம் அச்சுறுத்தல்

## அதனால் அங்கு இராணுவம் வேண்டும் என்கிறார் கம்மன்பில



கொழும்பு, செப். 9
இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு வடக்கிலிருந்தே 80 சதவீதமான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. எனவே வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தை நிலைக்கொள்ளச் செய்யவேண்டும்.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். தூய்மையான ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இலங்கைப் பயணத்தின்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் நடமாட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அதற்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மூன்று மாதங்களுக்குள் அந்தச் செயற்பாட்டை விரைந்து முன்னெடுப்பதாக வாக்களித்துள்ளார். தெற்கில் இனவாதிகளினால் இராணுவத்தை அகற்றும் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படக்கூடும். அதனால் படிப்படியாக அந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.
ஜனாதிபதி முக்கிய விடயத்தைக் கவனிக்கத் தவறியுள்ளார். இலங்கைக்கு வடக்குப் பகுதியிலிருந்தே 80 சதவீதமான எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன. எனவே வடக்கில் இராணுவம் நிலைகொள்ள வேண்டியது மிக அவசியமானது. அத்துடன் வடக்கில் மக்கள் தொகையும் குறைவாக உள்ளதால் இராணுவ முகாம்கள் அமைக்க வடக்கே பொருத்தமான பகுதியாக அமையும் - என்றார். (த-5)

## யாழ். பன்னாட்டுத் திரைப்பட விழா எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.9
யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை, சிலோன் தியேட்டர்ஸ், அஜன்டா 14 என்பன இணைந்து யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழாவை இரண்டாவது தடவையாக எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடத்தவுள்ளன.
அனைத்துலக ரீதியாகப் பாராட்டப்பட்ட தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அவர்களது திரைப் படங்களை யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
விழாவின் இரண்டாவது வெளியீட்டில் ஏறக்குறைய 25 நாடுகள் பங்குபற்றவுள்ளன. விருதை வென்ற மற்றும் விமர்சனபூர்வமாக பாராட்டப்பட்ட சுமார் 70 ஐரோப்பிய, ஆசியத் திரைப்படங்களைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மூத்தவர்களைக் கௌரவித்தல் மற்றும் இளந்தலைமுறையை ஊக்குவித்தல் என்ற வகையில் யாழ். பன்னாட்டுத் திரைப்பட விழாவானது மூன்று விருதுகளை முதலாவது வெளியீட்டின் தொடர்ச்சியாக இந்த முறையும் வழங்கவுள்ளது. இந்த முறை வாழ்நாள் சாதனையாளர் விருது கே.பி. கே. பாலசிங்கத்துக்கு வழங்கப்படவுள்ளது.
கே.பி.கே பாலசிங்கம் இலங்கையின் மிக மூத்த திரைப்பட ஒலிப்பதிவாளர்களுள் ஒருவர். இலங்கையில் எடுக்கப்பட்ட அனேக திரைப்படங்களுக்கான ஒலிப்பதிவை அவரே மேற்கொண்டுள்ளார்.
இலங்கையிலிருந்தும் மற்றைய நாடுகளிலிருந்தும் காட்சிப்படுத்தப்படவுள்ள 12 அறிமுகத் திரைப்படங்கள் மிகச்சிறந்த அறிமுக திரைப் படத்துக்கான திறனாய்வு விருதுக்காகப் போட்டியிடுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள பார்வையாளர்கள் இந்த விழாவின்போது அவர்களுக்கு விருப்பமான குறும்படத்தைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஜ)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.9
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மறவன் புலோ - கேரதீவு வீதி, கோகிலாக்கண்டி ஆகிய இடங்களிலும் - வவுனியாவில் சாம்பல் தோட்டம் கிராமம், தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட்செட்வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன் காடு பிள்ளையார் கோயில் வரை, சமணன் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரையான இடங்களிலும்,
மன்னாரில் முதலைக்குத்தி பிரதேசம், சிறுநாவற்குளத்திலிருந்து நறுவிலிக்குளம் வரைக்கும், வங்காலை, தோமஸ்புரி, பாஸ்திபுரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (ஜ-ற)

வேலையாள்கள் தேவை
எமது கொழும்பு நிறுவனத்தில் வேலைக்கு ஆள்கள் தேவை. O/L, A/L படித்த, வேலை பழக விருப்பமுள்ளவர்கள் தேவை. தெளிவான கையெழுத்தும், எலக்ரோனிக்ஸ் துறையில் நல்ல ஆர்வமும் உள்ள 25 வயதுக்கு உட்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அடிப்படைச் சம்பளம் 20,000 இல் இருந்து கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம்.
Kumar - 077 771 0785
SATS Tech Engineer's
No: 51/102, wolfendhal Street, Colombo - 13

SB TRAVELS AND TOURS (PVT) LTD
212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Indian Visa Online
விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்கு 100/= மட்டுமே.
இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும், வீசாக்களையும் மிகச் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியாவுக்கான வீசாக்கள் வெகு விரைவிலும், மலேசியா மற்றும் பல நாடுகளுக்கான விசாக்களும் பயணக்காப்புறுதி (Travel Insurance). Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும், விசா ஆலோசனைகளும் வழங்கப்படும்.
021 222 7 111
021 222 7 666
021 222 8 555
021 222 9 555
076 691 1080,81,82,83
sbtravels212@gmail.com
sbtravelsjaffna@gmail.com
www.sbtravels.lk / sbairfares.com
(C/26101) (10.18)




புத்தூர் மேற்கு ஆலடி முருகன் ஆலய கட்டட நிதிக்காக நடத்தும் மாபெரும்
நடனப் போட்டி
இடம்: கலைமதி உதைப்பந்தாட்ட மைதானம்
காலம்: 10.09.2016 சனிக்கிழமை பி.ப 7.00 மணி
நடுவர்: பொன்ராசா கிரிசாந் (D.A)
(டான் தொலைக்காட்சியின் டான்ஸ் டான்ஸ் நிகழ்ச்சித் தொகுப்பாளர்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விழாக்குழு
அருள்மிகு ஆலடிமுருகன் தேவஸ்தானம்,
புத்தூர் மேற்கு, புத்தூர்.
(J 4409) (13.18)

பொன்விழா வாழ்த்து


விஜயசிங்கம் தயாபாலன்
(சிரேஷ்ட ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி)
அவர்களின் பொன்விழா வாழ்த்து
மனம் முழுதாளும் மெய் யன்பால்
தினம் முகமலரும் புன்னகை யால் - இத்
தினம் அகவையம்பதிலும்
மனதா லவன் சிறுபாலன்
வரணிக் கவிஞர் ஸ்ரீ (அதிபர்)
வாழ்த்துவோர்: தயாபொன் விழாச்சபை
யாழ்ப்பாணம்

பணியாளர்கள் தேவை
ஜனா சிவில் வேக்ஸ் கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.
- பொறியியலாளர் (Civil Engineer)
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (NCT, NDT or Equal)

◆களஞ்சியக் காப்பாளர் ◆மேசன் தொழிலாளர்கள் ◆கூலித்தொழிலாளர்கள் ◆தச்சுவேலைத் தொழிலாளர்கள் ◆சட்டறிங் தொழிலாளர்கள் ◆கம்பி கட்டல் தொழிலாளர்கள் ◆சமையல் தொழிலாளர்.
மேலுள்ள பணியாளர்கள் உடன் தேவை.
எதிர்வரும் சனி, ஞாயிறு கிழமைகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நேரில் வரவும்.
(சம்பள விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)
தொடர்பு:- 021 226 2077, 077 600 0970
Email : jeyaratnamr@yahoo.com
பணிப்பாளர்,
ஜனா சிவில் வேக்ஸ், யாழ்.பருத்தித்துறை வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.

தேவை
கெயார் சர்வதேச நிறுவனத்தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பிற்பகுதியில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள 3 நாள் கலாசார கலைவிழாவில் இலங்கையின் பாரம்பரிய உணவு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்யக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
077 305 3004, 077 168 9360

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்


மஜெஸ்டிக் ப்ளாட்டினம்: 10.00 a.m / 1.00 p.m, 4.00 p.m / 7.00 p.m
ப்ரொன்ஸ்: 10.30 a.m / 1.30 p.m, 4.30 p.m / 7.30 p.m
Fri/Sat/Sun 9.30 p.m


சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை ☎ 021- 2227712
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு உயிர் தந்து எம் நினைவாய் வாழும் தெய்வத்திற்கு

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜெனனம் 03 ★ 04 ★ 1959



ஜெகதீபமாய் 03 ★ 09 ★ 2003

### அமரர் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

திதி: பூர்வபக்க அட்டமி (09.09.2016)

காலனவன் உம்மை
எம் உயிரில் இருந்து
பறித்து ஆண்டுகள்
பதின்மூன்று ஆனதையா!
எம்மோடு உம் நினைவுகள்
கண்ணீர்த் துளிகளாய்
என்றும் கலந் திருக்கும்
எம் உயிரோடு

நீர்பெற்ற பூக்கள் நான்கும்
வாழ்வைப் பெற்று நிற்கின்றன
அதைப் பார்த்து கண்குளிர
எம் அருகில் நீர் இல்லையே!

வாழ்க்கை என்னும் பாதையிலே
வழிகாட்ட எம் அருகில் நீர் இல்லை - ஆனால்
வானில் இருந்து நல்லதோர் ஆசானாக
எம் வாழ்வில் வழிகாட்டுவீர்

எம் சுமைகள் நீர் சுமந்தீர்
வலிகள் இன்றி வாழ்ந்திருந்தோம் - இன்று
உம் நினைவுகளை நாம் சுமந்து
மனைவியாய் பிள்ளைகளாய் மருமக்களாய்
உம் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (J.4415)(13.18)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

## 31ஆம் நாள் நீங்கா நினைவலைகளும் நன்றி நவிலலும்

மண்மகிழ 17.04.1930

கண்நெகிழ 10.08.2016



### அமரர் நாகம்மா கதிரவேலு

(சத்திரந்தை, களபூமி, காரைநகர்)

கடந்த 10.08.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த மற்றும் அஞ்சலி, ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் ஈழத்துச் சிதம்பரப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

(V698/10.18)

இல.29/06,
மாடசாமி கோயில் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தேசிய அரசே தொடரும்

## ஐ.தே.க. - சு.க. தனித்து போட்டியிட்டாலும்

கொழும்பு, செப். 9

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்வரும் ஐந்து வருடங்களில் அனைத்துத் தேர்தல்களிலும் தனித்துப் போட்டியிட்டாலும், தேர்தலின் பின்னர் இணக்கப்பாட்டுடன் கூடிய தேசிய அரசே தொடரும் என்று நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக அமைச்சர் கயந்த கருணா திலக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டது. அதே வேளை, தேசிய அரசின் பிர தான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த மாநாடுகள் இணக்கப்பாட்டு அரசியலைப் பிரதிபலிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் கலந்து கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனா கலந்து கொள்ளவுள்ளார். இதுதான் நாம் நாட்டு மக்களுக்குக் கொடுக்கும் இணக்கப்பாட்டுச் செய்தி.

தேர்தலின்போது நாங்கள் தனித் தனியாகப் போட்டியிடவும் பின்னர் இணக்கப்பாட்டு அரசியலைத் தொடரவும் மக்களுக்கு உத்தரவாதம் அளித்தோம். இரண்டு கட்சிகளும் இணைந்து ஒரு வருடம் தேசிய அரசு நடத்திக் காட்டியுள்ளோம் - என்றார். (த-5)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் காயம்

வீதியில் பயணித்த டிராக்டருடன் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் சாவகச்சேரி பெரிய அரசடி ஏ-9 வீதியில் நடைபெற்றது.

கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த பெற்றோர் தமது 19 வயது மகனுக்குப் பல்சர் மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் புதிதாகக் கொள்வனவு செய்து வழங்கினர்.

புதிய மோட்டார் சைக்கிளுக்குப் பொருத்துவதற்கு சாவகச்சேரியில் பொருள்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் போது வீதியில் பயணித்த டிராக்டருடன் விபத்து ஏற்பட்டது. காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ந-9)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் வெள்ளருவைப் பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த

பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் கந்தராஜேஸ்வர சர்மா

அவர்கள் இறைதியடைந்தமையையிட்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.



வெள்ளருவைப் பிள்ளையார் ஆலய திருப்பணிச் சபை. (ஜே/4435)(11.18)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம் கந்தையா

(களப்பாறிய தபாலதிபர் - கோப்பாய்)

தோற்றம் 18.04.1907

மறைவு 02.09.1995



திதி:
ஆவணி மாத பூர்வபட்ச அட்டமி
(09.09.2016 வெள்ளிக்கிழமை)

எம் அருமை அப்பாவே! இருபத்தொரு ஆண்டுகள் கடந்தாலும்
எங்களது இதயத்தில் உங்கள் நினைவை நிறுத்தி
உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

க.குலராசன் (மகன்),
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (ஜெ.4433)(11.18.)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப்.9

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள சத்திய சாயி சேவா நிறுவனத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு குருதிக்கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருதிக் கொடை வழங்க விரும்பும் கொடையாளிகள் கலந்து கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-ரி)

## அனுமதிப் பத்திரம் இன்றி விறகுகள் ஏற்றியோருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், செப்.9

அனுமதிப் பத்திரம் இன்றி விறகுகளை ஏற்றிச் சென்ற இருவருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது மல்லாகம் நீதிமன்று. விறகை அரசுடைமையாக்குமாறும், வாகனத்தை பதிவு பெற்ற உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் சுன்னாகம் பொலிஸாருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

கந்தரோடைப் பகுதியில் கடந்த வாரம் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் வாகனம் ஒன்றைச் சோதனையிட்டனர். அதில் அனுமதிப் பத்திரம் இன்றி விறகுகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. அதிலிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர். (ந-5,107)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 10.08.2016 அன்று
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்

அமரர் வைரமுத்து சிவலிங்கம்

தோற்றம் 12.05.1939

மறைவு 10.08.2016

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.09.2016) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. 077 340 8388 குடும்பத்தினர். (ஜெ4432)(17.18)

## குடும்பஸ்தர் கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப்.9

மல்லாகம் முகாமில் குடும்பத் தலைவர் ஒருவர் பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைது செய்யவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெல்லிப்பழைப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

கடந்த 6ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இரு பிள்ளைகளின் தந்தையான தேவராசா உதயகுமார் (வயது-37) பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். உறவினர்கள் இடையே ஏற்பட்ட கைகலப்பாலேயே இந்தக் கொலை இடம் பெற்றது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ந-5,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநலம் பாதித்த ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் 342 பேர்

## வடக்கு கல்வித் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், செப்.9
வடக்கு மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் 342 பேர் உளநலம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

அவர்கள் வடக்கிலுள்ள 12 கல்வி வலயங்களிலும் கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கான உளநலச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

உள நலச் சிகிச்சை பெறும் ஆசிரியர்கள் தற்போதும் சேவையில் உள்ளனர். அவர்களைக் கற்பித்தலில் இருந்து ஒதுக்குவதோ அல்லது தற்காலிகமாக நிறுத்தவோ முடியாத நிலைமை காணப்படுகின்றது. வைத்தியர்கள் அவ்வாறு செய்ய முடி யாது என்று அறிக்கையிடுகின்றனர். அதனால் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றை நாட முடியாத நிலைமை காணப்படுகின்றது- என்று கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ற-5,101)

## முகநூல் ஆசாமி வசமாகச் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப்.9
சமூக வலைத்தளமான முகநூல் மூலம் ஆள்மாறாட்டம் செய்த ஆசாமி பொலிஸாரிடம் சிக்கினார். பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர என தன்னை முக நூலில் அடையாளப்படுத்திக் கொண்டு, பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். நியூசிலாந்தைச் சேந்த இலங்கையரான சந்தேகநபர் கடந்த திங்கட்கிழமை பண்டராயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த ஜூலை மாதம் கண்டியில் வசிக்கும் பெண் ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து, குற்றவியல் புலனாய்வு துறையினர் விசாரணையை ஆரம்பித்தனர். நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபரை, இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ-ரி4)

## வித்தியானந்தாக் கல்லூரியில் சிரமதானம்

முல்லைத்தீவு, செப்.9
முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நாளை சிரமதானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரும், பழைய மாணவர் சங்கத்தினரும் தெரிவித்தனர். காலை 8 மணி முதல் நண்பகல் வரை சிரமதானம் நடைபெறும்.

தேவையான உபகரணங்களுடன் வந்து பங்களிப்பு வழங்குமாறு அனைத்துப் பழைய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-5,ரி7,102)



'வீட்டுக்கு வீடு மரம்' என்ற தொனிப் பொருளில் நேற்றுமுன்தினம் மரம் நடுகை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரங் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலில் நாடு முழுவதும் ரீதியில் இந் தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திட்டத்தின் இரண் டாவது நிகழ்வை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ரொசான் தமீம் ஆரம்பித்து வைத்தார். (ற-5,32)

## யாழ். மாவட்டத்தில் நான்கு படகுத்துறைகள் உருவாகும்

### கடற்படை உதவியுடன் நடவடிக்கை ஆரம்பம் எனக் கப்பல்துறை அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.9
யாழ்.மாவட்டத்தில் கடற்படையின் உதவியுடன் 4 படகுத்துறைகள் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சின் ஊடகத் துறை அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது: குறிகாட்டுவான், நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் படகு நிறுத்துவதற்கான படகுத்துறைகள் முன்னைய காலங்களில் இருந்தன. பிற்காலத்தில் அவை ஒழுங்காக முறையில் பேணப்படவில்லை. கடற்படையின் முழுமையான ஒத்துழைப்புடன் அனைத்துப் படகுத்துறைகளையும் நிர்மாணிப்பதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

அனலைதீவு படகுத்துறையை தற்போது அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று வடமாகாண கட்டளைத் தளபதிரியர் அட்மிரல் பிரியால் டி சில்வா தெரிவித்தார். அதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எழுவைதீவு, அனலைதீவு படகுத்துறைகள் ஆழமற்ற கடற்பகுதியில் அமைந்துள்ளன. குறைந்தபட்சம் 600 மீற்றர் ஆழமுடைய பகுதியில் படகுத்துறைகளை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்படும் படகுத்துறைகளில் இருபுறங்களிலும் 10 படகுகளை நிறுத்த முடியும் - என்றுள்ளது. (ற-5)




இந்த வாரம் புதுவிதியில்...

● எதிரிகளும் புகழும் பிரபாகரன்

● உடுவில் மாணவிகளின் உண்ணாவிரதம் காரணம் என்ன?

● குறுக்கே போன ரயில்

உத்தராதேவிக்கு வந்த நித்திரை

குட்டீஸ்களுக்கு பரிசுப் பொதிகளை வெல்லும் வாய்ப்பு!

20/= மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெத்தப் படித்த மேதாவிகள் கூட்டமைப்புக்குள் வந்துள்ளனர்

## இப்படி யாரையோ இடித்துக் காட்டுகிறார் கிழக்கு விவசாய அமைச்சர்

மட்டக்களப்பு, செப். 9

சிலமெத்தப் படித்த மேதாவிகள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் வந்துள்ளனர். அவர்களை நாங்கள் எதற்கோ அழைத்து வந்தோம். அவர்கள் எங்கோ சென்று விட்டார்கள். அவர்களின் அறிவை - ஆற்றல்களை பயன்படுத்துவோம் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் வந்ததன் பின்னர் அவர்களுக்கு பதவி வெறி வந்துவிட்டது.

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது-

சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமெனில் நாட்டில் உள்ள பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் ஒன்றுசேரவேண்டும். எமது பிரச்சினைகளை அனுதாபத்துடன் நோக்கக் கூடிய பன்னாட்டு நிலை உருவாக வேண்டும். இவற்றையெல்லாம் செயல்முறைப்படுத்தக் கூடிய விதத்தில் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும். இந்த மிக முக்கியமான விடயங்களில் இரண்டு விடயங்கள் நடந் தேறிவிட்டன. இரண்டு பெரும்பான்மைக் கட்சிகள் ஒன்று சேர்ந்தன் காரணமாகவே நாட்டில் நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டது. நல்லாட்சி அமைவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகித்துள்ளது. இறுதி நேரத்தில் பலர் வந்துசேர்ந்த போதிலும் தெற்குத் தலைவர்களுடன் உழைத்தவர்கள் எமது தலைவர்களாகும்.

> “உலகில் எங்கும் அரசமைப்பு எழுதி நடைமுறைக்கு வந்தது கிடையாது. அரசமைப்பு நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட வேண்டும. எங்களுக்கு எதிரும் புதிருமானவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். எம்முடன் பேசுகின்றவர்களிடம் நியாயத்தைக் கூறி ஏற்றுக் கொள்ளும் நிலைமை ஏற்படுத்தப்பட்டு அரசமைப்பு எழுதப்பட வேண்டும். அதனையே இணக்கப்பாடு என்று கூறப்படுகின்றது. ஓர் உடன்படிக்கை ஏற்படும் போது அடுத்தவர்களின் மனப் பாங்கு எமது பிரச்சினையை உணர்ந்து செய்விக்க வேண்டும்.”

இன்று மகிந்தவும் ஒன்றுதான் மைத்திரியும் ஒன்றுதான் என்று மிகவும் இலகுவாக சொல்லி விடுகின்றோம். ஆனால் இன்றுள்ள நிலமையை பெறுவதற்காக எவ்வளவு பாடுபட்டோம் என்பதை நாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில் முடிவுகளைப் பெறுவதற்கு நெருங்கியபோது எல்லாம் அந்த இடங்களில் மிகவும் அவதானமாக கையாளாத காரணத்தால் நாங்கள் தொடர்ந்து போர்ச் சூழல்களுக்குள்ளும் உரிமைமறுப்புகளுக்கும்ஆளாக வேண்டிய நிலையேற்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் கூறினாலும் அதனைப்பெற்றுக்கொள்ளவேண்டுமானால் அரசமைப்பில் அது உள்வாங்கப்பட வேண்டும்.

சிலமெத்தப் படித்த மேதாவிகள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் வந்துள்ளனர். அவர்களை நாங்கள் எதற்கோ அழைத்து வந்தோம். அவர்கள் எங்கோ சென்றுவிட்டார்கள். அவர்களை வைத்து அவர்களின் அறிவை-ஆற்றல்களை பயன்படுத்துவோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் வந்ததன் பின்னர் அவர்களுக்கு பதவி வெறி வந்து விட்டது.

காலம் காலமாக தமிழினத்துக்குத் தன்னை அர்ப்பணித்த மாவை சேனாதிராசா வடமாகாண முதலமைச்சராக வந்திருக்க வேண்டியவர். பன்னாட்டுச் சமூகத்துக்கு மிகவும் பெறுமதியான செய்தியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே விக்னேஸ்வரனை அழைத்து வந்தோம். தனக்கு வரவேண்டிய பொறுப்பை மாவை. சேனாதிராசா இன்னொருவருக்குக் கையளித்தார்.

அவர் அந்தப் பொறுப்பை பெற்றுக் கொண்டபோது லட்சக் கணக்கான வாக்குகளால் அவரை வெற்றி பெற வைத்தோம். சம்பந்தன் ஐயா நீண்ட நேரம் கூட்டங்களில் கலந்து கொண்டு வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆனால் இன்று மெத்தப் படித்த மேதாவித்தனமாக அரசமைப்பு எழுதுகின்றாராம். உலகில் எங்கும் அரசமைப்பு எழுதி நடைமுறைக்கு வந்தது கிடையாது. அரசமைப்பு நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட வேண்டும். எங்களுக்கு எதிரும் புதிருமானவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எம்முடன் பேசுகின்றவர்களிடம் நியாயத்தைக் கூறி ஏற்றுக் கொள்ளும் நிலமை ஏற்படுத்தப்பட்டு அரசமைப்பு எழுதப்பட வேண்டும். அதனையே இணக்கப்பாடுஎன்று கூறப்படுகின்றது. ஓர் உடன்படிக்கை ஏற்படும் போது அடுத்தவர்களின் மனப் பாங்கு மற்றும் எமது பிரச்சினையை உணர்ந்து செய்விக்க வேண்டும்.

அரசமைப்பு புள்ளிகளைப் பெறுவதற்காக எழுதுவதில்லை. தோசை போடுபவர்களுக்கு எப்போது அதனைப் புரட்டிப் போடுவது என்று தெரிய வேண்டும் என்று தொண்டமான் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நுணுக்கமான தலைவரைப் பெற்றுள்ளது. அவர் மிகவும் நிதானமாக தமது செயற்பாடுகளை முன்நகர்த்தி வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஐ.நா. பொதுச் செயலாளரை எமது தலைவர்கள் சந்தித்துவிட்டு வரும்போது கூக்குரல் போட்டுள்ளனர். மிகச் சிறந்த தலைவர்களை இவ்வாறு ஏளனம் செய்துள்ளார்கள்.

காந்தியை சுட்டுக்கொன்றான் கோட்சே. காந்தி இருந்தால் இந்து மதம் அழிந்துவிடும் என்று அன்று கோட்சே கூறியிருந்தான். அப்படியானால் கேட்சேதானா இந்து மதத்தினை வாழவைக்க வந்தவன். கோட்சேயா, காந்தியா, சம்பந்தனா, சம்பந்தனை எதிர்த்து தேசியத்தை நேசிப்பதாக கூறிக் கொண்டிருப்பவர்களா என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வளவு காலம் கட்டிக்காத்த காந்தியை இந்தியா சுதந்திரம் பெற்ற கையோடு சுட்டுக் கொன்றீர்கள் என்று வெள்ளைக்காரர்கள் இந்தியாவினை விரல் நீட்டிக் கேட்டார்கள். கோட்சே தான் இந்து மதத்தினைக் கட்டிக் காத்தவனாகவும் காந்தியை இந்து மதத்தினை காட்டிக் கொடுத்தவராகவும் காட்டினார்கள்.

அதுபோலவே தமிழ் தேசிய கூட்டமைப்பும் அதன் தலைமைத்துவமும் தமிழர்களை காட்டிக்கொடுக்க நினைக்கின்றது என்று சிலர் மக்களை திசைதிருப்பப் பார்க்கின்றனர். இப்போது நாங்கள் பார்க்க வேண்டியது கோட்சேயா ? காந்தியா ?.

எங்களுக்கு தேவையான விடயங்கள் எல்லாம் இன்று வந்து கொண்டுள்ளன. அதனை அரசமைப்பாக உருவாக்குவதே இன்று எமக்குள்ள விடயமாகும். அரசமைப்பினை அவ்வாறு ஆக்குவதற்கு எமது தலைமைத்துவத்திற்கு நெருக்கடிகளை வழங்கக் கூடாது. மிகவும் கவனமாக, நிதானமாக, பொறுமையுடன் முன்னகர்த்த வேண்டும்.

முஸ்லிம் சகோதரர்களுடன் நாங்கள் பேச வேண்டும். எடுத்த எடுப்பிலேயே வடக்கு - கிழக்கு இணைப்பு வேண்டாம் என்று கூறுகின்றார்கள். எதற்கு வேண்டாம் என்று அவர்கள் கூறுகின்றார்கள் என்பது தொடர்பில் யோசிக்க வேண்டும். அதில் நாங்கள் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். நெருக்கடிகள் மற்றும் ஒன்று படாத கருத்துகளை செம்மைப் படுத்தி நீடித்து நிலைத்திருக்க கூடிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் - என்றார். (ற-5)

## கம்பியால் தாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.9

கைகலப்பில் இரும்புக் கம்பியால் தாக்கி ஒருவரின் இரு கை விரல்களைச் செயலிழக்கச் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்தார் மல்லாகம் நீதிவான்.

கடந்த மாதம் 27ஆம் திகதி அளவெட்டியில் உள்ள கோயில் ஒன்றில் இருவருக்கிடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினை அடிதடியில் முடிந்தது. அடிதடியில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டதில் ஒருவரின் இரு விரல்கள் செயலிழந்தன.

இது தொடர்பில் தெல்லிப்பளைப் பொலிஸார் 36 வயதான சந்தேக நபரை கடந்த 5ஆம் திகதி கைது செய்தனர். (ற-5,107)

## டெங்குக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பாடசாலை மாணவரும் உள்ளீர்ப்பு

தென்மராட்சி, செப்.9

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை மாணவர்கள் ஊடாகச் செயற்படுத்த நட வடிக்கை எடுத்துள்ளனர்.

முதற்கட்டமாக டெங்குத் தொற்று அதிகம் காணப்படும் பிரதேசத்தில் உள்ள ஐந்து பாட சாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 400 மாணவர்களுக்கு இது தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு டெங்குக் கட்டுப்பாட்டு அட்டைகள் வழங்கப்பட்டன.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் இனங் காணப்பட்டால் சிவப்பு வர்ணத் தையும், நுளம்புகள் இல்லாத இடங்கள் இனங்காணப்பட்டால் மஞ்சள் வர்ணத்தையும் தீட்டக் கூடிய வகையில் அந்த அட்டைகள் உள்ளன.

மாணவர்கள் தமது குடியிருப்புப் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை இனங் கண்டு அவற்றைச் சுத்தப் படுத்தும் நடவடிக் கைகளில் ஈடுபடவேண்டும். குடியி ருப்பைத் துப்புரவாக வைத்திருப்பது தொடர்பான அறிக்கையை சிவப்பு, மஞ்சள் வர்ணங்கள் தீட்டி வாராந்தம் பாடசாலையில் சமர்ப்பிக்க வேண் டும். அவற்றை பொதுச் சுகாதார பரிசோதகர் வாராந்தம் பாடசாலை சென்று மதிப்பீடு செய்வார். மஞ்சள் வர்ணத்தில் அதிகளவு அறிக்கையிடும் மாணவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பரிசில்கள் வழங்கப்படும். டெங்குக் கட்டுப்பாட்டு அட்டை பாடசாலைகளுக்கும் வழங்கப்படும். டெங்குக் கட்டுப்பாட்டைச் சிறப்பாகச் செய்யும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் மேலும் சில பாடசாலைகளுக்கும் காலக்கிரமத்தில் உள்ளீர்க்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.15 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் இ.திரிகரன் தலைமையில் நடைபெறும் விழாவில் முதன்மை விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்களான மருத்துவர் மார்க்கண்டு குழந்தைவேலு, பொறியியலாளர் வைத்திலிங்கம் சதானந்தன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி நா.சிவநேசனும், கௌரவ விருந்தினராக மாணிக்கம் சிவமூர்த்தி, வீடியோ கலாமினி ஆகியோரும் கலந்து கொள்வர். பரிசில்களை மருத்துவர் திருமதி அஞ்சலா குழந்தைவேலு வழங்குவார். (ற-11)

## போதையில் சாரத்தியம்; ரூ. 10 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், செப்.9

மது போதையுடன் சாரதி அனுமதிப் பத்திரமும் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மல்லாகம் நீதிவான், இருவரும் 100 மணித்தியாலங்கள் சமுதாய சீர் திருத்தப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகள் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டன. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தம் மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டனர். நீதிவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.(ற-5,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக வீடுகளில் 9 ஆண்டுகள்

## செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் அவலநிலை





வவுனியா, செப். 9

போரின் பின்னர் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட 240க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை. வீடுகளை விரைந்து அமைத்துத் தரவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மீள் குடியமர்வு செய்யப்பட்ட பகுதிகளில் குளங்கள் காணப்படுகின்ற போதும் அரசால் வழங்கப்பட்ட அரை ஏக்கர் நிலங்களில் விவசாயம் மேற்கொள்ள முடியாத அளவு கற்பாறைகள் காணப்படுகின்றன என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

போர் காரணமாக மடு, முல்லைத்தீவு, காங்கேசன்துறை, இரணை இலுப்பைக்குளம், புங்குடுதீவு போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையம் மற்றும் வாரிக்குட்டியூர் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர். போரின் பின்னர் வவுனியா வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு மீள் குடியமர்வு செய்யப்பட்டனர்.

2007 ஆம் ஆண்டு பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட 17 குடும்பங்களும், வாரிக்குட்டியூர் நலன் புரி முகாமில் தங்க வைக்கப்பட்ட 83 குடும்பங்களுமாக மொத்தம் 100 குடும்பங்கள் கங்கன்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சண்முகபுரம் கிராமத்திலும், குறித்த முகாம்களில் இருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்ட 140 குடும்பங்கள் கந்தசாமி நகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தட்டான்குளம் கிராமத்திலும் மீள் குடியேற்றப்பட்டனர். 240 குடும்பங்களும் தற்காலிக வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டார்கள்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாங்கள் 9 வருடங்கள் கடந்தும் நிரந்தர வீடுகள் இன்றி தற்காலிக வீடுகளிலேயே வாழ்கின்றோம். கூலி வேலைகளை செய்து காலத்தை கடத்துகின்றோம். காலம் காலமாக ஆட்சிப்பீடம் ஏறிய அரசால் ஏமாற்றப்படுகின்றோம். எமக்கு சுகாதாரமான வசதிகள் வழங்கப்படவில்லை. வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் எங்களது வாக்குகளை வேட்டையாடுகின்றார்களே தவிர எமக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை. சண்முகபுரத்தில் 100 குடும்பங்களும் தட்டான்குளத்தில் 140 குடும்பங்களும் வசிக்கின்றோம். எங்கள் மீது எந்த அதிகாரிகளும் கவனம் செலுத்தவில்லை.

சண்முகபுரம், தட்டான்குளம் பகுதி வவுனியா பூவரசன்குளம் ஊடாக செட்டிகுளம் செல்லும் பிரதான வீதியிலிருக்கும் கிராமாகும். மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து இன்று வரையில் கிட்டத்தட்ட 9 வருடங்களாக நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. தற்போது எமது கிராமத்தில் உப குடும்பங்களும் தோன்றியுள்ளன. அவர்களும் வீடுகள் இன்றி எம்முடனேயே வசிக்கின்றனர். மீள் குடியேற்றப்பட்ட காலம் தொடக்கம் சிரமங்களை அனுபவிக்கிறோம். கொடுக்கப்பட்ட அரை ஏக்கர் காணியில் விவசாயம் செய்ய முடியாத நிலமை உள்ளது. நிலம் கற்பாறை நிறைந்ததாக விவசாயம் செய்ய முடியாதவாறு உள்ளது. இங்கு குளங்களும் காணிகளும் இருக்கும் நிலையில் எங்களின் வாழ்வாதாரத்துக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும் – என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு அந்தப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று தற்காலிகமாக குடியிருக்கும் வீட்டுக்குப் பூச்சுப் பூசுவதற்கு வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தால் ஒரு குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. அதில் தற்காலிக வீட்டுக்குப் பூச்சுப் பூசப்பட்டுள்ளது. கிராமத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளருடன் இணைந்து வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கியுள்ளார்.– என்று கங்கன்குளம் கிராம சேவையாளர் தெரிவித்தார்.

கங்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சண்முகபுரம், கந்தசாமி நகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தட்டான்குளம் பகுதிகளில் மீள் குடியேறியுள்ள மக்கள் தற்காலிக வீடுகளில் வசிக்கின்றமை உண்மை. அவர்களுக்கு கடந்த 9 வருடமாக நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை.

சண்முகபுரம், தட்டான்குளம் கிராமத்தில் மட்டுமல்ல வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் வீட்டுத்திட்டம், அதாவது நிரந்தர வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. பல குறைபாடுகள் உள்ளன. அது தொடர்பாக மாவட்ட செயலாளரிடம் கோரிக்கை மனு சமர்ப்பித்துள்ளேன். எமது பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் அனைவரிடமும் பெற்ற தகவல்களின் அடிப்படையில் எமது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சுமார் இரண்டாயிரத்துக்கு அதிகமானவர் களுக்கு நிரந்தர வீடுகள் தேவைப்படுகின்றன.

அவை கட்டம் கட்டமாக எமக்கு வழங்கப்படுகின்றன. எல்லாத் தேவைகளையும் உடன்தீர்க்க முடியாது. கட்டம்கட்டமாக கிடைக்கும் திட்டங்களை அரசிடமிருந்து பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன– என்று வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-5-21)

## கலைவிழா

யாழ்ப்பாணம், செப்.9

குபேரகா கலைக்கழகம் நடத்தும் கலைவிழா எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் கழகத் தலைவர் ம.ரவிசங்கர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானாந்தாவும், சிறப்பு விருந்தினராக சின்னத்துரை தவராசாவும் கலந்து கொள்வர். (ற-ரி)

## வீட்டில் கள் விற்றோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், செப்.9

மதுவரிக் கட்டளைச் சட்டத்தை மீறி வீட்டில் கள் விற்ற நால்வருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் மல்லாகம் நீதிவான்.

மல்லாகம் மதுவரி நிலைய அதிகாரிகள் தாக்கல் செய்த நான்கு வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். நீதிவான் தண்டம் விதித்தார். (ற-5,107)

## ஓட்டோவில் ஆயுதம் கைதானவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், செப்.9

தடை செய்யப்பட்ட ஆயுதத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவரை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான்.

சந்தேகநபர் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும். பிணையாளி தனது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் கடிதத்தை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிவான் கட்டளையிட்டார். வழக்கு ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பகுதிக்குள் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். ஓட்டோவில் பயணித்த குறித்த நபரை இரவு வேளை மறித்து பொலிஸார் சோதனையிட்டபோது தடை செய்யப்பட்ட ஆயுதத்தை அவர் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட குறித்தநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிவான் சந்தேகநபரைப் பிணையில் செல்ல அனுமதித்தார். (ற-5,107)

## சட்டவிரோதமாக மின்சாரம் உபயோகித்தவருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், செப்.9

சட்டவிரோத முறையில் மின்சாரம் உபயோகித்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான்.

சுன்னாகம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. மின்சார சபைக்கு நட்டஈடாக 6 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. (ற-5,107)

## தீயில் எரிந்த பெண் சாவு சந்தேகத்தில் கணவர் கைது

யாழ்ப்பாணம், செப்.9

எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற பெண் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். குறித்த பெண்ணுக்குத் தீ மூட்டினார் என்ற சந்தேகத்தில் அவரது கணவர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வடமராட்சி, அல்வாயைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான குறித்த பெண் கடந்த 29ஆம் திகதி கடுமையான தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தீப்பற்றிக் கடும் காயங்களுடன் வீட்டில் துடித்துக் கொண்டிருந்த பெண் மீட்கப்பட்டு அயலவர்களால் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

குடும்பத் தகராறே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முடுக்கி விட்டனர். குறித்த பெண்ணிடமும், அயலவர் களிடமும் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் பெண்ணின் கணவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேகநபர் தீக்காயங்களுடன் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அவர் அங்கு கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் வேறொரு வழக்கில் இருந்த பிடியாணை உத்தரவின் அடிப்படையில் தற்போது நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பெண்ணை எரியூட்டிக் கொலை செய்யக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபர் எதிர்வரும் 19ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-5,109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மேற்குலகின் தேவைக்காகவே புதிய அரசமைப்பு

## சாடுகிறார் வீரவன்ச



கொழும்பு, செப். 9
மேற்கு நாடுகளின் தேவைக்கு ஏற்பவே வடக்கு - கிழக்கை இணைத்து புதிய அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ் சுமத்தியுள்ளார். நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ – மூன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர வடக்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு, புதிய அரசமைப்புத் திருத்தம் நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்தார். இந்தக் கருத்தின் மூலம் அரசின் திட்டம் அம்பலமாகியுள்ளது.

மேற்கு நாடுகளின் தேவைக்கேற்ப வடக்கு-கிழக்கை இணைத்துப் புதிய அரசமைப்பை இவர்கள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து, அதனை அவசர அவசரமாக நிறைவேற்றிக் கொள்ளவுள்ளனர்.

அதிலுள்ள சில விடயங்கள் தொடர்பில் உயர்நீதிமன்ற ஆலோசனைக்கு அமைவாக ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் மக்கள் கருத்தறிய விடப்படும். இதில் வெற்றி பெறுவதற்காகவே தற்போது அமைச்சு, பிரதி அமைச்சு, இராஜாங்க அமைச்சு, அமைப்பாளர் பதவி, மாவட்ட அபிவிருத்திக்குழு பதவிகள் எனப் பல்வேறு பதவிகளை அரசு லஞ்சமாக வழங்கி வருகின்றது.

அதுமட்டுமல்லாது நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு மேலும் பல சலுகைகளை லஞ்சமாக வழங்கவும் அரசு திட்டமிட்டு வருகின்றது.

நவம்பர் மாதத்துக்கு இன்னும் சிறிது காலமே உள்ளது. இதற்குள் அரசு எதனைச் சாதித்து விடும். மேற்கு நாடுகளின் தேவைக்கேற்ப அமையவுள்ள இந்த அரசமைப்பில் பிரச்சினைகள் வராமல் இருக்கவே ஆரம்பத்தில் மக்களிடமும் கருத்துக்களைக் கோரினர். மக்கள் முன்வைத்த கருத்துகள் எதுவும் உள்வாங்கப்படாமலே புதிய அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நவம்பரில் புதிய அரசமைப்புத் திருத்தம் கொண்டு வந்தால் அதனை அவசர அவசரமாக நிறைவேற்றாது 6 மாத காலமாவது மக்கள் மத்தியில் இந்த விடயத்தைப்பேசி ஆராயவேண்டும். மக்களை விழிப்படையவும் செய்யவேண்டும்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்குஅஞ்சும்இந்தஅரசு,ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மக்கள் கருத்தறியவே திட்டமிட்டுள்ளது – என்றார். (த-5)

# தூதுவர் மீதான தாக்குதல் மகிந்தவின் சதி முயற்சியா?

## ஆராயவேண்டும் என்கிறார் அசாத் சாலி

கொழும்பு, செப். 9
மலேசியாவில் இலங்கைத் தூதுவர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு பின்னால் மகிந்தவின் சதித்திட்டம் உள்ளதா என்பதை அரசு தேடிப் பார்க்கவேண்டும். தூதுவருக்கு எமது கவலையைத் தெரிவிப்பதோடு இந்தத் தாக்குதலையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சதான் சிங்கள மக்களின் தலைவர் என்றும் அவர் செல்லும் நாடுகளில் தமிழ் மக்களால் தனக்குப் பிரச்சினை ஏற்படுவதாகவும் இலங்கையில் இருக்கும் சிங்கள மக்களுக்கு காண்பிக்கும் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தூதுவர் மீது தாக்குதல் நடத்தியோரில் இலங்கையர் எவரும் இல்லை. அனைவரும் இந்தியர்கள். அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த கே.பியை மலேசியாவில் இருந்து தான் கொண்டு வந்தார்கள். அதேபோன்று மகிந்த செல்லும் இடமெல்லாம் உதயங்க வீரதுங்க செல்கின்றார். அப்படியிருக்கும்போது, இந்தச் சம்பவம் இவர்களுக்கு தெரிவித்து செய்யப்பட்ட தாக்குதலாகவே தெரிகின்றது. மலேசியாவில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதும், அவரின் சுவரொட்டிகள் மீது தாக்குதல் நடத்துவதையும் காணக்கூடியதாக இருந்தது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருக்கும்போதும் முக்கியமான நாடுகளுக்குச் செல்ல முடியவில்லை. இங்கிலாந்துக்கு மாநாட்டுக்குச் சென்றபோது இடையில் திரும்பி வந்தார். எங்கு சென்றாலும் பிரச்சினை. ஆனால் உகண்டா, எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்குச் சென்றபோது எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் போதும் அவருக்கு முக்கியமான நாடுகளுக்குச் செல்ல முடியவில்லை.

இந்த நிலையை அவர் திரிபுபடுத்தி விடுதலைப் புலி களைத் தான் அழித்ததால் செல்லும் இடங்களில் புலிகளின் ஆதரவாளர்களால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகச் சொல்ல முனைகின்றார். ஆனால் இந்தத் தாக்குதல் சம்பவத்தில் புலிகளோ அல்லது இலங்கையர்களோ தொடர்புபடவில்லையென ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

இந்தியர்கள் சிலர்தான் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இது மகிந்த ஆட்சியில் இருக்கும்போது இந்தியர்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல் பிரச்சினையா அல்லது கே.பியுடன் இருக்கும் போது மலேசியாவுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பிரச்சினையா என்பது தொடர்பாக எங்களுக்குத் தெரியாது. எனவே அரசு இது தொடர்பாகச் சிறப்புக் கவ னம் செலுத்தி, இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் எவர் இருப்பது? என்பது தொடர்பாக தேடிப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டின் தூதுவர் என்பது அந்த நாட்டு அரசின் பிரதிநிதி. வெளிநாட்டு தூதுவர்களை பாதுகாப்பது அந்த நாட்டின் கடமை. இந்த தாக்குதலின் பின்னால் மகந்தவின் சகாக்கள் இருக்கின்றனரா என்பது தொடர்பாகவும் மலேசிய அரசு விசாரணை நடத்தவேண்டும்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் போர்ட் மஸ்தான் வகைக் கார் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கார் நாமல் ராஜபக்ச தான் கொண்டு வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த வகையான கார் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரத்துக்கு அதன் பெறுமதி காரணமாகக் கொண்டுவர முடியாது. அப்படியாயின் எவ்வாறு கொண்டு வரப்பட்டது.?

அந்த வாகனம் இடது பக்கச் சாரதி ஆசனமுடையது. இப் படியான வாகனம் சிறப்பு அனுமதியுடனே கொண்டுவர முடியும். குறிப்பிட்ட சில மாதத்துக்குள் அதன் சாரதி இருக்கையை மாற்ற வேண்டும். ஆனால் அது செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த வாகனம் பாதாள உலகத்தைச் சேர்ந்த ஒருவரின் மனைவியின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது – என்றார். (த-5)

# மைத்திரியை ஏற்காவிட்டால் சபையில் அமர முடியாது

## *கம்மன்பிலவிடம் கூறிய பிரதமர்*

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஏற்றுக் கொள்ளாவிட்டால் உங்களால் இந்தச் சபையில் அமர்ந்திருக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பிலவுக்குத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தைச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடமும் முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதமர் பதில் வழங்கும் நேரத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பில கேட்ட கேள்விக்குப் பதிலளித்துக் கொண்டிருக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைநடுவில் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஏற்க முடியாது என்று உதய கம்மன்பில சபையில் தெரிவித்தபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், உங்களுக்கு அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினராக இந்தச் சபையில் அமர முடியாது. எப்படி நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியும் ? சபாநாயகர் இந்தவிடயம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார். (த-5)

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் தனியாருக்குப் பங்கு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களால் ஆயிரத்து 358 பில்லியன் ரூபா அரசுக்குக் கடன் சுமை காணப்படுகின்றது. இத்தகைய நிறுவனங்களைத் தனியார் துறையினருடன் இணைந்த கூட்டு முயற்சி நிறுவனங்களாக முன்னெடுத்துச்செல்ல அரசு உத்தேசித்துள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதமரிடம் இருந்து நேரடிப் பதிலை பெற்றுக் கொள்வதற்கான கேள்வி நேரத்தின் போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 424 பில்லியன் ரூபா கடன் சுமையிலும், சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் 308 பில்லியன் ரூபா கடன் சுமையிலும், துறைமுக அதிகாரசபை 240 பில்லியன் ரூபா கடன் சுமையிலும் இருக்கின்றன. இந்தக் கடன்களை மக்கள் மீது சுமத்த முடியாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம், சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம்போன்றன இவ்வாறு கடன் சுமை மிக்க நிறுவனங்களாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. தற்போதிருக்கும் நிலையில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை தொடர்ந்தும் கொண்டு சென்றால் அதை மூடவேண்டியே வரும்.

கடந்த காலத்தில் அரச நிறுவனங்களால் பெறப்பட்ட ஆயிரத்து 358 பில்லியன் ரூபா கடன் சுமை தேசிய கடன் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன் சுமையை அரசினால் ஏற்க முடியாது. அதற்கு மாற்றுத் தீர்வாகவே கடன் சுமை மிக்க அரச நிறுவனங்களைத் தனியார்துறையினருடன் இணைந்து முன்னேற்ற அரசு உத்தேசித்துள்ளது.

பொருத்தமான முறைமையின் கீழ் அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியாக இவற்றை முன்னேற்ற உத்தேசித்துள்ளோம். அரசுக்கு அதிக நன்மை கிடைக்கும் வகையில்தான் இந்தத் திட்டங்கள் உருவாக்கப்படும். சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை முன்னேற்ற இணைந்து செயற்படக்கூடிய நிறுவனங்களிடம் இருந்து யோசனைகள் கோரப்பட்டுள்ளன – என்றார். (த-5)

# மீனவர் பிரச்சினை; ஒக்ரோபரில் பேச்சு

## மங்கள, அமரவீர இந்தியா பயணம்

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை குறித்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் இந்தியாவுக்குப் பயணம் செய்யவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் இந்தப் பயணம் அமையவுள்ளதாக, மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதைத் தடுப்பது தொடர்பில், இந்திய அதிகாரிகளுடன் பேச்சு மேற்கொள்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடு படுவதால் வருடாந்தம் 6 ஆயிரம் மில் லியன் ரூபா நட்டம் நாட்டுக்கு ஏற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஒரு வாரத்தில் 600 மெற்றிக் தொன் வரையான மீன்கள் இந்திய மீனவர்களால் இலங்கைக் கடற்பரப்பில் இருந்து பிடிக்கப்படுகின்றன. இதன் காரணமாக சுமார் 50 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வடக்கில் பாதிப்பை எதிர்நோக்குவதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குச் சுற்றுலா; முதலிடத்தில் சீனர்கள்

## இந்தியர்களுக்கு இரண்டாமிடம்

கொழும்பு, செப். 9
இலங்கையின் சுற்றுலாப் பயணிகள் சந்தையில் தொடர்ந்து இரண்டாவது மாதமாக இந்தியர்களைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு, சீனர்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.
சீனாவில் இருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆயிரத்து 519 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பாகும்.
இந்த ஆண்டில், முதல் எட்டு மாதங்களில் மாத்திரம், சீனாவில் இருந்து ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 992 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 32 வீத அதிகரிப்பாகும்.
கடந்த ஓகஸ்ட் மாதம் 24 ஆயிரத்து 418 இந்திய சுற்றுலாப் பயணிகளே இலங்கை வந்துள்ளனர்.
கடந்த ஜூலை மாதம், சீனாவில் இருந்து 30 ஆயிரத்து 631 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவில் இருந்து 26 ஆயிரத்து 559 சுற்றுலாப் பயணிகளும் இலங்கை வந்திருந்தனர்.
இலங்கைக்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் நாடுகளில் இந்தியாவே முன்னணியில் இருந்து வந்துள்ளது. எனினும், தொடர்ந்து இரண்டு மாதங்களாகச் சீனர்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளனர். (த-5)

## லசந்தவின் சடலத்தை தோண்ட உத்தரவு

கொழும்பு, செப். 9
கொலை செய்யப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் சடலத்தைத் தோண்டியெடுப்பதற்கு கல்கிஸை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கல்கிஸை நீதிவான் மொஹமட் சஹாப்தீன் இதற்கான அனுமதியை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று வழங்கினார். அவருடைய சடலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி தோண்டியெடுக்கப்படவுள்ளது. (த-5)

## ரவிராஜ் கொலை வழக்கு இன்று மீண்டும் விசாரணை

கொழும்பு, செப். 9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை வழக்கு கடந்த 2ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கை மூவரடங்கிய ஜூரிகள் முன்னிலையில் விசாரிக்கவேண்டும் என்று பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.
பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணிகளின் கோரிக்கைக்கு அரச தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.
ஐந்து குற்றச்சாட்டுக்களில் மூன்று குற்றச்சாட்டுக்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்டுள்ளதால் இதனை ஜூரிகள் முன்னிலையில் விசாரணை செய்ய முடியாது என்று அரச தரப்புச் சட்டத்தரணி குறிப்பிட்டார்.
இந்த விடயம் தொடர்பிலான உத்தரவை நேற்று முன்தினம் வெளியிடுவதாக மேல் நீதிமன்ற நீதிபதி மனிலால் விஜயதிலக அறிவித்திருந்தார்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை ரவிராஜ் கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கை நிறைவுபெறவில்லை எனவும், மற்றுமொரு தினத்துக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் அரச தரப்புச் சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார். இதன்பிரகாரம் குறித்த வழக்கு விசாரணை இன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்த தலைமறைவாகியுள்ள சந்தேகநபர்கள் இல்லாமல் வழக்கு விசாரணைகளைத் தொடர்வதற்கு ஏற்கனவே கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.
இந்தக் கொலை வழக்கில் பழனிச்சாமி சுரேஸ், ஹெட்டியாராச்சிகே பிரதீப், சந்தன குமார, காமினி செனவிரத்ன, பிரதீப் சந்திம, சரண் எனப்படும் சிவகாந்தன் விவேகானந்தன் ஆகியோர் சந்தேக நபர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.
சாமி என்று அழைக்கப்படும் பழனிச்சாமி சுரேஸ், சரண் என்று அழைக்கப்படும் சிவகாந்தன் விவேகானந்தன் உள்ளிட்டவர்கள் தலைமறைவாகியுள்ளனர்.
வழக்குடன் தொடர்புடைய ஆறு சந்தேகநபர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின் கீழ் இந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (த-5)



## எதிரணியின் குற்றச்சாட்டை நிராகரித்தார் பிரதமர் ரணில்

கொழும்பு, செப். 9
உத்தேச அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரி விக்கும் குற்றச்சாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித் துள்ளார்.
கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நாடாளுமன்றில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அரசு புதிய அரசமைப்பை உருவாக்க நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அதில் தற்போதைய அரசமைப்பில் இருக்கும் முக்கியமான விடயங்களை நீக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூட்டு எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வருகின்றனர்.
எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்னமும் அரசமைப்பின் உள்ளடக்கம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## பலத்த பாதுகாப்புக்குள்ளேயும் அசம்பாவிதங்கள் சில நிகழும்

### அமைச்சர் ராஜித சொல்கிறார்

கொழும்பு, செப். 9
பாதுகாப்பு ஏற்பாடுகள் எவ்வளவு பலப்படுத்தப்பட்டிருந்தாலும் சில அசம்பாவிதங்களைத் தடுக்க முடியாது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் தாக்கப்பட்டமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
குறித்த நாடுகள் போதிய பாதுகாப்பை வழங்கினாலும், சில அசம்பாவிதங்களைத் தடுக்க முடியாது எனவும், அந்த நாட்டு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பதாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதனூடாகச் சில அசம்பாவிதங்களைத் தடுக்க முடியாது என்பது புலனாவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
இந்தக் கேள்வி தொடர்பில் மேலும் விளக்கமளித்த ஊடகத்துறை பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரன, இதுபோன்ற சம்பவங்களை கனடா உள்ளிட்ட நாடுகளில் தாம் எதிர்கொண்டுள்ளதாகவும் எனினும் அந்த நாடுகள், பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் வல்லமையாக இருப்பதாகக் குற்றம் சுமத்த முடியாது என்றும் குறிப்பிட்டார். (த-5)




## வெற்றியின் நாயகியே

வீரத்தின் சேவகியே... வெற்றியின் நாயகியே....
சிங்க வாகனமதில் எழுந்தருளும் மூகாம்பிகையே....
திருவீதி வலம் வந்து அருள் சுரக்கும்
திருவதனம் துயர்தனை களைந்திடுமே அம்மா......!
தோஷங்கள் நீங்கிடவே உனை நாடி வணங்குகிறோம்....
சீர் மேவு பேறுகளை வாரி வழங்கி
வாழ்வுதனை மலர்வுறச் செய்திடம்மா.......!
- பு.சந்தோஷ், மீசாலை.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (09.09.2016)
வெள்ளிக்கிழமை
எட்டாம் திருவிழா

திருவருள் தாராயோ!
மானுடத்தின் மேன்மை எல்லாம்
மௌன மொழியால் அருளும்
ஞானவிழி நாயகியே!
நாடிச் சரணடைந்தோம்!
கானகத்தின் செல்வியான
கருமைநிறக் கொற்றவையாம்
பாலை மொழி வாணியுமாம்
பங்கயத்துத் திருமகளாம்!
மோனத்தில் முனிவர் கண்ட
முழுமுதல் நீயே அம்மா!
முல்லை முறுவல் காட்டும்
மோகனக் குமரியம்மா
தேனொத்த மொழியுடையாய்
தெல்லியூர்த் துர்க்கையம்மா!
தேடிச் சரணடைந்தேன்
திருவருள் தாராயோ!
அனுசரணை: வே.பகவதி குடும்பம் (தெல்லிப்பழை)
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.




## உன்பதம் போற்றுகிறோம்

ஞானத்தின் திருவுருவே....
பிரணவ நாதத்தின் கருவுருவே....
கணநாதத்தின் உடனுறை சோதர வேலழகனே...
செல்வச் சீர் பேறுடை மால் மருகனே....
உன் வீதி நடந்து ... கடல் அலை அமிழ்ந்து...
உன்பதம் போற்றுகிறோம்...
அமைதியின் நல்வரம் அருளிடு
பன்னிரண்டு கண்ணுடை ஆறுமுகத் தேவே.....!!
- அளவையூர் தமிழ்நம்பி -


செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (09.09.2016)
வெள்ளிக்கிழமை
ஒன்பதாம் திருவிழா
ஓம் என்ற பிரணவத்தின் உட்பொருளை - உன்
ஒப்பற்ற தந்தை சிவனுக்கே உபதேசித்த
ஓங்கார ரூபத்தில் சந்நிதியில் உறைந்துள்ள முருகா!
ஒன்பதாம் திருவிழா இன்று உனக்கு
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
ஸ்ரீதேவி ஜுவலர்ஸ்
Srithevi Jewellers
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல. 80/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 720 1787, 077 104 2848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கோலாலம்பூர்ச் சம்பவம் எழுப்பி உள்ள உணர்வலைகள்

மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்சார், கோலாலம்பூர் விமான நிலையத்தில் வைத்து சில தமிழ் நபர்களால் தாக்கப்பட்ட சம்பவம், ராஜதந்திர வட்டாரங்களில் மட்டுமன்றி ஆசிய நாடுகளில், குறிப்பாகப் பொதுநலவாய நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

பொதுநலவாய அமைப்பில் இடம்பெற்றுள்ள இலங்கை-மலேசியா நாடுகளுக்கிடையில் நெருங்கிய உறவுகள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நாடுகளுக்கிடையில் நியமனம் பெறும் தூதுவர்கள் உயர்ஸ்தானிகர்கள் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார்கள்.

ஒரு நாட்டின் உயர் ஸ்தானிகராகவோ, தூதுவராகவோ இன்னொரு நாட்டில் நியமனம் பெறும் ஒரு பிரதிநிதியானவர் குறித்த நாட்டுக்குரிய சகல கௌரவங்களுக்கும் மதிப்புக்களுக்கும் உரித்தானவர் ஆகிறார். அவருக்கு இழைக்கப்படும் அவமதிப்பு, அவர் சார்ந்துள்ள நாட்டை அவமதித்தமையாகவே கருதப்படும்.

அந்த வகையில் தான் இலங்கை உயர்ஸ்தானிகர் கோலாலம்பூரில் தாக்கப்பட்டமை இந்த நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பிலுள்ள மலேசிய நாட்டின் உயர்ஸ்தானிகர் வெளியுறவு அமைச்சுக்கு வரவழைக்கப்பட்டு இலங்கையின் கவலையும், ஆட்சேபனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் சகல தரப்பினரும் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மலேசியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், அவருக்கு அங்குள்ள தமிழர் அமைப்புக்களால் கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன,

இலங்கைத் தமிழர்கள் போரின்போதும் அதற்குப் பின்னரும் அனுபவித்த கொடுமைகள் குறித்து வெளிநாட்டிலுள்ள உறவுகள் அக்கறை கொண்டிருப்பினும், அதை அவர்கள் நாகரிகமான முறையில் ராஜதந்திரமாக வெளியிடுவதே சரியானதாகும். உணர்ச்சிகளை வெளிப்படுத்தி அநாகரிகமாக நடந்து கொள்ளும்போது, அவை இங்குள்ள மக்கள் மீதே பிரதிபலிக்கும் என்பது உணரப்பட வேண்டும். இலங்கையில் இடம்பெற்று வரும் அரசியல் காய்நகர்த்தல்களை வெளிநாடுகளில் உள்ள தமிழ் தரப்புகள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவத்துடன் இலங்கைத் தமிழர் அமைப்புக்களை சம்பந்தப்படுத்தி அதனை வேறு கோணத்தில் திருப்பிவிடாது இருக்கச் செய்யும் வகையில், பிரதமரும் வேறு சில கட்சிகளும் குறிப்பாக ஜனதா விமுக்தி பெரமுனவும் நாடாளுமன்றத்தில் ஆணித்தரமான கருத்துக்களை வெளியிட்டமை வரவேற்கத் தக்கது.

நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் இந்த துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் பேசும்போது, நாங்கள் இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கிறோம். நாடு அமைதியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் இது அவசியமற்ற காரியம் எனத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் கோலாலம்பூர்ச் சம்பவம் தொடர்பாக அந்த நாட்டு அரசு, உடனடியாகவே தனது கவலையை வெளியிட்டது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இத்தகைய சம்பவம் எதுவும் இனிமேல் நடைபெறாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு உறுதியளித்துள்ளமை ஆறுதல் அளிப்பதாகும்.



அர்ஜுன் சம்பத்

இந்தியா மற்றும் இலங்கையை இணைக்கும் கடற்பகுதி இரு பிரிவுகளாக உள்ளது. ஒன்று, பாக்ஜலசந்தி எனப்படும் பாக்கு நீரிணை. இது வடகடல் என அழைக்கப்படுகிறது. மற்றொன்று, மன்னார் வளைகுடா எனப்படும் மன்னார் நீரிணை. இது தென் கடல் என்று அழைக்கப்படுகிறது.

வடகடல், தென்கடல் ஆகிய இரண்டைப் பற்றியும் சங்க இலக்கியங்களில் குறிப்புக்கள் உள்ளன.

இந்தியாவோடு இணைந்திருந்த இலங்கை நிலப்பரப்பு, எப்போதோ ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக இரண்டாகப் பிரிந்தாலும், இலங்கை மற்றும் இந்திய மக்களின் உறவுகளை வடகடல் மற்றும் தென்கடல் பரப்பு இணைத்தே வைத்து இருந்தது.

வடக்குக் கடல் 10,000 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. பன்னெடுங்காலமாக இந்தக் கடல் வழியாகத் தங்குதடையின்றி இந்திய இலங்கைப் போக்குவரத்து இடம்பெற்றுள்ளது. இராமபிரான் இந்தக்கடலை கடந்து இலங்கை சென்று சீதையை மீட்டு வந்தார் என்பது இதிகாசம். மகாபாரதம் தொடர்பான பல்வேறு குறிப்புக்களும், சான்றுகளும் இலங்கையில் உள்ளன.

இலங்கையைச் சேர்ந்த ஈழத்துப் பூதந்தேவனார் இந்தக் கடல் வழியாக வந்துதான் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்களில் ஒருவராக இருந்து 13 பாடல்கள் பாடியதாக சங்க இலக்கியங்களில் குறிப்பு இடம் பெற்று உள்ளது. நாகநாதர் என்கிற ஈழத்தைச் சார்ந்த சங்கப்புலவர் குறித்தும் தகவல் உண்டு. ஈழத்து உணவு குறித்து பழந்தமிழ் நூலான பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் மஹாவம்சம் எனும் நூலில் துட்டகைமுனு எனும் சிங்கள பௌத்த அரசனுக்கும், எல்லாளன் எனும் ஈழத்தமிழ் அரசனுக்கும் நடைபெற்ற போரில் எல்லாளனுக்கு உதவியாக தமிழகத்து சோழமன்னரின் படைகள் கடல் தாண்டி மன்னார் வழியாக அருவியாறு தாண்டிச் சென்று அநுராதபுரம் வந்தடைந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழகத்து சோழப் பேரரசின் மாமன்னர்களாகிய இராஜராஜ சோழனும், அவரது மகன் இராஜேந்திர சோழனும் இலங்கை சிங்கள, பௌத்த அரசுகளை வென்று வெற்றி வாகை சூடியுள்ளனர். தங்கள் சோழப் பேரரசை இலங்கையிலும் அமைத்திருந்தனர்.

வடகடல், அதாவது இந்தியாவின் கிழக்கு எல்லையாக உள்ள வங்காள விரிகுடா என்பதே சோழ கங்கம் என்று அழைக்கப்பட்டது. அதாவது சோழர்கள் ஏரி என்பதாகும். வங்காளவிரிகுடா முழுவதிலும் சோழ மன்னர்களின் ஆதிக்கமே நிலவியது.

யாழ்ப்பாணத்தின் கடைசித்தமிழ் மன்னன் மாவீரன் சங்கிலியனை போர்த்துக்கேயர்கள் சுற்றி வளைத்தபோது தமிழகத்தின் தஞ்சையை ஆண்ட தெலுங்கு மன்னரான ரகுநாத நாயக்கரின் தளபதி தலைமையில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் வடகடல் வழியாக இலங்கை யாழ்ப்பாணம் சென்றனர்.

சங்கிலி மன்னனைக் காப்பாற்ற இந்தியாவின் கேரளத்தைச் சார்ந்த மலையாள வீரர் குஞ்சாலி போர் புரிந்தார். உதவிகள் சென்றடையத் தாமதம் நேர்ந்ததால் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசன் சங்கிலி குடும்பத்தாரோடு சிறை பிடிக்கப்பட்டு இந்தியாவில் உள்ள கோவா மாநில சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1950-களிலேயே இலங்கைத் தமிழ் மீனவர்கள் இழுவைப் படகுகள், விசைப்படகுகள் ஆகியவற்றை தங்கள் மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்த தொடங்கினர்.

அப்போது இலங்கைக் கடல் துறை அமைச்சராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் ஈழத்தமிழ் மீனவர்களின் மீன்பிடித்தொழிலுக்கு பெரும் பக்கபலமாக இருந்தார். 2,000 படகுகளுக்கு மேல் இலங்கைத் தமிழர்கள் சொந்தமாக வைத்து இருந்தனர். ஈழத்தமிழ் மீனவர்கள் 75,000 பேர் இருந்தனர். இலங்கையில் தலைமன்னார் முதல் காங்கேசன்துறை வரை தீவுகளின் கடற்கரை நீளங்களையும் சேர்த்தால் 850 கிலோ மீற்றர் அளவுக்கு இலங்கைத் தமிழர்களின் வடகடல் கடற்கரை இருக்கிறது.


இந்தியாவில், தமிழகத்தில் இராமேஸ்வரம் முதல் நாகப்பட்டினம் வரை உள்ள தமிழக கடற்கரையின் நீளம் 1,083 கிலோ மீற்றராகும். தமிழகத்தில் 1960-க்கு பிறகுதான் விசைப்படகுகளை தமிழக மீனவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர்.

சிங்கள, பௌத்த இனவாதக் கொள்கை கொண்ட இலங்கை அரசு, 1966 முதல் ஈழத்தமிழ் மீனவர்களை ஒடுக்கத் தொடங்கியது. கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த ஈழத்தமிழ் மீனவர்களையும் தமிழக மீனவர்களையும் முதலில் கடத்தல்காரர்கள் எனப் பழி சுமத்தியது. பின்னர் கள்ளத் தோணிகள் என அவதூறு பரப்பியது. அதன்பின்னர் போராளிகள் என்று சொல்லி இலங்கைத் தமிழக மீனவர்களையும், தமிழக மீனவர்களையும் வடகடலில் மீன்பிடிக்கவே இலங்கை அரசு அனுமதிக்கவில்லை.

திட்டமிட்டு இலங்கை அரசு இலங்கைத்தமிழ் மீனவர்களின் கடற்றொழிலை அழித்தது. அதுமட்டுமல்ல, இந்தியாவின் மீது கொண்டுள்ள வெறுப்புணர்வு காரணமாகவும், வடகடலில் சிங்களக் கடற்படையின் ஆதிக்கம் காரணமாகவும் தமிழக மீனவர்கள் சுமார் எழுநூறுக்கும் மேற்பட்டோர் சுடப்பட்டுள்ளனர்.

இப்போதுகூட எல்லை தாண்டியதாகக் கூறித் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது வழக்கமாக உள்ளது. இலங்கைத் தமிழர்களின் மீன்பிடித் தொழில் அழிந்ததற்கு இந்திய அரசோ, தமிழக மீனவர்களோ காரணம் அல்ல. சிங்கள, பௌத்த இனவெறிக் கொள்கைகள் கொண்ட இலங்கையின் சிங்கள அரசுகளே காரணம்.

இலங்கையிலிருந்து 1980களில் 700 படகுகள் மூலம் இலங்கைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களது பொருளாதார மேம்பாட்டை திட்டமிட்டு முடக்கும் சிங்கள அரசுகள்

> இலங்கை அரசு, தொடர்ந்து இந்திய அரசுக்கு விரோத மாகவே செயற்பட்டு வருகிறது. தொப்புள் கொடி உறவுகளான இலங்கை மற்றும் இந்திய தமிழர் களை பிரித்தாளும் சூழ்ச் சியில் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது. தமிழகத் தமிழர்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் செயற்கையான மோதலை உருவாக்கி வருகிறது.

தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாக வந்தனர். இந்தியாவின் மத்திய – மாநில அரசுகள் அவர்களை வரவேற்று பாதுகாத்து வருகிறது. சுமார் இரண்டு லட்சம் ஈழத்தமிழ் அகதிகளுக்கு தமிழக மக்களும், இந்திய அரசும் இன்றளவும் உதவி வருகின்றனர். போர்ச் சூழலில் இலங்கைத்தமிழர்கள் பாதிக்கப்பட்ட போது, தமிழகத்திலிருந்து ஏராளமான நிவாரணப் பொருள்கள் அனுப்பட்டன. வடகடல் இந்தியாவுக்கும் இலங்கைக் கும் எப்போதும் பொதுவானதாகவே இருந்தது. இலங்கை அரசின் இன வாதக் கொள்கை காரண மாக 1970-களில் கட லில் கண்ணுக்குத் தெரி யாத இந்த எல்லைக் கோடுகள் இந்திய, இலங்கை அரசுகளால் உருவாக்கப்பட்டன.

இந்திய, தமிழக மீன வர்களும், தமிழக அர சும், ஈழத்தமிழ் மீனவர் களும், இலங்கை வடக்கு கிழக்கு மாகாண அரசு களுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்தி, இந்த எல்லைகள் வரையறுக் கப்படவில்லை. இந்திய அரசும்இலங்கைகொழும்பு அரசும் பேசி எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட் டன. இலங்கையுடன் நல்லுறவு பேணவேண் டும் என்பதற்காக இந்திய அரசு கச்சத்தீவைக் கூட இலங்கைக்கு விட்டுக் கொடுத்துள்ளது.

இலங்கை அரசு, தொடர்ந்து இந்திய அரசுக்கு விரோதமாகவே செயற்பட்டு வருகிறது. தொப்புள் கொடி உறவுகளான இலங்கைமற்றும்இந்தியத்தமிழர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் இலங்கை அரசு செயற்பட்டு வருகிறது. தமிழகத் தமிழர்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் செயற்கையான மோதலை உருவாக்கி வருகிறது.

இறால், மீன்வளம் நிரம்பிய நந்திக் கடலில் சிங்கள மீனவர்களை மட்டுமே மீன்பிடிக்க இலங்கை அரசு அனுமதிக் கிறது. மூன்று லட்சம் மீனவர்களாக பெருகியிருக்க வேண்டிய ஈழத்தமிழ் மீனவர்கள் தற்போது வெறும் 75,000 பேர் மட்டுமே இருப்பதற்கு எவர் காரணம்? 2,000 படகுகளையும், கடற்றொழில் உப கரணங்களையும் வைத்திருந்தவர்கள் மிகக் குறைந்த அளவில் படகுகளை மட் டுமே வைத்திருப்பதற்கு எவர் காரணம்? இலங்கையின் ஆதிக்குடிகளான ஈழத் தமிழ் மீனவர்களுக்கு இலங்கைக்கு சொந்தமான பல கடற்கரை பகுதிகளில் மீன் பிடிக்க தடை விதித்துள்ளவர்கள் யார்? இவை எல்லாமே சிங்கள அரசின் தமிழர்ஒடுக்குமுறைசெயற்பாடுகள்ஆகும். சிங்கள அரசை எதிர்த்துப் போராட வேண்டிய ஈழத்தமிழர் தலைவர்கள் இந்தியாவை எதிர்த்தும், தமிழக மீன வர்களை எதிர்த்தும் பேசுவது நியாயமற் றது. இது விடயத்தில் இலங்கை அரசின் ராஜதந்திர நடவடிக்கைகளை இந்தி யாவும் ஈழத்தமிழர் தலைவர்களும் முறியடிக்க வேண்டும்.



கடலில் அனைத்துப் பகுதிகளிலும் மீன்பிடிக்கும் உரிமை இருநாட்டு மீனவர்களுக்கும் பொதுவானதாக மாறவேண்டும். இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் ஆக்கபூர்வமான யோசனைகளை இரு நாட்டு அரசு களும் ஏற்று – நடைமுறைப்படுத்த வேண்டும். கடல் வளத்தையும், மீன் வளத்தையும், சுற்றுச்சூழலையும் அழிக்கும் நவீன மீன்பிடிக் கருவி களுக்கு இரு நாட்டுஅரசுகளும்தடை விதிக்க வேண்டும். மீன்வளம் நிரம் பிய வடகடல் பகுதியில் அமைதி நிலவ வேண்டும். இரு நாட்டு மீன வர்களின் நலன் காக்கப்பட வேண் டும். இந்திய – இலங்கை நட்புறவு மேம்பட வேண்டும். இதற்குரிய முயற்சிகளை மத்திய மாநில அரசு கள் மேற்கொள்ள வேண்டும்.

*நன்றி: தினமணி நாளிதழ்*

# இரு பகுதியினரும் உணர்ந்து செயற்பட்டாலே விபத்துக்களைத் தடுக்கலாம்

அண்மைக்காலமாகப் பத்திரிகைகளிலே வரும் விபத்துக்கள் குறித்த செய்தி கள் எல்லோருக்கும் மன உளைச்சலைத் தரும் செய்திகளாகவே இருக்கின் றன. கடந்த 30.08.2016 உதயன் பத்திரிகைச் செய்தியின் படி இளம் மருத்து வர் ஒருவரும், முதியவர் ஒருவரும் விபத்துக்களில் சிக்கிச் சாவடைந்து இருக்கின்றார்கள். வாழ வேண்டிய வயதிலே, எமது மண்ணுக்குச் சேவை செய்கின்ற வேளையிலே குறிப்பிட்ட மருத்துவருக்குச் சாவு ஏற்பட்டதை அவருடைய குடும்பத்தினர் நிச்சயமாகத் தாங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள். இந்த நிலையில் வாகனத்தைச் செலுத்துபவர்களும், பாதசாரிகள், பிரயாணிகளும் சிந்தித்து வாகனத்தைச் செலுத்துவதிலும், சிந்தித்துப்பாதையைக்கடப்பதிலும்தம்மைஉணர்ந்துசெயற்படுவார்களாயின் அநாவசியமான விபத்துக்களைத் தடுக்கலாம்.

ஒரு வாகனம் எதிர்பாராத விதமாக இயந்திரக் கோளாறினால் கட்டுப்பாட்டை இழந்து மற்றவர்களையோ, உடைமைகளையோ தாக்கிச் சேதம் விளை விப்பது அல்லது உயிரிழப்புக்களை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் கவனமில்லாமல், அவசரத்தில், முந்திச் செல்வதில் அதிவேக மாக செல்போனில் கதைத்துக் கொண்டு, போக்குவரத்து விதிகளைப் பின் பற்றாது அலட்சியமாக வாகனங்களைச் செலுத்தும்போதும், பாதசாரிகள் பிரயாணிகள் பாதைகளைக் கடக்கும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அல்லது சில வேளைகளில் உயிர்களே பறிக்கப்படுகின்றன. இதை உணர்ந்தும் உணராதவர்களாக படித்தவர், படியாதவர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர் (பெரும்பாலானவர்கள்) செயற்படுவதனாலே விபத்துக்கள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

வாகனங்கள் ஒன்றை ஒன்று முந்திச் செல்லும்போது, எமது அவசரமும், எமது கவனவீனமுமே அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

மேலும், பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கான மஞ்சள் கோட்டின் மூலமாக பாதையைக் கடப்பதே பாதுகாப்பானது. இதை எத்தனைபேர் கடைப்பிடித்துக் கடக்கின்றார்கள்? [illegible] நகரப்பகுதிகள் சன நெருக்கமுள்ள பகுதிகளில் ஏன்? [illegible] வீதியிலாவது மஞ்சள் கோட்டுக்கடவை ஊடாகக் கடக்காமல் வீதியைக் கடக்கும்போது பாதசாரிகளே பிழை விடுகின்றனர். எனவே பாதுகாப்பை நாம் ஒவ்வொருவரும் கவனித்து உறுதிப்படுத்தி நடப்போமானால் அடுத்தவரைக் குறைகூறத் தேவையில்லை. சிறு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு வரும் வாகனங்கள் பிரதான வீதிக்கு ஏறுமிடத்துக்கு முன்னால் வெள்ளை நிற நிறுத்துதல், என்ற கோட்டைக் கவனிக்காமல் திடீரென விரை வாக பிரதான வீதிக்குள் நுழையும்போது, பிரதான வீதியால் விரைவாக வரும் வாகனத்துடன் மோதும் நிலையே ஏற்படும். எனவே சிறுவீதியில் இருந்து வருபவரே நின்று பார்த்து வரவேண்டும். அவ்வாறு நாற்சந்தி களிலும் பிரதான வீதியால் வருபவருக்கும், எமக்கும் வலப்பக்கமாக வரு கின்றவருக்கும் முதலில் செல்ல வழி விட வேண்டும். இல்லையேல் மோதும் நிலையே இங்கு உருவாகும். முந்திச் செல்லும் வாகனச்சாரதிகள் வளைவு களிலே இடைவிடாத நீண்ட வெள்ளைக் கோடு நடுவீதியிலே இருக்குமானால் முந்திச் செல்லக் கூடாது. எதிரே அடுத்த பக்கத்து வாகனம் வருவது தெரியாத இடங்களிலும், அடுத்தடுத்து பல்கும் வளைவுகளிலும் இப்படிப் போடப்பட்டி ருக்கும் கோடுகளை அவதானிக்காது முந்தினால் எதிரேவரும் வாகனத்து டன் மோதும் நிலை ஏற்படுவதாலும் விபத்து ஏற்படும். உயிரிழப்பும் ஏற்படலாம். எனவே வாகனச்சாரதிகளும், பாதசாரிகளும் தத்தமது பொறுப்புக்களை உணர்ந்து, வீண் அவசரத்தை விடுத்து, அடையாளங்களைக் கவனித்து சைகைகளைக்கவனித்து விரைவைக் குறைத்து நிதானத்துடன் நடந்து கொண்டால் நேர இருக்கும் விபத்துக்களைத் முடிந்தவரை தடுக்கலாம்.

அன்ரனி பீற்றர்,
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மனிய எல்லையில் காத்திருக்கும் சிரிய அகதிகள்

# உலக அளவில்
# 50 மில். அகதிச் சிறுவர்கள் போர்களே முக்கிய காரணம்

வோஷிங்டன், செப். 9

உலக அளவில் 50 மில்லியன் சிறுவர்கள் அகதிகளாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்தது. அவர்களில் பெருமளவானவர்கள் ஈராக், சிரிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் குறித்த அமைப்பு வெளிப்படுத்தியது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ்: (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிரான போர்களில் உலக நாடுகள் பலவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஈராக், சிரியா நாடுகளின் மக்கள் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று குடியேறுகின்றனர். சிலர் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் ஆக்கிரமிப்புப் பகுதியைக் கைவிட்டு அரச பகுதிகளுக்குச் சென்றனர். இதனால் உலக அளவிலுள்ள அகதிகளிலும், அகதிச் சிறுவர்களிலும் ஈராக், சிரியர்களே அதிகம் உள்ளனர்.

சிரியா, ஈராக் நாடுகளைத் தவிர்த்து நைஜீரியா, துருக்கி, உகண்டா, லிபியா, ஆப்கானிஸ்தான், கொசோவோ போன்ற நாடுகளிலும் அகதிச் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு வெளிப்படுத்தியது.

ஒட்டுமொத்தமான 50 மில்லியன் அகதிச் சிறுவர்களில் 28 மில்லியன் சிறுவர்கள் தமது நாட்டுக்குள்ளே வெவ்வேறு இடங்களில் இடம் பெயர்ந்து அகதிகளாக இருப்பதாகவும், 22 மில்லியன் சிறுவர்கள் தமது நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளில் அகதிகளாக இருப்பதாகவும் சொல்லப்பட்டது. (ம-ரி4)

> “சிரியா, ஈராக் நாடுகளைத் தவிர்த்து நைஜீரியா, துருக்கி, உகண்டா, லிபியா, ஆப்கானிஸ்தான், கொசோவோ போன்ற நாடுகளிலும் அகதிச் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு வெளிப்படுத்தியது.”

## துக்கம் தந்த துங்கபத்ரா

கர்நாடகாவில் விநாயகர் சிலை கரைப்பின்போது துங்கபத்ரா நதியில் திடீரென வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியதில் 13 பேர் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை 7 பேரே சடலமாக மீட்கப்பட்டனர்.

கர்நாடகா முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையடுத்து 3ஆம் நாளான நேற்றுமுன்தினம் பல்வேறு பகுதிகளில் விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. துங்கபத்ரா நதியில் விநாயகரின் பெரியசிலையொன்று கொண்டு வரப்பட்டு பாரம்தூக்கியின் உதவியுடன் படகில் வைக்கப்பட்டு நதியின் மையப் பகுதிக்கு கொண்டு சென்று கரைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. படகு பயணித்துக் கொண்டிருந்த வேளையில் திடீரென வெள்ளம் பெருக்கெடுத்ததில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. படகிலிருந்த 13 பேரும் அடித்துச் செல்லப்பட்டனர். இவர்களில் ஏழு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 6 பேரைக் காணவில்லை. இருப்பினும் அவர்களும் சாவடைந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-ரி4)

## வட கொா
## தூக்குத்

பியாங்யாங், செப்.9

வட கொரிய துணைப் பிரதமருக்கு, அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் - இனால் சாவுத்தண்டனை வழங்கப்பட்டதாக தென் கொரிய அதிகாரிகள் வெளிப்படுத்தினர்.

வடகொரியாவின் முன்னாள் கல்வி அமைச்சருக்கும், அரசியல் பிரமுகர்

## அடிப்படைகள் இன்றி விவசாயம் அமெரிக்காவில் அறிமுகமாகிறது

வோஷிங்டன், செப். 9

மண், நீர், சூரிய ஒளி, காற்று இல்லாமல் பயிர்களை வளர்க்கக்கூடிய 'ஏரோபோனிக்ஸ்' என்று அழைக்கப்படும் விவசாய முறை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. விண்வெளியில் பயிர்களை வளர்க்க உபயோகித்த தொழில் நுட்பம் இந்த முறையில் பயன்படுகிறது. குறித்த விவசாய நுட்பத்தில், 5 சதவீதம் நீர் பயன்படுத்தப்படும். பயிர் விளையத் தேவையான வெளிச்சம், காற்று ஆகிய ஏனைய காரணிகள் செயற்கையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. தாவரங்களின் வேர்கள், சிறப்பு போசாக்குநீரினால் போசிக்கப்படுகின்றன. சிறப்பான செயலிகளின் மூலம் தாவரங்களின் வளர்ச்சி, ஆரோக்கியம் என்பன பரிசீலனை செய்யப்படும். நியூயோர்க் நகரில் உள்ள ஓர் பண்ணையில் இந்த மாதத்தின் பிற் பகுதியில் இந்த முறை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-ரி4)





மேற்கு ஆஸ்திரேலியாவின் புரோம் நகரில் உள்ள கடற்கரையில் 30-50 சென்ரி மீற்றர் அளவுடைய பெரிய காலடித் தடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள், குறித்த தடம் ஓர் டைனோசரினது என்றும் இந்த டைனோசர் 13 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்கலாம் என்றும் தெரிவித்தனர். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய
தெருநா
சிறுமி ப

இந்தியாவி
தில், தெரு
கடித்துக்
பரிதாபமா
சம்பவம்
யது.
குறித்த ம
மிகவும் பி
களில் ஒன்
கிராமத்தி
இடம்பெற்
என்ற குறி
சிறுமியின்
இல்லை.
அருகில் உ
பகுதிக்குச்
கடன்களை
அறியவரு
யும் அவ்
தெருநாய்
கடிபட்டார்.
அவரை
மருத்துவ
துச் சென்
வழியிலே
தார்.

### தமிழ்நாட்டுக்குக் காவிரி நீர்

# கர்நாடக முதல்வர் பதவி விலகக் குரல்


தமிழ்நாட்டுக்கு காவிரி நதியில் இருந்து தண்ணீர் வழங்கியமைக்காக கர்நாடக முதல்வர் சித்தராமையைவை பதவி விலகக்கோரி நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழ் நாட்டின் விவசாய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பயிரிடப்பட்டுள்ளது. போதிய நீர் இல்லாததால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த விவகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த மன்று வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் 10 நாள்கள் தண்ணீர் வழங்குமாறு உத்தரவிட்டது. முதல் கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை தண்ணீர் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்கியமையைக் கண்டித்து அரசியல் அமைப்புக்கள் பலவும் தொடர்ச்சியாக பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. கர்நாடக விவசாயிகள் வீதிகளில் சமைத்துச் சாப்பிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இந்த நிலையில் கர்நாடக முதல்வர் சித்தராமையாவை பதவி விலகக்கோரி நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சித்தராமையாவின் உருவப் பொம்மைகள் பரவலாக எரிக்கப்பட்டன. சம்பவத்துடன் இரு மாநிலங்கள் தொடர்பு பட்டமையால் பிரதமர் மோடி தலையிட வேண்டும் என்றும் சில கட்சிகள் வலியுறுத்தின. (ம-ரி4)



எரிக்கப்படுகின்றன சித்தராமையாவின் உருவப் பொம்மைகள்



# பயங்கரவாதத்துக்கு எதிரான கதைசொல்லும் கல்லறைகள்

ஈராக்கின் நயாப் நகரில் உள்ள கல்லறை வளாகம் உலகின் மிகப் பெரிய கல்லறை வளாகம் எனும் பெயரைப் பெற்றது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி நாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. உலகெங்கும் பல தாக்குதலை நடத்தி ஆயிரக்கணக்கானோர் சாவடைய காரணமாகியுள்ள இந்த அமைப்பை, பொது எதிரியாகக் கொண்டு உலக நாடுகள் பலவும் செயற்பட்டு வருகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக போரிட்டுச் சாவடையும் ஈராக் இராணுவத்தினரும், சியாட் பிரிவினரும் நயாப் நகரின் கல்லறை வளாகத்திலேயே அடக்கம் செய்யப்படுகின்றனர். தினமும் தொடர்ச்சியாக சடலங்கள் வந்து குவிவதால் உலகின் பெரிய கல்லறை வளாகம் எனும் பெயரை நயாப் கல்லறை வளாகம் பெற்றுள்ளது. குறித்த கல்லறையில் உடல்களை அடக்கம் செய்ய, இடங்களைக் கண்டறிவதே பெரிய பிரச்சினையாக மாறிப்போயுள்ளதாக நயாப் நகர வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-ரி4)

# ...ொரிய துணைப் பிரதமருக்கு ...த் தண்டனை வழங்கினார் கிம்

...மருக்கு, ... ஜோங் ...டனை ...ரிய அதி ... கல்வி ...பிரமுகர் ஒருவருக்கும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிம் ஜோங் உன்னை அவமதித்த குற்றத்துக்காக சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்தத் தகவல் வெளியாகிய பரபரப்பு அடங்குவதற்குள் வடகொரியாவின் துணைப் பிரமருக்கும் குறித்த நாட்டினால் சாவுத் தண்டனை வழங்கப்பட்டதாக அதன் பரமஎதிரி நாடான தென் கொரியா வெளிப்படுத்தியது. கிம் யோங் உன் நடத்திய முக்கியமான கூட்டத்தில், துணைப்பிரதமர் கிம் ஜோங்ஜின் தூங்கி விழுந்ததையடுத்து, கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே நாட்டின் பாதுகாப்புப் படை யினரால் அவர் கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகவும், ஜனாதிபதி கிம் ஜோங் உன்னை அவமதித்த குற்றச்சாட்டில்கடந்தஜூலைமாதம்அவருக்குச் சாவுத்தண்டனை வழங்கப்பட்டதாகவும் தென் கொரிய அதிகாரிகள் தற்போது வெளிப்படுத்தினர். ஆனால் இந்தத் தகவல்களுக்குவடகொரியாஎந்தவிததுலங்கல்களையும் காட்டவில்லை. (ம-ரி4)



## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்; டொனால்டுகே அதிக வாய்ப்பு

வோஷிங்ரன், செப்.8

அமெரிக ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், பிரதான வேட்பாளர்களில் ஒருவராகக் கருதப்படும் டொனால்ட் ட்ரம்ப், ஜனாதிபதியாக அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது. நிகழ்கால பன்னாட்டு அரசியலில் பிரதான விடயமாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. டொனால்ட் ட்ரம்ப் மீதும் உலகின் கவனம் குவிந்து வருகிறது. அவரது அரசியல் வாக்குறுதிகள், தேர்தல் முழக்கங்களே இந்த எதிர்பார்ப்பைத் தூண்டிவிட பிரதான காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் பன்னாட்டு ஊடகங்கள் சிலவும், அமெரிக்க ஊடகங்கள் சிலவும், சில நிறுவனங்களும் தேர்தல் கணிப்புக்களை நடத்தின. அவை ஒவ்வொன்றினதும் அறிக்கைகள் பொதுமைப் படுத்தப்பட்டுப் பார்க்கப்பட்டதில் டொனால்ட் ட்ரம்ப்புக்கு 46 சதவீத ஆதரவும், கிலாரி கிளிங்டனுக்கு 38 சதவீத ஆதரவும் உள்ளதாக சி.என்.என்.செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தேர்தலுக்கு இன்னும் முழுமையாக இரு மாதங்கள் உள்ளன. தேர்தல் முழக்கங்கள் சூடு பிடித்துள்ளன. இவற்றின் அடிப்படையில் வாக்காளர் களின் ஆதரவுகள் மாற்றம் பெறவும் வாய்ப்புக்கள் உள்ளன. (ம-ரி4)

### இந்தியாவில்

## தெருநாய்களால் கடிபட்டு சிறுமி பரிதாபமாகச் சாவு

இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில், தெருநாய்க் கூட்டம் கடித்துக் குதறியதில் சிறுமி பரிதாபமாகச் சாவடைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

குறித்த மாநிலத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான திக்வார் கிராமத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சோனி குமாரி என்ற குறித்த எட்டு வயதுச் சிறுமியின் வீட்டில் கழிவறை இல்லை. திக்வாரின் சிறுவர்கள் அருகில் உள்ள சாக்கடைப் பகுதிக்குச் சென்றே காலைக் கடன்களை நிறைவேற்றுவதாக அறியவருகிறது. சோனிகுமாரியும் அவ்வாறு சென்றபோதே தெருநாய்க் கூட்டத்தால் கடிபட்டார். இதனையடுத்து அவரை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, செல்லும் வழியிலேயே சாவடைந்தார். (ம-ரி4)

### எகிப்தில்

# ரயில் - பஸ் விபத்து 27 பேர் உயிரிழப்பு

கைரோ, செப்.9

எகிப்தின் தெற்கு கைரோவில் பயணிகள் பஸ்ஸும் ரயிலும் மோதியதில் 27 பேர் சம்பவ இடத்தில் சாவடைந்தனர். நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றதாக அறியவருகிறது.

ரயில் வருவதைக் காட்டும் சமிக்ஞை சீராக தொழிற்படாமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக சொல்லப்படுகிறது. இஸ்லாமியர்களின் கொண்டாட்டங்களில் ஒன்றான எடி அல் அடா நிகழ்வு அந்த நாட்டில் பெரும் பரபரப்பாக இடம்பெற்று வருகிறது. குறித்த கொண்டாட்டத்துக்காக தமது சொந்த நகரத்துக்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தவர்களே அவ்வாறு விபத்தில் சிக்குண்டனர். சாவடைந்த 27 பேரில் 22 பேர் பஸ்ஸில் பணயித்தவர்கள், 5 பேர் ரயிலில் பயணித்தவர்கள் ஆவர். (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர்

**செப்ரெம்பர் 1 முதல்31 வரை**

## கன்னி

சிக்கனமும் உழைப்பும் கொண்ட கன்னி ராசியினரே! இந்த காலகட்டத்தில் ராசியில் குரு சஞ்சரிக்க ராசிநாதன் புதன் அனுகூலமாக இருக்கிறார். புத்தி சாதுரியமும், அறிவுத்திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயற்றிட்டங்களைப் பற்றிக் கூறுவதை தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் ஸ்தானத்தை செவ்வாய் பார்க்கிறார். தொழில் ஸ்தானாதிபதியும் ராசிநாதனுமான புதன் அனுகூலமான சஞ்சாரத்தில் இருக்கிறார். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மேல் அதிகாரிகள் கூறுவதைக் கேட்டு தடுமாற்றம் அடையலாம். குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் நடைபெறும் சில விடயங்கள் உங்கள் கோபத்தைதூண்டலாம். எனவேவீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாகப் பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும்.

வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர்கள் மத்தியில் இருந்த பழைய பகைகள் மாறும். குடும்பத்தில் இருந்து வந்த சோதனைகள் அனைத்தும் மாறும். பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தைச் செய்யும் முன்பும் அதை எப்படிச் செய்வது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு தனாதிபதி குருவின் சஞ்சாரம் பண வரவுகளை அதிகப்படுத்தும். பேச்சில் இனிமை, சாதுரியம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். அனைவருடனும் அனுசரித்துச் செல்வது நல்லது. அரசியல்துறையினருக்கு பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரவேண்டிய இலாபம் தாமதப்படும். எதிர்பார்த்த காரியங்கள் நல்லபடியாக முடிய, கடினமாகப் பணியாற்ற வேண்டி இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். வீண் அலைச்சல் உண்டாகலாம். மேல்மட்டத்தில் இருப்பவர்கள் உங்களை ஆலோசனை செய்யாமல் தானாக எதையும் செய்வது உங்களுக்கு மன வருத்தத்தைத் தரலாம். மாணவர்களுக்கு எதிர்காலக் கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள். அடுத்தவர் யோசனைகளைக் கேட்டு தடுமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.

பரிகாரம்: ஸ்ரீதுர்க்கை அம்மனை, ராகுபகவானை செவ்வாய்க்கிழமைகளிலும் அர்ச்சனை செய்து வழிபடுவதால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார்கள்.

அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி.




# போதையற்ற ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

■ நி.ஹரன்



மனித சமுதாயம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமெனின் சுய நினைவு, தமக்கே உரித்தான பண்பாடு, நோயற்ற வாழ்வு, நீடித்த மகிழ்வான ஆயுள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

மனித சமுதாயம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி பதித்து வெற்றிநடை போட்டு வருகின்றது. ஆயினும் இந்த வெற்றி நடைக்குத் தடங்கலாக போதைப்பொருள் பாவனை தலைதூக்கி நிற்கின்றது. எனவே மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக உள்ள போதைப் பொருள் என்றால் என்ன? அதன் வகைப்பாடுகள் எவை? அது எவ்வாறு மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது? அதனை அழித்தொழிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை? என்பன தொடர்பாக இந்தக் கட்டுரை சுருங்க விளக்குகின்றது.

அந்த வகையில் முதலில் போதைப் பொருள் என்றால் என்ன? எனப் பார்ப்போம். சாதாரணமாக இருக்கும் மனிதனின் சுய நினைவை இழக்கச் செய்து, அவனை ஓர் அசாதாரணமான நிலைக்கு இட்டுச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தாக்கு வன்மையுள்ள பொருளே போதைப் பொருள் ஆகும். அடுத்து இதன் வகைப்பாடுகள் பற்றி நோக்கினால் இதனைப்பொதுவாக இருவகைக்குள் அடக்கலாம். ஒன்று மென்போதைப் பொருள். மற்றையது வன் போதைப் பொருள், மென் போதைப் பொருளுக்கு உதாரணமாக: தேநீர், கோப்பி, பாக்கு, புகையிலை, மென்பானங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வன் போதைப் பொருளுக்கு உதாரணமாக: மதுசாரம், சிகரெட், கஞ்சா, கசிப்பு, மாவா, அபின், ஹெரொயின், கொக்கோயின் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக குறிப்பிட்ட மனிதனைக் கடுத்தலான அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் போதைப்பொருள் பாவனையே இந்தக்கட்டுரை ஆராய்கின்றது.



அடுத்ததாக போதைப்பொருள் பாவனை எவ்வாறு மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது எனப் பார்ப்போம். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலேயே போதைப் பொருள் பாவனையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று அண்மையில் உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது. இந்த நாட்டு மக்கள் வாழ்வாதார சவாலுக்கு முகம் கொடுப்பதாலும், பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் கட்டாயத்தில் உள்ளதாலும், மன அழுத்தத்தைத் தவிர்க்க போதைப் பொருளை ஒரு மார்க்கமாக எண்ணுகிறார்கள் என்று அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித சமுதாயம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமெனில், சுய நினைவு, தமக்கே உரித்தான பண்பாடு, நோயற்ற வாழ்வு, நீடித்த மகிழ்வான ஆயுள் போன்றவற்றை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், இவற்றை மழுங்கடித்து ஓர் ஆரோக்கியமற்ற மனித சமுதாயத்தைப் போதைப்பொருள் வர்த்தகம் உருவாக்கியுள்ளது. மேலும் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளானவர்கள் பல உயிர் கொல்லும் மோசமான நோய்களை விலைக்குவாங்குவதோடு, சிலர் வீதி விபத்துக்குள்ளாகி, அங்கவீனர்களாகி, மரணப்படுக்கைக்கும் ஆழ்த்தப்படுகின்றனர். இதனால், குறிப்பிட்ட நபர் மட்டுமல்ல, அவர் சார்ந்த குடும்பமும் பெரிய தாக்கங்களை எதிர்கொள்கின்றது.

முடிவாக போதைப் பொருள் பாவனையை எவ்வாறு இல்லாதொழிக்கலாம் என்பதை நோக்குவோம். அந்த வகையில் மக்களுக்கு போதைப் பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமைகளை கருத்தரங்குகள், வீதி நாடகங்கள், சுவரொட்டிகள், குறும்படங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகக் கூறி விழிப்புணர்வடையவைக்கலாம். அத்தோடு பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கி, பொருத்தமான நடவடிக்கை எடுக்க வைத்தல். மற்றும் மதுவரித்திணைக்கள அவசர தொலைபேசி இலக்கமான 1984 க்கு அழைப்பை ஏற்படுத்தி போதைப் பொருள் சார் பிரச்சினையைத் தெரியப்படுத்தல், போதைப் பொருள்களை நாடுவதற்குரிய காரணங்களை அறிந்து, அதிலிருந்து மீள்வதற்குப் பொருத்தமான வழிவகைகளை (கலை, விளையாட்டு, சுற்றுலாவின் பால் ஆர்வம், உளவள ஆலோசனை) மேற்கொள்ளல்.

மேலும், போதை நோய்க்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து, திருந்தி வாழ வழி செய்தல். போதைப் பொருள் பாவனையாளர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்தல் மற்றும் அலுவலகங்களில் கடமை நேரத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யலாம்.

மேற்கூறிய வகைகளின் மூலம் போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க முடியாத சந்தர்ப்பத்தில் போதைப் பொருள் உற்பத்தியை முற்றாகத் தடை செய்வதோடு, போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை இனம்கண்டு, வேறு நபர்கள் போதைப் பொருள் சம்பந்தமான உற்பத்தியிலோ, வர்த்தகத்திலோ ஈடுபடாதவாறு பயத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு கடூழிய சிறைத்தண்டனை, சாவுத்தண்டனை, போன்ற உயரிய தண்டனைகளை வழங்குவதன் மூலம் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கலாம்.

*கட்டுரையாளர்: அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*பிரதேச செயலகம், வேலணை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்

# போதையில் தள்ளாடுவது தலைவிதியாக மாறிவிடுமா?

மது ஒரு புறமிருக்க, கொடிய போதைப் பொருள்களுக்கு அடிமையாக மாறி விடுகின்றவர்களின் நிலைதான் பரிதாபத்துக்குரியது. போதைப் பொருள்கள் எனும்போது ஹெரோயின், அபின், கஞ்சா, எனப்பல காணப்படுகின்றன. இவற்றுள் ஹெரோயின், கஞ்சா, அபின் ஆகியன பெருமளவில் நுகரப்படுகின்றன. கஞ்சா இலகுவாகக் கிடைக்கின்றபடியால் அவற்றை நாடுவோரும், பயன்படுத்துவோரும் அதிகளவில் காணப்படுகின்றனர். எமது நாட்டைப் பொறுத்தவரையில் கஞ்சா உற்பத்தி வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்படும் கேரளக் கஞ்சா பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

கஞ்சா என்றவுடன் இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றான கேரளாவின் நினைவுதான் மனதில் சட்டென எழுகின்றது. இதற்கு ஏற்றாற் போன்று கேரளக் கஞ்சா என்ற சிறப்புப் பெயர் இலங்கையில் கைப்பற்றப்படுகின்ற கஞ்சாவுக்கு இடப்பட்டுள்ளது. கேரளா மலைகள் நிறைந்ததொரு மாநிலமாகும். வளமான மண் வளமும் இங்கு நிறையவே உண்டு. ஆனால் போதையை ஊட்டி மனிதர்களே சிறுகச்சிறுக அழித்துவிடுகின்ற தீய ஆற்றலைக் கொண்ட கொடிய போதைப் பொருள்களில் ஒன்றான கஞ்சா! இந்த மண்ணில் விளைவிக்கப்படுவதை எண்ணும்போதுதான் மனதில் தாங்கமுடியாத வலி ஏற்படுகின்றது.

கஞ்சாவை ஒத்த தீய இயல்புகளைக் கொண்டது அபின் எனும் வேறொரு போதைப் பொருள். இது ஆப்கானிஸ்தானில் காணப்படுகின்ற ஒருவகை மரங்களில் இருந்து கிடைக்கின்ற மூலப் பொருள்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றது. இதை ஒரு தடவை பயன்படுத்தியவர்கள் அதிலிருந்து மீள்வது கடினமாகவே மாறியுள்ளது.

ஆதி நாள்களில் காட்டில் வாழ்ந்த மக்கள் தேனை அதிகளவில் பயன்படுத்தினார்கள். காடுகளில் தேன் நிறையவே கிடைப்பதால் இந்தமக்கள் அதனைப் பெறுவதில் அதிக சிரமங்களை எதிர் கொள்ளவில்லை. தேனை உண்டதும் ஒருவித பரவச நிலை தம்முள் பரவுவதை அந்த மக்கள் உணர்ந்து கொண்டனர். தற்போது மதுவும் அவ்வாறானதொரு நிலையைத்தான் மதுவை அருந்துபவர்களுக்கு ஏற்படுத்தி வருகின்றது.

மேலைத்தேய நாடுகளில் குளிர் அதிகமாகவே காணப்படும். உடலின்வெப்பத்தைப் பராமரிப்பதற்காக அந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள் மதுவை அருந்த ஆரம்பித்தனர். மேலும் புகைப் பிடிப்பதற்கும் தலைப்பட்டனர். அந்நியர் எமது நாட்டுக்கு வருவதற்கு முன்னர், தென்னை பனை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட கள்ளையே மதுப்பிரியர்கள் அருந்தி வந்தனர். இதனால் கள் இறக்கும் தொழிலில் பலர் ஈடுபட்டு வந்ததுடன், வருமானத்தையும் ஈட்டிக் கொண்டனர். வீடுகளில் கள் விற்பனை இடம் பெறுவது சாதாரண விடயமாகவே கருதப்பட்டது. ஆனால் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் பின்னர், தவறணை முறை நடைமுறைக்கு வந்தது. கள் தவிர்ந்த மதுபான விற்பனை நிலையங்கள் தற்போது பார்க்கும் இடமெல்லாம் காணப்படுகின் றன. அவற்றின் காட்சியறைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வெவ்வேறு வடிவங்களைக் கொண்ட மதுபானப் போத்தல்கள் பார்ப்பவர்களின் மனங்களைச் சுண்டியிழுக்கின்றன. மதுப் பாவனை அதிகரித்தமைக்கு இதையும் ஒரு பிரதான காரணமாகக் கூறமுடியும். தற்கால இளைஞர்கள் நவீன மதுபான வகைகளையே நாடிச் செல்கின்றனர். விதம் விதமான மதுபான வகைகளையும் சுவைத்து மகிழ்வதில் அலாதியான பிரியமுள்ளவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். சாதாரண மதுபானங்கள் போதையைக் கொடுப்பது மட்டுமன்றி, உடல் நலத்துக்கும் கேடு விளைவிக்கின்றன. மதுபாவனையால் ஆண்டுதோறும் ஏராளமானவர்கள் உயிர்களை இழந்து வருகின்றனர். அதிலும் சட்டத்துக்குப் புறம்பான வகையில் தயாரிக்கப்பட்டு மலிவு விலையில் விற் கப்படும் கசிப்பு போன்றவற்றை அருந்துபவர்களின் நிலை மோசமானதாகவே மாறி விடுகின்றது.

மது ஒருபுறமிருக்க, கொடிய போதைப் பொருள்களுக்கு அடிமையாக மாறி விடுகின்றவர்களின் நிலைதான் பரிதாபத்துக்குரியது. போதைப் பொருள்கள் எனும்போது ஹெரோயின், அபின், கஞ்சா எனப் பல காணப்படுகின்றன. இவற்றுள் ஹெரோயின், கஞ்சா, அபின் ஆகியன பெருமளவில் நுகரப்படுகின் றன. கஞ்சா இலகுவாகக் கிடைக்கின்ற படியால் அவற்றை நாடுவோரும்-பயன்படுத்துவோரும் அதிகளவில் காணப்படுகின்றனர். எமது நாட்டைப் பொறுத்த வரையில் கஞ்சா உற்பத்தி வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், கடல்மார்க்கமாகக் கடத்திவரப்படும் கேரளக் கஞ்சா பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. தினமும் கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான கஞ்சா பிடிபடுவதாகச் செய்திகள் வெளிவருகின்றன. அவ்வாறாயின் பிடிபடாமல் தப்பிச் செல்வது எத்தனை கோடி ரூபா பெறுமதியானது? என்ற கேள்விக்கு இன்றுவரை விடை தெரியவில்லை. அதைவிட இலங்கைக்குள் கஞ்சா கடத்தப்பட்டு வருவதன் மர்மமும் நீடிக்கவே செய்கின்றது. இந்தியாவிலிருந்து கடத்திவரப்படும் பெருந்தொகையான கஞ்சா முழுவதும் இலங்கையில் நுகரப்படுமாயின் இலங்கையொரு முற்றுமுழுதாகப் போதையில் மிதக்கின்ற நாடாக மாறியிருக்கும். ஆனால் அவ்வாறானதொரு நிலையை இங்கு காணமுடியவில்லை. போதைப் பொருள் பாவனையாளர்களும் இல்லாமலில்லை. போதைப் பொருள்களின் விற்பனை இடம்பெறுவதோடு இவற்றைக் கைப்பற்றுகின்ற செயற்பாடுகளும் இடம் பெறத்தான் செய்கின்றன.

கேரளக் கஞ்சா அடிக்கடி பெருமளவில் இங்கு கைப்பற்றப்படுவதைப் பார்க்கும் போது, வெளிநாடுகளுக்கு கஞ்சாவைக் கடத்துகின்ற கேந்திர ஸ்தானமாக இலங்கை மாறிவிட்டதா? என்ற சந்தேகமும் எழாமலில்லை. இது உண்மையாக இருக்குமாயின் இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாகவே எடுக்கப்படல் வேண்டும். இதற்கு இந்திய அரசின் முழு உதவிகளையும் பெற்றுக் கொள்ளுதல் அவசிய மானது. கேரளா போன்றதொரு சிறிய மாநிலத்தில் கஞ்சாப் பயிர் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவதை அங்கு ஆட்சியிலிருக்கின்ற மாநில அரசு கண்டுகொள்ளாமல் இருப்பதும் விந்தையானது.

பொதுவாகவே மது உட்படப் போதைப் பொருள்களால் மனித குலத்துக்குத் தீமையே ஏற்படுகின்றது. ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானவர்களின் சாவுக்கும் இவை காரணமாக உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. ஆனால், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் போதைப்பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனையால் ஆண்டுதோறும் பெருந்தொகையான வருமானத்தை ஈட்டி வருகின்றன. குறிப்பாக ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசே போதைப் பொருள்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானில் உற்பத்தி செய்யப்படுகின்ற போதைப் பொருள்கள் பல்வேறு நாடுகளைக் கடந்து இறுதியில் மெக்ஸிக்கோ உட்பட்ட தென் அமெரிக்க நாடுகளைச் சென்றடைகின்றன. மெக்ஸிக்கோவில் போதைப் பெருள்களைக் கடத்தி விற்பனை செய்பவர்களால் அந்த நாட்டு அரசு பெரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. போதைப் பொருள்களை விற்பனை செய்கின்ற கும்பல்கள் அரசுக்குச் சவால் விடும் வகையில் தமக்கு எதிரானவர்களைக் கொல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அந்த நாட்டின் காவல் துறையினரும் இவர்களுக்கு அஞ்சி நடக்கின்ற நிலையைக் காணமுடிகின்றது.

எமது நாட்டில் அரசியல்வாதிகள் சிலர் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

போதைப் பொருள்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அரசுகள் மட்டுமல்லாது பொதுமக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இல்லையேல் முழு உலகமும் போதைக்குள் தள்ளப்பட்டு விடும் நிலை உருவாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT

# கழுதையிடம் படித்த பாடம்

ஒரு காட்டில் அப்பாவிக் கழுதை ஒன்று தனியனாக வசித்து வந்தது. ஊனுண்ணும் கொடிய விலங்குகளின் கண்களுக்குத்தென்படாது அது ஒதுங்கி வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அங்கு வந்த சில வேடர்கள், மான், மரை ஏதாவது அகப்படட்டும் என எதிர்பார்த்து வலையை விரித்துவிட்டு இலை, குழைகளால் மூடி மறைத்துச் சென்றனர். இதனைக் கண்டுவிட்ட கழுதை அந்த வழியில் வரும் விலங்குகளை எச்சரிக்கை செய்து காப்பாற்றிக் கொண்டிருந்தது.

தூரத்தில் வந்துகொண்டிருந்த சிங்கமொன்றுக்கு வலை கண்ணில் படவில்லை, கழுதைதான் தென்பட்டது. கழுதையை வேட்டையாடித் தின்பதற்காக பாய்ந்து வந்தது. அந்தவேளை உரத்துச் சத்த மெழுப்பிய கழுதை சிங்கத்தை எச்சரிக்கை செய்து தடுத்திராவிடில் சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும். தனது உயிரைக் பாதுகாத்ததால் சிங்கம் கழுதையைக் கொல்லாது அன்றிலிருந்து அதனுடன் நட்பாகிக் கொண்டது. சிங்கத்தின் நட்புக் கிடைத்ததனால் கழுதையும் சுதந்திரமாக உலாவி வந்தது.

இவர்களது நட்பைப் பார்த்த நரியொன்று சிங்கத்திடம் வந்து தன்னையும் நண்பனாக்கிக் கொள்ளுமாறும், தானும் கழுதைபோல் எப்போதும் சிங்கத்துக்கு உதவியாக இருப்பதாகவும் தெரிவித்தது. கழுதை கேட்டுக் கொண்டதையடுத்து நரியும் நண்பனாகியது.

அந்த வழியால் மானொன்று வரவே சிங்கமும் நரியுமாக மானைத் துரத்தின. மான் தனது உயிரைக் காக்கப் போராடியது. அதனது கொம்பினால் காயமடைந்த நரி பயந்து ஒதுங்கிக் கொண்டது.

சிங்கம் மானைக் கொன்றபின் கழுதையிடமும், நரியிடமும் மானின் இறைச்சியை நரிக்கும் தனக்குமாக பங்கிடுமாறு தெரிவித்துவிட்டுச் சற்று ஓய்வெடுத்தது.

அந்தநேரம் நரி தனது குள்ளநரிக் குணத்தைக் காட்டியது கழுதையிடம். "நண்பா, நானும் அந்த மானுடன் போராடி ரத்தம் சிந்தி காயமும் பட்டு விட்டேன். நீ நேர்மையாக நடப்பவன் என்பதை நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நீயே சரியாகப்பங்கிடு நண்பா!" என்று சொல்லி வைத்தது. கழுதைக்கு காதிலை நரி பூவைத்து விட்டதனால் அப்பிராணிக் கழுதையும் மானின் இறைச்சியை சரிசமமாகப் பங்கீடு செய்து விட்டு தான் செய்த கெட்டித்தனத்தை தனக்குள் பாராட்டிக் கொண்டு சிங்கத்தை உண்பதற்கு அழைத்தது. சிங்கமும் வந்தது. மானின் இறைச்சி இரண்டு சமகூறுகளாகப் பங்கிட்டிருப்பதைக் கண்டது. நரியை முறைத்துப் பார்த்தது. நரிக்கு விளங்கி விட்டது. கழுதையைச் சுட்டிக்காட்டிவிட்டு சிவனே என்று ஒதுங்கிக் கொண்டது. வந்தது கோபம் சிங்கத்திற்கு. ஒரே பாய்ச்சல் கழுதைமேல். அவ்வளவுதான், கழுதை துடிதுடித்து பரலோகம் போய்ச் சேர்ந்தது.

நடுநடுங்கிக் கொண்டிருந்த நரியை அழைத்த சிங்கம், மானின் இறைச்சியை சரியாகப் பங்கிடுமாறு தெரிவித்தது. அது



செத்துக் கிடந்த கழுதையையும், அதனை அடித்துக் கொன்ற சிங்கத்தையும் மாறி மாறி பார்த்தது. அதனுடைய நரிப்புத்தி வேலை செய்தது. மள, மள என்று மானின் இறைச்சித்துண்டுகள் முழுவதையும் வாரி, வாரி சிங்கத்தின் பக்கம் ஒன்றாகச் சேர்த்துவிட்டு ஓர் எலும்புத்துண்டை மட்டும் தன் பக்கமாக வைத்துக் கொண்டது.

"ஆகா, நீ மிகவும் கெட்டிக்காரன். அருமையாகப் பங்கீடு செய்திருக்கிறாய். உனது திறமையை மெச்சுகிறேன். நீ எங்கே படித்தாய்? யாரிடம் படித்தாய்? உனது குரு யார்?" என்று கேட்டபடி சிங்கம் மானின் இறைச்சியை உண்ண ஆரம்பித்தது.

இறந்து கிடக்கும் கழுதையையும் சிங்கத்தையும் மீண்டும் மாறி மாறிப் பார்த்தது நரி "இதோ இறந்துகிடக்கும் கழுதையாரிடம்தான் படித்தேன். அவர்தான் எனக்குப் படிப்பித்தவர். அவர்தான் என்குரு" என்று சொல்லியபடி மானின் எலும்புத்துண்டை மெதுவாகத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டது. எங்கே எப்போது? தான் கற்றேன் என்பதை மட்டும் சிங்கத்துக்குக் கூறவில்லை. அப்படிக் கூறப்போனால் கழுதைக்கு நடந்த கதி தனக்கும் நடந்துவிடும் என்பது அதற்குத் தெரியாமலிருக்குமா?

வேளை அறிந்து செயற்படுவதே விவேகமாகும்.

– லோகி



K.கஜுஷன்,
தரம் - 1B
புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## வரலாற்றில் இன்றைய தினம்



1543 - மேரி ஸ்ரூவாட் 9 மாதக் குழந்தையாக இருந்தபோது ஸ்கொட்லாந்து அரசியாக மத்திய ஸ்கொட்லாந்து ஸ்ரிர்லிங் நகரில் முடி சூட்டப்பட்டார்.

1739 - வட அமெரிக்க பிரித்தானிய கொலனியில் பெரியளவிலான அடிமைகளின் எழுச்சி இடம்பெற்றது.

1791 - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டனின் பெயரில், அமெரிக்கத் தலை நகருக்கு வொஷிங்டன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

1839 - ஜோன் ஹேர்ஷலால் கண்ணாடித் தகட்டில் முதன் முதலாக ஒளிப்படம் எடுக்கப்பட்டது.

1850 - கலிபோர்னியா அமெரிக்காவின் 31 ஆவது மாநிலமாகியது.

1892 - யூப்பிட்டர் கிரகத்தின் மூன்றாவது சந்திரன் அமேதியா எட்வெட் எமர்ஸன் போர்னாட்டால் கண்டறியப்பட்டது.

1922 - கிரேக்கம் – துருக்கி இடையிலான போர் கிரீக் ஸ்மைர்னாவில் துருக்கியின் தீர்க்கமான வெற்றியுடன் முடிவுக்கு வந்தது.

1923 - துருக்கிக் குடியரசை உருவாக்கிய முஸ்தபா கேமல் அற்றாநேக்கினால் றீபப்பிளிக்கன் மக்கள் கட்சி தொடங்கப்பட்டது.

1939 - பர்மாவின் தேசிய நாயகன் U ஒட்டோமா, பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராக உணவைத் தவிர்த்து சிறையில் உயிரிழந்தார்.

1945 - ஜப்பான் பேரரசு சீனாவிடம் முறைப்படி சரணடைந்தது.

1948 - கொரியா ஜனநாயக மக்கள் குடியரசு கிம் 11 சுங் ஆல் பிரகடனப்படுத்தப்பட்டது.

1990 - 184 தமிழர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.
- சத்துருக்கொண்டான் படுகொலை: 186 பொது மக்கள் படையினரால் கொல்லப்பட்டனர்.

2002 – தேசிய சேமிப்பு வங்கியின் தலைவரும், ஐ.தே.க உப தலைவருமான வி.எம்.சுவாமிநாதன் உதயனுக்கு வருகை.

2003 - பொலிஸ் காவலில் கைதி இறந்தால் பொறுப்பதிகாரியே பொறுப்பாவார் எனப் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை.
- நான்கு வாகனங்கள் மோதி நைஜீரியாவில் 70 பேர் சாவு.
- சந்நிதி இரதோற்சவத்தில் கட்டுத் தேர் சரிந்தது. பக்தர்கள் அதிர்ச்சி.

2012 - ஈராக்கில் இடம்பெற்ற தொடர் தாக்குதலில் 100க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 350 பேர் வரை காயமடைந்தனர்.

2015 - ஐக்கிய இராச்சியத்தில் நீண்ட காலம் ஆட்சியிலிருந்தவரானவர் இரண்டாம் எலிசபெத் மகாராணியானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுபடை வீடுகளின் பெருமை

காரை .எம்.பி.அருளானந்தன்



முருகன் என்றால் அழகு, பார்த்தால் அழகு, முருகனைப்பற்றிக் கருத்துப் பரிமாறினால் அழகு, ஏன் நினைத்தாலே அழகு, கருத்துக்கு இனியனாய், காட்சிக்கும் இனியனாய் திகழ்பவன் முருகன்.
குன்று இருக்குமிடமெல்லாம் குமரன் இருக்குமிடம் என்பது ஆன்றோர் வாக்கு. தமிழ்நாட்டில் முருகனுடைய தலங்களாக வணங்கப்படுபவை ஆறுபடை வீடுகள். அந்த ஆறுபடையப்பனை இங்கே ஒவ்வொரு தலமாக தரிசிப்போம்.

**திருப்பரங்குன்றம்**

மதுரை நகருக்கு மேற்குப் பகுதியில் எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது திருப்பரங்குன்றம். இந்தக் குன்றத்தின் சிறப்பு, இது சிவலிங்க வடிவில் அமைந்திருப்பதாகும். திருப்பரங்குன்றத்துக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. தேவர்களைப்பெரிதும்துன்புறுத்திமகிழ்ந்தார்கள் அரக்கர்கள். அவர்களின் தலைவன் சூரபத்மனையும் அவனுடைய படைகளையும் சம்ஹாரம் செய்து தேவர் குலத்துக்கு நன்மை புரிந்தான் முருகன் . தங்கள் நிம்மதிக்கு வழி வகுத்த முருகனுக்கு நன்றி செலுத்தும் வகையில், தன் மகள் தெய்வானையை முருகனுக்கு மணம் முடித்துக் கொடுக்கிறான் இந்திரன். அந்தத் திருமணம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது.

**திருச்செந்தூர்**

திருநெல்வேலியிலிருந்து சுமார் அறுபது கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. மூலவரான முருகப் பெருமான் நான்கு திருக்கரங் களுடன் தியான கோலத்தில் காட்சியளிக்கின்றார். இந்த மூலவர் திருடப்பட்டு பிறகு திரும்பக் கிடைத்தவர் என்கிறார்கள். தமிழ் நாட்டுக்குள் அந்நிய ஆதிக்கம் ஊடுருவியிருந்த காலம் அது. அவர்களது ஆரம்ப நோக்கமே இந்திய செல்வங்களை கொள்ளையடிப்பதாகவே இருந்தது. அந்த வகையில் தமிழ் நாட்டுக்குள் நுழைந்த டச்சுக்காரர்கள் திருச்செந்தூர் வந்தார்கள். முருகன் கோயிலுக்கு வந்த அவர்கள் அழகு முருகனைக் கண்டார்கள். அது முற்றிலும் தங்கத்தாலான விக்கிரகம் என்று கருதி தூக்கிச் சென்றார்கள். அந்தப்பகுதியை ஆண்ட நாயக்கர்கள் அந்த கொள்ளையைத் தடுக்க இயலாமல் தவித்தார்கள், துடித்தார்கள்.
முருகன் அவர்களின் பிரிவை அறிந்தான். அந்த உணர்வு வானில் புயல்காற்றும், மழையும், கடல் கொந்தளிப்புமாக எதிரொலித்தது. டச்சு கொள்ளையர்கள் பயந்தார்கள். தமிழ் நாட்டில் ஆன்மிக நம்பிக்கையின் விளைவுதான் இந்த மோசமான இயற்கைச் சீற்றம் என்றறிந்தார்கள். உடனே முருகன் விக்கிரகத்தை கடலில் தூக்கி எறிந்தார்கள். வேலனை விடுவித்து விட்டநிம்மதியில்இயற்கையும்அமைதிகொண்டது. ஆனால் கடலில் விழுந்த கடவுள் கறைக்கு வரவில்லை. சுமார் ஐந்து வருடங்கள் வரை திருச்செந்தூர் கோயிலில் முருகன் விக்கிரகம் இல்லாத நிலை. கோயிலுக்கு புது விக்கிரகம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பணியை மேற்கொள்ள திருமலை நாயக்க மன்னர்கள் முன் வந்தனர். திருச்செந்தூர் முருகன் அவர்கள் கனவில் தோன்றி, இன்னொரு விக்கிரகம் வேண்டாம். நான் உங்களையெல்லாம் விட்டு வெகு தொலைவு எங்குமே போய்விடவில்லை. இதோ பக்கத்தில் கடலுக்குள்தான் இருக்கின்றேன். நான் அமிழ்ந்திருக்கும் இடத்தை நீங்கள் அடையாளம் காண அந்த இடத்தில் ஓர் எலுமிச்சம் பழம் மிதக்கும் போய்ப் பாருங்கள்–என்றார். மறுநாள் காலையில் அவர்கள் முருகன் காண்பித்த கடற்பரப்பில் கருடன் வட்டமடித்து முருகன் இருக்கும் இடத்தை காண்பித்தது. அவர்கள்கடலில்மூழ்கி முருகனை வெளிகொணர்ந்தனர். கடலில் சில காலம் முருகன் இருந்ததால் மீன்கள் அவரின் சிலையில் கொத்தியிருக்ன்ற அடையாளத்தை இன்றும் பார்க்கலாம்.

**பழனி**

உலக நன்மைக்காக நாரதர் கைலாயத்தில் மாம்பழ விளையாட்டை ஆரம்பித்தார். உலகம் சுற்றும் தத்துவத்தை சமயத்துக்கு ஏற்றார் போலத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார் விநாயகர். நியாயமான சிறுபிள்ளைக் கோபத்துடன் பெற்றோரைப்பிரிந்து செல்கிறார் முருகன். சிவனும் பார்வதியும் பழனி மலையில் தனித்திருக்கத் தீர்மானித்துவிட்ட முருகனை அமைதிப்படுத்துகிறார்கள். "நீயே ஒரு பழம்" உனக்கொரு பழம்? என்று கேட்கிறார்கள்.
அந்தப்பழம் நீ பழனியாகி பக்தர்களை உய்விக்கவா என்கின்றனர். மதுரைக்கு சுமார் அறுபது கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது பழனி.

**சுவாமிமலை**

நான்காவது முருகனின் இந்தத் திருத்தலம் சுவாமி மலை கயிலையில் முருகன் விளையாடிக் கொண்டிருந்தான். சிவனைத் தரிசிக்க வந்த இந்திரன் முதலான தேவர்கள் வழியில் சந்தித்த முருகனை நலம் விசாரித்து ஆதரவாய்ப் பேசி விட்டு சிவனைப் பார்த்தார்கள். ஆனால், பிரம்மன் மட்டும் சிறுபிள்ளைதானே என்ற அலட்சியத் துடன் முருகனை ஏறெடுத்தும் பார்க்காமலேயே போவிட்டார்.
பாலகன் முருகனுக்கு கோபம் பொங்கியது. பிரம்மனை வரவழைத்தான். வேதம் ஓதுங்கள் என்று கேட்டான். பிரமனும் "ஓம்" என்று ஓத ஆரம்பித்தார். முருகன் நிறுத்தினான். "ஓம்" என்ற பதத்துக்குப் பொருள் கேட்டான். பிரணவமே உருவானவன் பிரணவ மந்திரத்தின் பொருள் கேட்கிறானே என்று திகைத்து மயங்கினான். படைப்புக் கடவுள் பிரணவமந்திரப் பொருள் தெரியாது ஆக்கும் தொழிலை எவ்வாறு செவ்வனே செய்ய முடியும்? என்று கேட்ட வேலவன் பிரமனை சிறை வைத்தான். தானே படைப்புத் தொழிலை மேற்கொண்டான். சிவன் முருகனிடம் பிரமனை விடுவிக்குமாறு பணித்தார். பிரமன் விடுதலை யானதும் அந்தப்பிரமனால் விளக்க இயலாத பிரணவ மந்திரத்தின் பொருளை தனக்கு விளக்கிச் சொல்லும்படி முருகனிடம் கேட்டுக் கொண்டார் ஈசன்.
முருகனும் அதன் உட் பொருளைத் தெளிவாக சுவாமிகளுக்கு உபதேசித்தான். அதனாலேயே சுவாமிநாதனும் ஆனான். இவ்வாறு உபதேசம் நடந்த இடம் சுவாமிமலை கும்பகோணத்திலிருந்து பத்து கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

**திருத்தணி**

ஐந்தாவது முருகனின் படை வீடு திருத்தணிமலை. செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கோயில் இங்கே முருகப் பெருமான் சாந்த சொரூபி வள்ளியை மணம் புரிய வந்த குமரன் தம் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த வள்ளியின் உறவினரான வேடர்களோடு சமர் புரிந்தான். எதிர்ப்பை எதிர் கொண்ட, கோபம் தணிந்து திருத்தணி மலை மீது வந்தமர்ந்தான். அதேபோல் சூரபதுமன் போன்ற அசுரர்களையும் வென்று அந்தக் கோபம் தணிய இங்கு வந்து இளைப்பாறுதல் பெற்றான். செருதணித்த இடம் அதாவது கோபம் தணித்த இடம் செருத்தணி இதுவே திருத்தணியாக மருவியது.

**பழமுதிர்ச்சோலை**

மதுரையிலிருந்த பன்னிரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இத்தலத்தில் நக்கீரர் தன்னுடைய திருமுருகாற்றுப்படையில் பழமுதிர்ச் சோலை மலை கிழவோனே என்று இத்தலத்தைப் பற்றி பாடுகிறார். வள்ளிக்கு அருள் புரிந்த குமரவேளே பழமுதிர்ச்சோலையில் எழுந்தருளியிருக்கிறார் என்கிறது கந்தபுராணம்.
தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு மரத்திலிருந்து நாவல் பழத்தை உதிர்த்துச் சுட்ட பழமாக்கித் தந்தவன் கந்த வேள். இளவல் பழம் உதிர்த்த தலம் அதுவே பழம் உதிர்சோலை.

## தமிழர்கள் செயல்நிலை பெறவேண்டும்..! எல்லாம் அவன் செயலென இருந்திட முடியாது..!

பக்தி இலக்கியங்களின் வடிவத்திலும் அதன் வெளிப்பாட்டு முறையிலும் பல சங்கதிகள் சிந்தனை பூர்வமாக, நற்சிந்தனை நயனமாக வெளிப்பட்டு நிற்கின்றன. அந்த வகையிலே திருநாவுக்கரசர் பாடிய கீழ்க்காணும் தாண்டகம் பல வியாக்கியானங்களைச் சொல்லியிருக்கிறது.

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணா தாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே..!

இந்த தாண்டகம் எளிமையாக அமைந்துள்ளது. எல்லாம் கடவுள் செயலே என்பதை ஒரு திருத்தாண்டகப் பாட்டில் மிக அழகாகப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர். திருநாவுக்கரசர் தாண்டகம் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதையும் தெளிவுபடுத்தி நிற்கின்றது. நீ ஆடச் செய்தால் அதற்குத் தகுந்தபடி ஆடாதவர் யார்..? நீ அடங்கச் செய்தால் அடங்காதவர் யார்...? நீ ஓடச் செய்தால் ஓடாதவர் யார்?... உருகச் செய்தால் உருகாதவர் யார்...? நீ காணச் செய்தால் காணாதவர் யார்...? நீ காட்டா விட்டால் காணவல்லவர் யார்..? என்ற கருத்து நிலை இறைவனை நோக்கியதாக பக்தியின் வழி தொக்கி நிற்கிறது. சங்க காலத்தின் வழிநிலைகளையும் இவை எடுத்தியம்பி நிற்கின்றண. குறிப்பாக சமண, பௌத்த மதச் சார்புகளின் இடைவிடாத திணிப்பான பரம்பல் நிலைகளே அவை. இந்த நிலையிலே எங்களுடைய தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ளன. அதன்வழி சொல்லொணா அழிவுகளை அவை வழங்கி தன்னலன் சார்ந்து அமர்ந்து கொண்டுள்ள அமைதியின் வடிவங்கள் என தங்களை வெளி நிறுத்தி காரிய சித்திகளைப் பெறுகின்ற ஆயுதம் ஏந்திய பௌத்தத்தின் பா(கா)வலர்கள் மீண்டும் கருத்தின் ஆவலுறல்களையும் திட்டமிட்ட திணிப்பான ஏவலுறல்களையும் சொல்லத் தொடங்கிவிட்டனர். 27 ஆண்டுகள் சொந்தப் பூர்வீக நிலங்களை விட்டகன்று அநியாயங்களின் சுமைகளை இன்னமும் சுமந்திருக்கும் மக்கள் கூட்டத்துக்குச் சுதந்திர விமோசனம் தராத வியாக்கியானங்களை விதண்டாவாதமாக்கியுள்ளனர்.
உண்மையிலே உரிமை வேண்டுதலோடு போராடிய தமிழினத்தை பயங்கரவாதம் என்றுரைத்து கொத்தாக அழித்தவர்கள் அந்தப் பணியைச் செவ்வனே செய்தவர்களாக பணி முடிந்ததென்று தங்கள் பூர்வீக நிலங்களை நோக்கி நடையை கட்ட வேண்டியவர்களே.! ஒன்றுகூடி தாங்கள் செய்துவிட்ட உரிமை மீறல்களுக்கான தண்டனைகளை அனுபவிக்க வேண்டியவர்களே.! அரச எதேச்சாதிகாரத்தின் ஏவல்களாக இன்னோரன்ன அழிவுகளின் பணிகளை ஈவிரக்கமின்றி புரிந்தவர்களாக இராணுவத்தினர் எந்தக் கருத்துரைகளையும் அறிவுரைகளாக அல்லது அறிவுறுத்தலாக சொல்லிவிட தகுதியற்றவர்கள்.!
இராணுவத்துக்கு அருகில் தமிழ்மக்கள் வாழலாம் என்ற யாழ். மாவட்ட இராணுவத் தளபதியின் கருத்துநிலை என்பது அவரது வார்த்தைகளில் வெளிப்பட்ட இதய சுத்தியான மனோபாவ வெளிப்பாடல்ல. கடந்த கால அனுபவங்கள் தமிழ் மக்களுக்கு தந்த பாடங்களின் பரந்த விதானிப்பு அதனையே மொழிந்துநிற்கிறது.! அதிலிருந்து விலகி நடந்திருக்க விரும்புகின்ற,தங்கள் பூர்வீகமான மன ஆதங்கங்களை வெளி நிறுத்துகின்ற மக்களை மீண்டும் மீண்டும் துன்புறுத்தக்கூடாது.! ஒவ்வாத வழக்கங்களை வார்த்தைகளில் சாட்டுதல் செய்து, திணிப்பதற்கு முனையக்கூடாது.! விலகி நடந்துகொள்ள வேண்டும்.! புரிந்து நடந்துகொள்ள வேண்டும்..!
ஆக, எங்கள் மூதாதையர்கள் பற்றிப் பேசுவதற்கும், படிப்படியாக பூர்வீக நிலங்களை விடுவிப்போம்,சில் இடங்களை விட முடியாது என்று சொல்லித்திரிவதற்கும் பொருத்தமானவர்கள் அல்ல இவர்கள்.! காலங்கடத்தாது நல்லாட்சி அரசின் வாய் மொழிதலாய் சொன்ன விடயங்களை கால வரையறைகளின் முடிவுறுத்தல்களினுள் செய்து முடித்துவிட்டு தங்களின் வழி சென்றுவிட வேண்டும்..! கால ஓட்டத்தில் அது சுமந்து நிற்கின்ற அனுபவங்களின் கனதியில் அவை சொல்லக்கூடிய அறிவுரைகள் இவையே...! நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம் என்று பாடிய உழவாரப் படை என்ற இரும்புக் கருவியின் துணைகொண்டு கோயிலைத் தூய்மை செய்தவர்; வழி வந்தவர்கள்...! அதன்வழி தியாகத்தின் கரம் பற்றியவர்கள்..! அழிவால் அமைதி கொண்டுள்ளோம்...! இருந்தும் தமிழ் மக்கள் சமூகமாய் செயல்நிலை பெற வேண்டும்.! எல்லாம் அவன் செயலென இருந்திட முடியாது.!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நீண்ட இடைவெளிக்கு பிறகு ஒரு பக்தி படம்



ஒரு காலத்தில் பக்தி சினிமாக்கள் ரசிகர்களிடையே குறிப்பாக பெண்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுவந்தன. ஆடிவெள்ளி, சமயபுரத்தாளே சாட்சி, சுவாமி ஐயப்பன், இப்படி வரிசையாகப் பல படங்கள் வந்தன. தொலைக்காட்சிகளின் வருகைக்கு பிறகு, பக்தி தொடர்கள் அதிகரித்து விட்டதால், பக்தி படங்கள் தயாரிப்பது நின்றுவிட்டது.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் வன பத்திரகாளி என்ற பக்தி திரைப்படம் தயாராகிறது. கே.எம்.ஏ. ஸ்ரீகலைவாணி மூவீசும், ஜே.எம்.பி. இண்டர்நஷனல் நிறுவனமும் இணைந்து இந்தப் படத்தை தயாரிக்கின்றன. மனீஷ், சந்தோஷ், சரவணன், பவித்ரா, சத்யா என்ற புதுமுகங்கள் நடிக்கிறார்கள். சந்தியா என்ற புதுமுகம் வன பத்திரகாளியாக நடிக்கிறார். டெல்லி கணேஷ் அவரது பக்தராக நடிக்கிறார்.

அம்மனுக்கும் அம்மனையே நம்பியிருக்கும் பூசாரிக்கும் இடையே நடக்கும் பக்திப் போராட்டம்தான் கதை. கடந்த 8 வருடங்களாக எந்த ஒரு பக்திப் படமும் வெளிவராத நிலையில் தற்போது இந்தப் படம் வெளிவரவுள்ளது. பேய் ஆட்சி செய்யும் சினிமாவில் இந்த அம்மன், அந்தப் பேய்களை விரட்டி தன் அருள் மழையைப் பொழிவாள் என்று நம்புகிறோம்–என்கிறார் இயக்குநர் கே.எம்.ஆனந்தன்.



நான் இன்றைக்கு இவ்வளவு சந்தோசமாக இருக்கிறதென்டால் அதுக்கு என் பொண்டாட்டி தான் சார் காரணம்...!
அந்த மகாலட்சுமியை நா இப்ப பார்க்கனுமே...
நேற்று பின்னேரம்தான் சார் அவங்க அம்மா வீட்டுக்குப் போனாங்க...!




விளம்பரம் போடும் போதெல்லாம் நாங்க சனலை மாத்திடுரோமே...
அப்புறம் ஏன் இவ்வளவு செலவு பண்ணி விளம்பரம் பண்ணுறாங்க... முட்டாபயலுங்க...!



சென்னை சொப்பிங் மால்ல ஒரு லிப்ஸ்டிக் 700-800 எண்டு போட்டிருக்கிறாங்க...
அடேய் வீடு முழுக்கப் பெயிண்ட் அடிக்க பெயிண்ட் வாங்கினாகூட அவ்வளவு வராதேடா...!

"இண்டு வீரர்கள் கத்தி சண்டை போட்டாங்க..."
"அப்படியா, அப்புறம் என்னாச்சு?" "இரண்டு பேருக்கும் கொண்டை கட்டிக்கிச்சி!"

WhatsApp



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அவசரப் பணியால் நெருக்கடிக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையை சந்தித்தாலும், வருமானம் குறையாது. உறவினர்களால் உதவி உண்டு.

**இடபம்:** நல்லவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் பரிசும், பாராட்டும் பெறுவர்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்பின் பயன் வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். விரைவில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கை அடைவதில் தாமதம் ஏற்படும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். கவனம்.

**சிங்கம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்ததை விட இலாபம் சற்றுக் குறையும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**கன்னி:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். புதிய முயற்சியால், கடினமான பணியும் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், சாதனை படைக்க வாய்ப்புண்டு. தாராள பணவரவு கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புத்துணர்வுடன் பணியாற்றுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் திருப்தியளிக்கும். சேமிப்பு உயரும். மனைவியின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள்.

**தனுசு:** லட்சிய நோக்குடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் படிப்படியாக உயரும். உடல்நலன் திருப்தியளிக்கும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் கிடைக்கும்.

**மகரம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். உறவினர்களால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு விரும்பிய பதவி கிடைக்கும்.

**கும்பம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். சுப விடயத்தில், எதிர்பார்த்த முடிவு அமையும். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் அதிகரிக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மீனம்:** குடும்பத்தினரின் ஆதரவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பிறருக்காகப் பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | 2 | 4 | | |
| | | | | | 5 | | | 9 |
| | 3 | | | 7 | | | | |
| | 2 | | 3 | | | | 1 | |
| | | | 1 | | | 6 | | 7 |
| 8 | | | 7 | 6 | | | | |
| 4 | | | | | 3 | 8 | | |
| | | 5 | | | | | | 1 |
| 9 | | | 5 | | | 7 | | |


## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 7 | 9 | 1 | 3 | 8 | 6 | 2 |
| 3 | 6 | 1 | 2 | 8 | 4 | 7 | 5 | 9 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 4 |
| 5 | 1 | 3 | 6 | 9 | 7 | 4 | 2 | 8 |
| 7 | 8 | 4 | 1 | 3 | 2 | 5 | 9 | 6 |
| 6 | 2 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 | 3 |
| 1 | 3 | 2 | 5 | 4 | 9 | 6 | 8 | 7 |
| 8 | 7 | 5 | 3 | 2 | 6 | 9 | 4 | 1 |
| 9 | 4 | 6 | 8 | 7 | 1 | 2 | 3 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேங்காய் கேக்

**தேவையான பொருள்கள்**

தேங்காய் துருவல் – 100 கிராம்
கோதுமை மா – 200 கிராம்
வெண்ணெய் – 100 கிராம்
சீனி – 100 கிராம்
பேக்கிங் பவுடர் – 1 தேக்கரண்டி
வெனிலா எசன்ஸ் – சிறிதளவு

செய்முறை :

கோதுமை மாவுடன் பேக்கிங் பவுடரைச் சேர்த்து அரிக்கவும். ஓர் அகலமான பாத்திரத்தில் வெண்ணெய், பொடி செய்த சீனி இரண்டையும் சேர்த்து நன்கு குழைக்கவும்.

அதில் கோதுமை மா, தேங்காய் துருவல் இரண்டையும் மாறி, மாறி சிறிது, சிறிதாகச் சேர்த்து ஒவ்வொரு முறையும் நன்கு குழைக்கவும்.

கோதுமை, தேங்காய் துருவல் முழுவதையும் சேர்த்து குழைத்த பின் சிறிதளவு எசன்ஸ் சேர்த்து நன்கு குழைக்கவும்.

அதன் பிறகு சிறு, சிறு உருண்டைகளாக வேண்டிய வடிவத்தில் செய்து நெய் தடவிய தட்டில் வைத்து கேக் ஓவனில் வேக வைக்கவும். தேங்காய்க் கேக் தயார்.




## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | – |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 600 | 450 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 600 | 500 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 350 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 400 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | – | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 600 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 300 | – |






பிரின்ரட் அரைப் பாவாடைகள் அறிமுகமாகியுள்ளன. பொதுவாகத் தனி வண்ணங்களில் மேற்கத்தைய பாவாடைகள் இருக்கும். பிரின்ரட் டிசைன்களில், இறுக்கமான, அரைப்பாவாடை அறிமுகமாகியுள்ளது. இவற்றுக்குத் தனி வர்ண பிளவுஸ், ரீசேட் பொருத்தமாக அமையும். இந்தப் பாவாடைகள் ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | [illegible] | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 50 | 50 | 60 | 60 | 40 | 40 | 90 | 40 |
| கரட் | 80 | 120 | 120 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 60 | 70 | 60 | 60 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 120 | 70 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | 160 | 80 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 90 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 30 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 40 | 60 | 60 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 100 | 100 | 60 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 80 | 80 | 80 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 80 | 70 | 100 | 100 | 120 | 90 | 80 |
| வெண்டி | 100 | 60 | 80 | 80 | 40 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 180 | 160 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 200 | 300 | 120 | 220 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 160 | 120 | 100 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 180 | 150 | 200 | 240 | 80 | 40 | 80 | 50 |

## நாளை

ஆவணி-25
சனிக்கிழமை
-10.09.2016
திதி: நவமி பி.இ.04.38
நட்சத்திரம்: மூலம்
முழுவதும்
ராகுகாலம்:
09.03-10.33 வரை
சுபநேரம்:
03.03-04.33 வரை
ஆவணி மூலம்

## சமையலறைத் துவாய்களை சுத்தமாக வைத்திருப்பது எப்படி?

- பொதுவாக வெண்ணிற 100 வீதமான கொட்டன் துவாய்களை உபயோகிக்க வேண்டும். அவை விரைவில் அழுக்காகி விடும் என நினைப்பர். மேலும் அதில் உள்ள கறை, தெளிவாகத் தெரியும். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வெண்மையை எளிதில், வெளுத்து பளீச்சென்று ஆக்கி விடலாம். இதனால் எளிதில் துவாயை சுத்தப்படுத்தலாம். வண்ணத் துணிகளைப் போல, கடுமையான சலவைக்குப் பின், இதில் சாயம் போகாது.
- சமையலறையில் பயன்படுத்தும் துண்டை சுடு தண்ணீரால் சுத்தம் செய்வது என்பது கட்டாயமான ஒன்று. இதற்குப் பிறகு நீங்கள் ப்ளீச்சை உபயோகப் படுத்தலாம், இதிலிருந்து வரும் கெட்ட மணத்தையும் போக்கி மற்றும் புதிய வாசனையையும் அது உங்களுக்கு தரும். வினிகர் அல்லது பேக்கிங் சோடா போன்றவற்றை இதற்கு மாற்றாக உபயோகிக்கலாம். ஆனால் இதை சேர்த்து உபயோகிக்கக்கூடாது என்று நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
- சமையலறையில் பயன்படுத்தும் துண்டைத் துவைப்பதற்கு துணி மென்மையாக்கிகளை உபயோகிக்கக்கூடாது, இதை நீங்கள் எப்படிச் சோதித்து இருந்தாலும், இதை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. இதைச் சேர்ப்பதன் மூலம் தேவை இல்லாத இரசாயனத்தின் மேல் பூச்சின் மூலம் துண்டின் உறிஞ்சும் தன்மையைக் குறைக்கிறது.
- சமையலறையில் பயன்படுத்தும் துண்டை துவைப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டிய மற்ற விடயங்கள் என்னவென்றால், நீங்கள் நல்ல ஸ்பாட் அல்லது கறை தூய்மையாக்கியை உபயோகிக்கலாம். துவாயைக் கழுவ மற்றும் துவைப்பதற்கு முன்னர் தண்ணீரில் 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவளப்பாறைகளுக்கு புத்துயிரூட்டும் டோக்கியோ சிமெந்து குழுமம்



கடல் வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்தல் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட், டோக்கியோ சிமெந்து நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.
இதன்மூலம், கடல்சார் வளங்களைப் பாதுகாப்பது தொடர்பில் தீர்மானமெடுத்தல்களில் முக்கிய பங்களிப்பை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், உள்நாட்டுச் சமூகங்கள் மத்தியில் கல்விசார் நிகழ்ச்சிகள், விழிப்புணர்வை கட்டியெழுப்புதல் மற்றும் சிறந்த பங்காண்மைகளை ஊக்குவித்தல் போன்றன முன்னெடுக்கப்படவுள்ளன.
மூன்றுவருட காலப்பகுதிக்கு பல மில்லியன் ரூபா முதலீட்டில் டோக்கியோ சிமெந்து முன்னெடுத்து வரும் பவளப்பாறைகளை மீள வளர்க்கும் செயற்பாடுகளுக்கு ப்ளு ரிசோர்சஸ் ஆய்வு நிபுணத்துவம் பங்களிப்புக்களை வழங்கும் என்று கூறப்பட்டுள்ளது.
இலங்கையின் கிழக்கு கரையோரப் பகுதியில் டோக்கியோ சிமெந்து முன்னெடுத்து வரும் கடல் பவளப் பாறைகள் புனருத்தாரண செயற்பாடுகளுக்கு இந்தப் பங்காண்மையின் ஊடாகப் பிரதான பங்களிப்புகள் வழங்கப்படவுள்ளன. கடந்த சில வருடங்களில், டோக்கியோ சிமெந்து நிறுவனம், நாடு முழுவதிலும் காணப்படும் இயற்கைப் பவளப்பாறைகளைக் மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.
இந்தச் செயற்பாடுகளுக்கான வளங்களை வழங்குவதில் நிறுவனம் முன்னோடியாகத் திகழ்வதுடன், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த செயற்பாடுகளுக்கு துறை சார்ந்த அமைப்புக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதில் முன்னணியில் திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.
இதற்கமைய, இதுவரை டோக்கியோ சிமெந்து நிறுவனம், வன ஜீவராசிகள் பாதுகாப்பு நிதியம், கடற்படை மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுடன் பங்காண்மைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு வெவ்வேறு பிரிவுகளில் நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது. ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் இணை ஸ்தாபகர் டானியல் பெர்னாண்டோ இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையில்,
டோக்கியோ சிமெந்து நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதன் மூலம், இலங்கையின் பவளப்பாறைகளைப் பாதுகாப்பது தொடர்பில் ஆய்வு மற்றும் காப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.
அபிவிருத்தித் திட்டங்கள் துரிதகதியில் முன்னெடுக்கப்படும் போது, இலகுவில் அழியக்கூடிய ஆபத்தை எதிர்கொண்டுள்ள இந்தச் சூழல்கள் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆனாலும், பவளப் பாறைகள் எமது சூழல் சமநிலையில் முக்கிய பங்கை வகிப்பதுடன், கரையோர மற்றும் கடல் வளங்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன.
இந்தப் பங்காண்மையின் மூலமாக, துறையுடன் விஞ்ஞான ரீதியான பாதுகாப்பை ஒன்றிணைப்பதுடன், பவளப்பாறைகளை பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும்-என்றார். (த)

## நுட்பம்



### அப்பிளுடன் போட்டியிடும் எல்ஜி

அப்பிள் நிறுவனம் தனது புதிய தொடுபேசியான ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7 பிளஸ் என்பவற்றை அறிமுகம் செய்துள்ளது.
அவற்றை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் கொள்வனவு செய்து கொள்ள முடியும்.
இந்தக் கைப்பேசிகளுடன் போட்டி போடும் வகையில் எல்ஜி நிறுவனம் புத்தம் புதிய தொடுபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது.
எல்ஜி வீ20 எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த கைபேசி 5.7 அங்குல அளவுடையதும் 2560 X 1440 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளது.
பிரதான நினைவகமாக 4ஜிபி ரம் மற்றும் 64ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.
தலா 8 மற்றும் 16 மெகாபிக்சல்களை உடைய கமராக்கள், 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புகளை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் கொண்டுள்ளன.
இந்த மாத இறுதிக்குள் அறிமுகம் செய்யப்படவுள்ள குறித்த கைப்பேசியின் விலை உட்பட ஏனைய தகவல்கள் எதிர்வரும் நாள்களில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

### உதவியாளராக மாறும் கார்

கார் உரிமையாளர் தனது சாரதியிடம் கூறி, சொந்தத் தேவைகளை நிறைவேற்றும் காலத்துக்கு விடை கொடுக்கின்றது மெர்சிடீஸ் பென்ஸ் நிறுவனம்.
இந்த நிறுவனத்தின் எதிர்கால கார்கள் சாரதி இல்லாமல் இயங்குவதோடு, உரிமையாளர்களுக்கு சேவகர்கள் போன்று காரியங்களை தானாக நிறைவேற்றும்.
பெர்லின் நகரில் இடம் பெற்ற இலத்திரனியல் மாநாட்டில், பார்க் கிங் இடங்களை தானாக கண்டுபிடிக்கக் கூடிய மெர்சிடீஸ் பென்ஸ் கார் இயக்கிக் காண்பிக்கப்பட்டது.
எதிர்காலத்தில் சென்சர்களைப் பயன்படுத்தி, காரில் இருப்பவர்களின் உடல் நிலை அறிந்து, அதற்கேற்றவாறு சூழ் நிலைகளை மாற்றக்கூடிய தொழில் நுட்பம் சேர்க்கப்படும் என கலாநிதி டியற்றர் ஸெட்சே தெரிவித்தார்.
உலகின் பல்வேறு நிறுவனங்களும் தானாக இயங்கக் கூடிய கார்களை தயாரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.



### தேசிய வனங்கள் மூலம் ஒருநாள் வருமானம் 20 மில்லியன் ரூபா



தேசிய வனங்கள் மற்றும் பூங்காக்களினூடாக நாளொன்றுக்கு 20 மில்லியன் ரூபா வருமானம் கிடைப்பதாக வனஜீவிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்த வருட இறுதிக்குள் இந்தத் தொகையை 23 மில்லியன்களாக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.
உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தேசிய வனங்களைப் பார்வையிடுவதற்கு அதிகளவில் வருகை தருகின்றமையே இந்த வருமான அதிகரிப்புக்குக் காரணம் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.
இதன் ஊடாக நாட்டுக்குப் பெரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் துறையாக இந்த துறை மாற்றமடைவதாகவும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா கூறியுள்ளார். (த)

### நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -385.84 |
| ஐ.இராச். (பவுண்டு) | - 194.26 |
| ஐரோப்பியா (யூரோ) | -163.92 |
| சுவிஸ் (பிராங்) | -150.15 |
| ஐ.அமெ.(டொலர்) | -145.44 |
| கனடா(டொலர்) | -113.15 |
| ஆஸி.(டொலர்) | -112.40 |
| சிங்கப்பூர் (டொலர்) | -108.04 |
| கட்டார் (ரியால்) | -39.95 |

### கடலுணவு வருமானம் உயர்வு


ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குக் கடந்த இரண்டு மாதக் காலப்பகுதியில் 600 மெற்றிக் தொன் கடலுணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
கடந்த ஜுன் மாதம் 21ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 14ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த அளவு ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம், கடந்த ஆறு மாதக் காலப் பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட கடலுணவுப் பொருள்களின் ஊடாக, இலங்கைக்கு 11 ஆயிரத்து 88 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

8/9/2016
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -6.09 | 6,501.89 | 6,507.98 |
| S&P SL20 | -4.20 | 3,579.28 | 3,583.48 |
| வியாபாரப்புரள்வு | | 758,449,631 | 500,407,296 |
| உள்நாடு- கொள்வனவு | | 485,341,550 | 370,018,560 |
| விற்பனை | | 462,605,585 | 402,902,752 |
| வெளிநாடு- கொள்வனவு | | 273,108,081 | 130,388,736 |
| விற்பனை | | 295,844,046 | 97,504,536 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் - கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டிஸ்டில்லரீஸ் நிறுவனம் | DIST.N | 261 | 893,058 | 233,211,754 |
| பர்ஸ்ட் கேப்பிடல் | CFVF.N | 31.8 | 2,490,054 | 82,798,000 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் | CCS.N | 630 | 84,135 | 51,189,771 |
| செலிங்கோ காப்புறுதி | CINS.X | 726 | 44,903 | 32,599,582 |
| அக்சஸ் இஞ்சினியரிங் | AEL.N | 26 | 1,151,661 | 30,037,434 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 149.4 | 172,518 | 25,825,592 |
| சம்பத் வங்கி | SAMP.N | 255 | 76,185 | 19,420,662 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 46.50 | 344,425 | 16,183,208 |
| டுனாமிஸ் கேப்பிடல் | CSEC.N | 26 | 528,102 | 15,101,092 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N | 93.5 | 157,788 | 14,922,111 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
பான்ஏசிய பவர் (PAP) - பங்கு ஒன்றிற்கு Rs. [illegible]
ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் [illegible]
கொத்மலை ஹோல்டிங்ஸ் (LAMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.20

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| [illegible] | 295 |
| [illegible] | 224 |
| [illegible] | 13.39 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3.03 |

147-2/3, K.K.S Road Jaffna - 2122221455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவின்...

அறிவித்தனர். இந்தக் குழாமில் நீதிபதிகளான ஷிரான் குணரத்ன, பத்மினி ரணவக்க குணதிலக மற்றும் சீ.பீ.எஸ். மொராயஸ் ஆகியோர் இடம்பெற்றனர்.

மகிந்த ஆட்சியில் 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது கொலன்னாவ பிரதேசத்தில் இரு குழுக்களுக் கிடையில் நடைபெற்ற மோதலின்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இந்த மோதலில் படுகாயமடைந்த துமிந்த சில்வா சிங்கப்பூர் வைத்தியசாலையில் ஒருவருடத்துக்கு மேலாக சிகிச்சை பெற்றிருந்தார்.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக 17 குற்றச்சாட்டுகள் முன்வைத்து சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை ஐந்து வருடங்களாக இடம்பெற்று வந்தது. இந்த விசாரணைகள் கடந்த ஜூலை 14ஆம் திகதியுடன் நிறைவடைந்தன. தீர்ப்பு நேற்று வழங்கப்படும் என்ற அன்றைய தினமே மன்று அறிவித்தது.

அதன்படி துமிந்த உள்ளிட்ட 5 பேரும் நேற்று மன்றில் முன்னிலையாகினர். குற்றஞ்சாட்டப்பட்ட துமிந்த சில்வா உட்பட 5 பேருக்கும் சாவுத் தண்டனைத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. ஏனைய எட்டு எதிரிகளும் தலா 45 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

வழக்குத் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவந்த காலத்தில் கொலையாளிகளை அடையாளம் காட்டாமல் இருப்பதற்கான பல சதி முயற்சிகள் இடம்பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக கொலையின் முக்கிய சந்தேகநபரான தெமட்டகொட சமிந்த நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. துமிந்த சில்வா, அனுர துஷார டிமெல், தெமட்டகொட சமிந்த, சரத் பண்டார மற்றும் பிரயந்த ஜானக பண்டார ஆகியோருக்கே தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. ஐந்தாவது சந்தேகநபரான பிரியந்த ஜனக பண்டார வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகாது தலைமறைவாகியுள்ளார். இவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (வ-4)

## மன்னார்...

ஒவ்வொரு நாளும் விபத்துக்களால் உயிரிழப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், மன்னார் - அடம்பன் வெள்ளாங்குளத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர். வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த சேகர் றமணன் (வயது - 34), பன்னாங்கண்டி கிளிநொச்சியைச் சேர்ந்த சாந்தன் (வயது - 32) ஆகியோரே உயிரிழந்தனர்.

அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட முழங்காவில் - துணுக்காய், வெள்ளாங்குளம் வீதியில் 33ஆவது கிலோ மீற்றருக்கு அண்மையில் உள்ள காட் டுப் பிரதேசத்தினுள் உள்ள மணல் குவாரிக்குச் செல்லும் பாதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது எதிரே வந்த டிப்பர் வண்டி மோதியதிலேயே இருவரும் உயிரிழந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதியில் உள்ள மணல் குவாரியில் வாகனம் பழுதடைந்தமையினால் அதனைச் சீராக்க திருத்துநரைத் தொலைபேசியில் அழைத்துள்ளனர். அதன் பிரகாரமே இரு திருத்துநர்களும் ஒரு மோட்டார் சைக்கிளில் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். அவ்வாறு சென்ற வேளையில் எதிரே மணல் ஏற்றி வந்த டிப்பருடன் மோதுண்டு உயிரிழந்ததாக, ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தினை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சாரதி, டிப்பரை நிறுத்தாது தப்பியோடியுள்ளார். சம்பவம் தொடர்பில் இலுப்பைக் கடவைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விரைந்து செயற்பட்டு விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற டிப்பர் வண்டியினை பூநகரிப் பகுதியில் வைத்து மடக்கினர்.

விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற நீதிவான் உத்தரவிற்கமைய சடலம் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் 23 ஆம் திகதி மடுவிலும், 30 ஆம் திகதி கோப்பாய் மற்றும் காங்கேசன்துறையிலும், இந்த மாதம் 4 ஆம் திகதி கோண்டாவில் மற்றும் ஆனையிறவிலும், 5 ஆம் திகதி முல்லைத்தீவில் இருவரும், 6 ஆம் திகதி கோப்பாயிலும், 7 ஆம் திகதி கிளிநொச்சி மற்றும் தெல்லிப்பழையிலும் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரவு ஒருவருமாக 11 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்தனர். (வ-5-101)

## போலிச்...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நியமனம்பெற்று ஆசிரியர்களாக சேவையாற்றியவர்களே இவ்வாறு இனம் காணப்பட்டனர். சேவைக் காலத்தில் சேவையை நிரந்தரமாக்குவதற்கு சான்றிதழ் உறுதிப்படுத்தல் நடைமுறை இடம்பெறும். இதற்காக அவர்களின் சான்றிதழ் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்படும்.

இவ்வாறு அனுப்பப்படும்போதே 20 ஆசிரியர்கள் போலிச் சான்றிதழ் சேர்ப்பித்தமை கண்டறியப்பட்டது. இதில் இருவர் அதிபராகவும் தேர்வாகியிருந்தனர். 20 பேரில் ஆசிரியைகளும் உள்ளடங்குகின்றனர்.

போலிச் சான்றிதழ் என்று இனம் காணப்பட்ட அனைவரும் பணியில் இருந்து நீக்கப்பட்டதோடு, அவர்கள் சேவையாற்றிய காலத்தில் பெற்ற அரச கொடுப்பனவுகள் அனைத்தும் மீளச் செலுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்த இணங்கியவர்கள் தவிர மறுப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார். (வ-5-101)

## கிறிஸ்தவ...

சிறிசேன தலைமையில், போதையிலிருந்து விடுதலையான நாடு, ஜனாதிபதி போதைப் பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் எட்டாவது மாவட்ட வைபவம் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

யாழ். பொதுநூலகத்துக்கு அருகிலுள்ள திறந்த வெளியரங்கில் இன்று காலை 10 மணிக்கு, ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கான அழைப்பிதழ், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகனினால் அனுப்பி வைக்கப்பட்டது.

அழைப்பிதழின் முகப்பில் யாழ்ப்பாணத்தில் இந்துக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் நல்லூர் கந்தசுவாமி கோயிலின் ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் புத்த பெருமானின் படமும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 466 இந்துக் குடும்பங்களும், அதற்கு அடுத்தபடியாக 26 ஆயிரத்து 932 கிறிஸ்தவக் குடும்பங்களும், மூன்றாவது நிலையில் 2 ஆயிரத்து 178 முஸ்லிம் குடும்பங்களும், 109 பௌத்த குடும்பங்களுமே வசிப்பதாக மாவட்டச் செயலக புள்ளி விபரக் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், கிறிஸ்தவ - இஸ்லாம் மதங்கள் அழைப்பிதழில் புறந்தள்ளப்பட்டுள்ளமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. (வ-5)

## கனகபுரம்...

துயிலும் இல்லத்தில் இருந்து இராணுவத்தினர் முழுமையாக வெளியேறினர். எனினும் தற்போது சுமார் பத்து ஏக்கர் காணியே இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு பிரதேச செயலரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது துயிலுமில்லமாக ஆரம்பிக்கப்பட்ட கனகபுரம் துயிலிமில்லமே இவ்வாறு கையளிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு இராணுவத்தினர் துயிலுமில்லத்தில் இரவோடு இரவாக இரண்டு அடுக்கு வேலிகள் அமைத்து முகாம் அமைத்திருந்தனர். கல்லறைகளுக்கு மேல் கழிப்பறைகளும், கட்டடங்களும், அமைக்கப்பட்டு இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர். கடந்த வாரம் முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம் விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலுமில்லமும் விடுவிக்கப்பட்டது.

எருக்கன் பற்றைகளால் சூழ்ந்து காணப்படும் மாவீரர் துயிலுமில்லத்தில் கல்லறைகள் உடைக்கப்பட்டு பொது மக்களின் காணிகளுக்குள்ளும், மாவீரர் துயிலுமில்லக் காணியிலும் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே விடுவிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லக் காணியை அமைதியான முறையில் பேணுவதற்கும்,அங்கு முதற்கட்டமாக மரங்கள் நாட்டப்பட்டு பசுமை பிரதேசமாக மாற்றியமைப்புதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். (வ-4,101)

## புனர்வாழ்வுக்கு...

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டது. புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட 2 ஆயிரத்து 963 பேர் யாழ். மாவட்டத்தில் உள்ளனர். இவர்களில் 615 பேர் பெண்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து புனர்வாழ்வு பெறாத 275 பேர் வடக்கில் இன்னமும் இருக்கின்றனர். இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தாமாக முன்வந்து இவர்கள் சரணடையவில்லை. இருப்பினும் இவர்களால் தேசிய பாதுகாப்புக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எதுவித அச்சுறுத்தலும் இல்லை என்றார் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி. (வ-5)

## யாழ். ...

பொலிஸ் நிலையத்துக்கும், யாழ். மாநகர சபைக்கும் இடையிலான இடைவெளி கழிவு வாய்க்கால் மட்டும்தான். யாழ். மாநகர சபையிலிருந்து சம்பவதினம் இரவு 12.30 மணிக்கு பொலிஸ் நிலையம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். சுமார் 3 மணி நேரம் இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இதில் பொலிஸ் நிலையம் பெரும் சேதத்துக்கு உள்ளாகியது. யாழ். மாநகர சபையும் சேதமடைந்தது. இதன் பின்னர் பொலிஸார் கோட்டைப் பகுதிக்குள் சென்றுவிட்டனர். 1985ஆம் ஆண்டுடன் பொலிஸ் நிலையம் முழுமையாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் பொலிஸ் விடுதியில் தங்கியிருந்து 1990ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டாலும், கோட்டைத் தாக்குதலுடன் இங்கிருந்து பொலிஸ் நிலையம் முழுமையாக அகற்றப்பட்டு விட்டது என்று அப்போதைய யாழ். மாநகர சபை ஆணையாளரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார். இந்தப் பொலிஸ் நிலையமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இன்று திறக்கப்படவுள்ளது. புதிய பொலிஸ் நிலையத்துக்கான அடிக்கல் 2012ஆம் ஆண்டு நடப்பட்டது. (வ-5)

## கிளிநொச்சியில்...

யதனாலேயே விபத்துக்குள்ளானதாக அவர்கள் வைத்தியசாலையில் தெரிவிக்கின்றனர். ஆனால் அவர்கள் காயமடைந்திருந்த இடத்துக்கும் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கும் இடையே சுமார் 100 மீற்றர் தூரம் இருக்கும். அதனால் அவர்கள் மோதி விபத்துக்குள்ளாகிப் பின்னர் 100 மீற்றர் தூரத்துக்குப் பயணித்து மேற்கொண்டு பயணிக்க முடியாது அந்த இடத்தில் விழுந்தனரா? அல்லது அவர்கள் நாயுடன் மோதுண்டிருந்தால், சடலமாக மீட்கப்பட்டவரை மோதியது வேறு வாகனமா என்று? என்ற அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

கிளிநொச்சி - கண்டாவளை, வெலிக்கண்டல் பகுதியில் விபத்து நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. நேற்றுக் காலை சடலம் மீட்கப்பட்டது. சாவகச்சேரி - கச்சாய் வீதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான தியாகராசா செலஸ்ரீன் (வயது - 43). சுமார் 100 மீற்றர் தூரத்தில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். அவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (வ-4,5,ரி3,34)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
05.03.1929



மறைவு
08.08.2016

அமரர் விநாசித்தம்பி செல்லையா

கடந்த 08.08.2016 அன்று அமரத்துவம் அடைந்த விநாசித்தம்பி செல்லையா அவர்களின் மரணச்செய்தி அறிந்து அனுதாபம் மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இன்று (09.09.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

No.76, பருத்தித்துறை வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(J4417) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கண்டறிந்தது. அவற்றை மூடுவதற்கான உத்தரவை வழங்குமாறு கோரும் மனுவை இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவிடம் அதிகாரிகள் கையளிக்கின்றனர்.

'போதையற்ற நாடு' நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறுகிறது. அதில்கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதியிடம் காண்பிக்கும் நோக்கில், ஜீ.பி.எஸ் தொழில் நுட்பம் மூலம் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் போதே மேற்படி விடயம் கண்டறியப்பட்டது.

இவற்றில் பாடசாலைகளில் இருந்து 200 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தில் மட்டும் குடாநாட்டில் 34 மது பானச்சாலைகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டதுடன், குடா நாட்டின் முக்கிய நீதிமன்றம் ஒன்றில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் ஒரு மதுபானச் சாலையும் மாவட்டச் செயலக அருகில் ஒன்றும் உள்ளது.

இவ்வாறு அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட வீடியோ ஒளிப்பட நாடா இன்று திரையிடப்பட்டு ஜனாதிபதி உள்ளிட்டவர்களுக்கு குடாநாட்டில் போதைப் பொருள் அதிகரிப்பின் தாக்கம் தொடர்பில் நேரில் எடுத்துக் கூறப்படவுள்ளதுடன் ஏனைய போதைப்பொருள் தொடர்பான தகவல்களும் தெரிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,10ர)

## காணாமற்போனோர் சட்டத்தில் கையொப்பமிட்டார் கரு

கொழும்பு, செப். 9

காணாமற்போனோரைப் பதிவு செய்வதற்கும், காணாத சான்றிதழை வழங்குவதற்கும் வழி வகுக்கும் இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய கையொப்பமிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய போது, சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சட்டவரைவு கடந்த மாதம் வாக்கெடுப்பின்றித் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. சட்ட வரைவொன்று நாடாளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னரே அது சட்டமாக மாற்றமடையும். (வ-4)

## பொலிஸ் விசாரணையில் பாடசாலை அதிபர்

யாழ்ப்பாணம், செப். 9

மாணவன் ஒருவரைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அதிபர் பொலிஸ் விசாரணையை எதிர் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட கொக்குவிலில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபரே இவ்வாறு விசாரணையை எதிர் கொண்டுள்ளார்.

முன்னர் ஒரு சம்பவத்தில் மாணவனை அடித்துத் துன்புறுத்தியதாகக் குற்றஞ்சாட்டி மாணவனின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், அவர் விசாரணைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## சீல் வைக்கப்பட்ட மருத்துவ நிலையம் மீளத் திறப்பு

கிளிநொச்சி, செப். 9

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் கருக்கலைப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டு கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவிற்கு அமைய் சீல் வைத்து மூடப்பட்ட மருத்துவ நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் தருமபுரம் பகுதியில் உள்ள மருத்துவ நிலையம் ஒன்றில் சிறுமி ஒருவருக்கு கருக்கலைப்புச் செய்யப்பட்டதாக, அந்தச் சிறுமியே அளித்த வாக்கு மூலத்திற்கு அமைவாக தருமபுரம் பொலிஸாரால் குறித்த மருத்துவ நிலைத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணைகள் முடியும் வரை குற்றம் சாட்டப்படும் மருத்துவ நிலையத்தை சீல் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் மன்று கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி உத்தரவிட்டது.

அத்தோடு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரிகள், மற்றும் பொலிஸ் சோகோ பிரிவினரால் குறித்த மருத்துவ நிலையத்தில் கருத்தடை சம்மந்தமான ஏதேனும் ஆதாரங்கள் உள்ளனவா என ஆராய்ந்து நீதிமன்றில் அறிக்கை முன்வைக்குமாறு கட்டளையிட்டது.

நீதிமன்றப் பணிப்புக்கு அமைய கடந்த மாதம் 12ஆம் திகதி குறித்த பிரிவினர் அறிக்கை ஒன்றை முன் வைத்தனர். அந்த அறிக்கை கருக்கலைப்பிற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என அமைந்திருந்தது. கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் மீண்டும் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது கருக்கலைப்புக்கான எதுவித தடையப் பொருள்களும் காணப்படாத காரணத்தால், சீல் வைக்கப்பட்ட மருத்துவ நிலையத்தை மீளத் திறந்து நடத்துவதற்கு கிளிநொச்சி நீதிவான் மன்று அனுமதி வழங்கியது.

கடந்த செவ்வாய்க்கிழமை மருத்துவ நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது. அத்தோடு கருக்கலைப்புத் தொடர்பாக தருமபுரம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (வ-21,ரி3)

# கொக்கிளாய் விகாரை நிர்மாணம் குறித்து நாளை கலந்துரையாடல்

முல்லைத்தீவு, செப். 9

கரைதுறைப்பற்று, கொக்கிளாய் கிராமத்தில் தனியாருடைய காணியில் நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மு.ப 10 மணியளவில் முள்ளியவளை தண்ணீரூற்றில் அமைந்துள்ள புனித மத்தேயு ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். அனைத்து மதக்குழு இணைப்பாளர் அருட்தந்தை ஐ.டி.டிக்சன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கொக்கிளாய் பௌத்த விகாரை பிக்கு திஸ்ஸபுர ஞானரத்தன தேரர், தென்பகுதி பௌத்த தேரர்கள், யாழ்ப்பாண ஸ்ரீ நாகவிகாரை தேரர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயக் குருமுதல்வர் சிவ ஸ்ரீ சிவ கந்தராசக் குருக்கள், ஜம் இய்யதுல் உலமா சபை தலைவர், வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-ரி7)

நியூ ஆனந்தபவான்
A9 Road, Kaithady (தெருப்பிள்ளையார் கோயில் முன்பாக)
சமையல் வேலையாள்கள் தேவை.
சம்பளம் நேரில் கதைத்து தீர்மானிக்கப்படும்.
தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்புக்கு:
077 293 8418 / 077 863 4039
(J 4441)(10.18)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
14.07.1933
மறைவு
11.08.2016

கடந்த 11.08.2016 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

தமிழ்மணி
**இராமலிங்கம் சண்முகம்** [நடராசா]

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை [10.09.2016] சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது அன்புத்தெய்வத்தின் மரணச் சடங்கில் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உறுதுணை புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

324, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.லை. இல. 077 332 2791, 021 221 9492
குடும்பத்தினர்.

## நன்றி நவிலல்

கடந்த 09.08.2016 இல் சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப தலைவர்

**அமரர் செல்லத்துரை சோமசுந்தரம்**



அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்த காலத்தில் சேவை செய்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார், உதவியாளர்கள், மற்றும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், தூரதேசத்தில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள், மலர்செண்டுகள், வைத்தவர்கள், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டோர்க்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
சித்தன்கேணி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் தனராணி

பிறப்பு
1947 . 07 . 23



இறப்பு
2016 . 09 . 08

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் சிவன்கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் தனராணி நேற்று (08.09.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராஜா பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் செல்லம் மா தம்பதியரின் அன்பு மருமகளும், வரலட்சுமி, கம்சன், ஹரிகரன், வைகுந்தவாசன், ஸ்ரீனிவாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரன், புஸ்பரஞ்சினி, சிவரஞ்சினி, மாதங்கி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், மோகனராசா, சங்கீதா, கோளமலர், தனராசா, கோவையரசி, அபிஷாலினி, ஆதர்ஷா, அஸ்மிதா, அனசா, துவாரகன், திவ்வியன் ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், சங்கரலிங்கம், சொரூபராணி, காலஞ்சென்ற தியாகலிங்கம், யோகராணி ஆகியோரின் சகோதரியும், தங்கம்மா, சரவணமுத்து, ஆறுமுகம், திருநீலகண்டன், மதனகுமார், காலஞ்சென்ற உதயகுமார், மீனாட்சி, தனலட்சுமி, கதிரவேலு, காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி, சிவ பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2016) மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானதத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித் தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவிலடி காரைநகர். தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாறியிருக்காவிடின் தீர்ப்பும் மாறியிருக்கும்

## கண்ணீருடன் தெரிவித்தார் ஹிருணிகா

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின் எனது தந்தையின் படுகொலை வழக்கின் தீர்ப்பும் மாறியிருக்கக்கூடும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கண்ணீருடன் தெரிவித்தார்.

அவரது தந்தையான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலைவழக்கின் தீர்ப்பு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட ஐவருக்கு சாவுத்தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மேற்கண்டவாறு தெரிவித்தார். எனது தந்தையின் கொலைக்குப் பின்னர் ஐந்து வருடங்களாக நானும், எனது தாயும் நித்திரை இன்றித் தவித்தோம். வீடு செல்லும் போதெல்லாம் தந்தையின் ஞாபகம்தான் வரும். இந்தத் தீர்ப்புக்காக ஐந்து வருடங்கள் காத்திருந்தோம். எனது தந்தையின் கொலையாளிகளுக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டமை நியாயமான தீர்ப்பாகும். இன்று எனது தந்தையின் ஆத்மா சாந்தியடைந்திருக்கும். நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின், இந்தத் தீர்ப்பும் மாறியிருக்கக் கூடும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசுக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன் – என்றார். (வ-4)

# நீதிமன்றுக்கு முன்னால் பொலிஸாருக்கே உச்சியவர்கள் கைது

யாழ்ப்பாணம். செப்.9

யாழ்.நீதிமன்றுக்கு முன்னால் பொலிஸாருக்குத் தண்ணி காட்டியவர்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

நேற்று யாழ்ப்பாண நீதிமன்றில் காலையில் வழக்கு நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது, நீதிமன்றுக்கு முன்னால் உள்ள வீதியால் பொலிஸாரின் வீதித் தடைகளைத் தாண்டி இலக்கத் தகடற்ற புதிய மோட்டார் சைக்கிளொன்றில் தலைக்கவசமின்றி வேகமாக இரண்டு இளைஞர்கள் உள் நுழைந்தனர். பொலிஸார் அவர்களை மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு தடுத்த போதும், அவர்கள் அந்த இடத்திலிருந்து தப்பியோடினர். எனினும் அந்த நேரம் நீதிமன்றக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினர் குறித்த இரண்டு இளைஞர்களையும் வளைத்துப் பிடித்தனர்.

பின்னர் இளைஞர்கள் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்டவரில் ஒருவர் ஏற்கனவே நீதிமன்றால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-103)

# மன்னாரில் ஒரே கிராமத்தில் 25 பேர் கைது

மன்னார், செப். 9

மன்னார் பணங்கட்டிக்கோட்டு கிராமத்தில் கடந்த சில தினங்களாக இடம் பெற்று வந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் இதுவரை அந்தக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் என 25 பேரைக் கைது செய்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

விளையாட்டு நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாகியதாகத் தெரிவிக்கப்பட்டது. இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது காயமடைந்த பலர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் குறித்த கிராமத்தில் அமைதியை நிலை நாட்டும் வகையில் பணங்கட்டிக்கோட்டு கிராமத்தைச் சேர்ந்த குறித்த இரு குழுக்களிலும் அங்கம் வகித்து வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 25 பேரைக் கைது செய்ததாகத் தெரிவித்தனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (வ-4,56)

# திருமலையில் 4 வயதுச் சிறுமி புதைக்கப்பட்டுச் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 9

திருகோணமலை, சம்பூர் நீலாங்கேணிப் பகுதியில் காட்டில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 4 வயதுச் சிறுமியின் சடலத்தை நேற்று மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் – நீலாங்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் அஜந்தா எனும் சிறுமியே காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

நேற்றுக் காலை 9 மணியளவில், வீட்டிலிருந்த சிறுமி, காணாமற்போயுள்ளார் எனத் தெரியவந்ததையடுத்து, தேடுதலில் ஈடுபட்ட கிராம மக்கள், காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் சிறுமியின் சடலத்தைக் கண்டு, பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

சிறுமியைத் துர்நடத்தைக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கிராம மக்கள் சந்தேகிக்கின்ற நிலையில், சந்தேகத்திற்குரிய இளைஞரும் தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இது தொடர்பில் சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

### சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் கந்தராஜேஸ்வரசர்மா (JP)

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் யாழ் மாநகரசபை)



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு அச்சக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் கந்தராஜேஸ்வரசர்மா கடந்த (06.09.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் - ராஜராஜேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கக்குருக்கள் - சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், ரேவதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2016) வெள்ளிக்கிழமை காலை கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று மு.ப 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

“இரட்ணா இல்லம்”
43 A, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவிலியம்மா சபாநாயகம்



உத்தரியமாதா கோயில் வசாவிளானைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கு ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவிலியம்மா சபாநாயகம் (07.09.2016) புதன்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற சபாநாயகத்தின் (இளைப்பாறிய ஆசிரியர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும் தனிநாயகம் (கனடா), தனநாயகம் (கனடா), மேரிறூபினா ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயமணி (கனடா), பற்றீசியா (கனடா), நித்தியானந்தராஜா ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் (நில அளவையாளர்), ஞானரத்தினம் மற்றும் மரியஞானேந்திரம் காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் புனிதசிவிலி (லண்டன்), ஜோசப்நவரட்ணம், அன்ரன் நவரட்ணம் (லண்டன்), சந்திரலூட்ஸ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அருட்சகோதரி மேரிறூபினா (திருக்குடும்ப கன்னியர் மடம், வங்காலை), இராஜேஸ்வரி (கனடா), மரியராணி, தேவரத்தினம், ஜோண்விக்டர் (லண்டன்), மேரியசிந்தா, றோஜினி (லண்டன்), செல்வநாயகம் ஆகியோரின் அன்புமைத்துனியும் விரிஷன், நிரூஷன், டிலக்ஷன், ஜெயதனோஷன், றோமன், அனிஸ்ரன், மாக்கென்றி, நிலக்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.09.2016) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து இரங்கல் திருப்பலிக்காக ஏழாலை புனித இசிதோர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
ஏ. நித்தியானந்தராஜா (மருமகன்)
077 [illegible]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புஸ்பவதி வாமதேவன்




உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைச் சேர்ந்த திருமதி புஸ்பவதி வாமதேவன் 07.09.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திலகவதி, மகேஸ்வரி, மற்றும் குகனேஸ்வரி ஆகி யோரின் சகோதரியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் வேதாரணியம், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கனகரட்ணம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும் சியாமளா(லண்டன்), சுரேஷ் (லண் டன்), சியாதா(ஆசிரியை-கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் மோகனகுமார் (லண்டன்), மனோஹரி (லண்டன்), ஆனந்தஜோதி ஆகியோரின் அன்பு மாமியும் சூரியமோகன் (லண்டன்), பிரியந்தி (லண்டன்), ஆரபி (லண்டன்) வராஹி (லண்டன்), வித்தியாஷாகர், அபிஷாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காந்தரூபன், குமுதினி, சுயந்தினி, சிவதக்ஷினி, சிவாஜினி, ஸ்ரீகரன், சுதா கரன்,ஸ்ரீஜனனி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.ஆனந்தஜோதி (மருமகன்)
021 2230616

### கதிர்காமன் சண்முகரட்ணம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நாரந்தனை தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது 33,குகன் வீதி, அரியாலையில் வசித்தவருமாகிய கதிர்காமன் சண்முகரட்ணம் கடந்த (07.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமன்-சிதம்பரம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் விஜிதபாரதி, ஜசிந்தபாரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் லட்சுமி, காமாட்சி, புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, செல்வி, பிள்ளைநாயகம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், கந்தையா, நடராசா, விஜேமான மற்றும் சிவானந்தராஜா, தவமணிதேவி, நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, நாகமுத்து, சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தசிவம், குமரகுருபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரவணபவன், சிவபாக்கியம், ஈஸ்வரி, ஜெயமணி, ஜெம்மா, கடாட்சம், சேனாதிராஜா, கனகமணி, கோபாலசிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அரியாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33,குகன் வீதி,
அரியாலை.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி-20 கிண்ணத்தை கைப்பற்றியது பாக்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒரேயொரு ரி-20 ஆட்டத்தை வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது பாகிஸ்தான்.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இங்கிலாந்தின் ஆரம்பம் ரி-20 ஆட்டங்களுக்கு ஏற்ற வகையில் சிறப்பாகவே அமைந்தது. 6 பந்துப் பரிமாற்றங்களில் அந்த அணி 50 ஓட்டங்களைத் தொட்டது. 21 ஓட்டங்களுடன் றோயை வீழ்த்திய இமாட் வசிம், கேல்ஸையும் போல்ட் செய்தார். இங்கிலாந்தின் மத்திய வரிசையை அச்சுறுத்தினார் வகாப் ரியாஸ். பட்லர், மோர்கன், வில்லி மூவரும் பதின்ம ஓட்டங்களுடன் பவிலியனுக்கு புறப்பட்டனர். ஆமிர் பந்துப் பரிமாற்றத்துக்கு 8 ஓட்டங்கள் என்ற சாராசரியில் வாரி வழங்கினார். ஆனால் ரியாஸின் சிக்கனப் பந்துவீச்சு பாகிஸ்தான் அணியில் சமநிலைத் தன்மையைப் பேணியது. முடிவில் இங்கிலாந்து 135-7.
பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ் மூன்று இலக்குகளையும், ஹசன் அலி, இமாட் வசிம் இருவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தானுக்கு, ஆரம்ப வீரர்களான சர்ஜீல் கான், லடிவ் இணை வெற்றிக்கான அடித்தளத்தை வழங்கியது. ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து, இணைப்பாட்டமாக 107 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில், 59 ஓட்டங்களுடன் சர்ஜீல் கானை வீழ்த்தினார் ரசிட். சர்ஜீல் கான் ஆட்டமிழந்தபோது, 53 பந்துகளில் 29 ஓட்டங்களை எடுத்தால் பாகிஸ்தானுக்கு வெற்றியென்ற நிலை இருந்தது. இதனால் அவரது ஆட்டமிழப்பு பாகிஸ்தானுக்கு அழுத்தத்தை வழங்கவில்லை. முடிவில் 31 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது பாகிஸ்தான். லடிவ் 59 ஓட்டங்களுடனும், அசாம் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். ரியாஸ் ஆட்டநாயகனானார். (ம)


- ரியாஸ்


வாய்ப்பைக் கோட்டைவிடும் போர்த்துக்கல் கோல் காப்பாளர்

# யூரோ சம்பியன் சுவிஸிடம் சரண்

உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் யூரோச் சம்பியனான போர்த்துக்கலை பந்தாடியது சுவிற்சர்லாந்து.
2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் பல்வேறுபட்ட நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் நடப்பு வருட யூரோக் கிண்ணத் தொடரில் மகுடம் சூடிய போர்த்துக்கலும், சுவிற்சர்லாந்தும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் சுவிற்சர்லாந்து வீரர் பிரீல் எம்போலா ஆட்டத்தின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் நட்சத்திர வீரரான அட்மிர் மிமிதி சுவிற்சர்லாந்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 2:0 என்ற நிலையில் முதல் பாதி முடிவடைந்தது.
பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கட்டாய நிலையில் களமிறங்கிய போர்த்துக்கல் அணியால் இரண்டாம் பாதியிலும் கோல் எதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல்லுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது சுவிற்சர்லாந்து. போர்த்துக்கல் அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான றொனால்டோ இந்த ஆட்டத்தில் களமிறங்கவில்லை. (ம)

## டோனியின் தலைமையில் விளையாட விருப்பம் தெரிவித்தார் கிறிஸ் கெய்ல்

ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் டோனியின் தலைமையில் விளையாடவேண்டும் என்பது தனது நீண்டநாள் கனவு எனத் தெரிவித்தார் கெய்ல்.
தமிழ்நாட்டில், தமிழ்நாட்டு பிரீமியர் லீக் தொடர் நடைபெற்றுவருகிறது. இந்தத் தொடரை பிரபலப்படுத்தும் நோக்கில் சென்னை சென்றுள்ள கெய்ல் அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
டோனியின் தலைமையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாட வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. அது ஓர் வித்தியாசமான அனுபவமாக இருக்கும். டோனி ஓர் சிறந்த தலைவர். அவருக்கும், கிரிக்கெட்டுக்கும் இங்கு (சென்னையில்) உள்ள ஆதரவு வியக்க வைக்கிறது என கெய்ல் மேலும் தெரிவித்தார். (ம)



## இலங்கை அணிக்கு கௌரவச் சிக்கல்

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான ரி-20 தொடர் இன்று நடைபெறவுள்ளது. வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை களமிறங்குகிறது.
கொழும்பு பிரேமதாச மைதானத்திலேயே இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனால் இந்த ஆட்டத்தில் வென்றால் மட்டுமே தொடரை குறைந்த பட்சம் சமன் செய்ய முடியும் என்ற கௌரவச் சிக்கல் நிலை இலங்கைக்கு உள்ளது. (ம)



## சேனநாயக்கவுக்கு அபராதம் விதிப்பு

மைதானத்தில் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சாளர் சேனநாயக்கவுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.
ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில், ஆஸ்திரேலியத் தலைவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான வோர்ணரை ஆட்டமிழக்கச் செய்த பின்னர், மைதானத்தை விட்டு வெளியேறுமாறு சேனநாயக்க சமிக்ஞை செய்திருந்தார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறையின் படி இது மோதல் போக்கைக் கடைப்பிடித்த அல்லது மோதலுக்குத் தூண்டுகின்ற குற்றமாகக் கருதப்படுகிறது. எனவே குறித்த ஆட்டத்துக்கான ஊதியத்திலிருந்து 30 சதவீதம் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ம)



## கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்தில் ஆட்ட நிர்ணயத் தரகர்கள் கைவரிசை

### எல் சவடோர் வெளிப்படுத்தியது

உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதி ஆட்டமொன்றில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்துக்கு தரகர் ஒருவர் முயற்சித்ததாக எல் சவடோர் அணி வெளிப்படுத்தியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
ரஷ்யாவில், 2018ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் எல் சவடோர் - கனடா அணிகள் மோதின. இந்த ஆட்டம்



ஆரம்பிப்பதற்கு முன்னர் கனடா அணியுடன் தோல்வியடையுமாறு கோரிக்கை விடுத்து, மிகப்பெரும் தொகையுடன் தரகர் ஒருவர் எல் சவடோர் வீரர்களை அணுகியதாக குறித்த வீரர்கள் வெளிப்படுத்தினர். ஆட்டம் முடிந்த பிற்பாடு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் வைத்தே அவர்கள் இதனை வெளிப்படுத்தினர். சூதாட்டத்தில் வீரர்களை ஈடுபடுத்த முயற்சித்த தரகர் எல்சவ டோரைச் சேர்ந்தவர் என்றும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த ஆட்டத்தில் கனடா 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோல்ப் விளையாட்டில் கலக்குகிறாராம் டோனி

தனது ஓய்வு நேரங்களை கோல்ப் விளையாட்டில் செலவிட்டு வருகிறார் இந்திய அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவர் டோனி.

டெஸ்ட், ரி-20, ஒருநாள் என மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த டோனி டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து விடைபெற்றுவிட்டார். இதனால் அவருக்கு ஏராளமான ஓய்வு நேரங்கள் கிடைக்கின்றன. இந்த ஓய்வு நேரங்களில் கோல்ப் மைதானத்துக்குச் சென்று கோல்ப் விளையாட்டில் ஈடுபட்டு வருகிறாராம். தான் கோல்ப் விளையாடுவது போன்ற படங்களை டோனி தனது சமூக வலைத்தளங்களிலும் பதிவிட்டார். (ம)





# மகுடம் சூடியது ஞானமுருகன் யங்ஹென்றிஸை தோற்கடித்து

யாழ்ப்பாணம், செப். 9

புத்தூர் சிறி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியனானது.

விக்னேஸ்வராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த ஆட்டம் நடைபெற்றது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் இளம்வீரர் வகீம்சன் தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

ஆதிக்கத்தை இரட்டிப்பாக்கும் முனைப்பில் ஞானமுருகனும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற முனைப்பில் ஞானமுருகனும் இரண்டாம் பாதிக்காக களமிறங்கின. 18 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதையை அணித் தலைவர் பார்த்தீபன் கோலமாற்றி தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதிவரை யங்ஹென்றிஸ் கோல் கணக்கை ஆரம்பிக்காத நிலையில் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது ஞானமுருகன்.

வதிரி டயமன்ஸை 3:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை தனதாக்கியது நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகம்.

சிறந்த வீரனாக மயிலங்காடு ஞானமுருகன் அணியின் தீபன், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் சயந்தன், தொடராட்ட நாயகனாக யங்ஹென்றிஸ் அணியின் தனேஸ், வளர்ந்துவரும் வீரனாக மயிலங்காடு ஞானமுருகன் அணியின் வகீம்சன், அதிக கோல்களைப் பதிவுசெய்த வீரனாக நாவாந்துறை சென். மேரிஸின் நிதர்சன் ஆகியோர் தெரிவானர். (ம)

## கரவெட்டி பிரதேசம் சம்பியன்

யாழ். மாவட்டச் செயலர் கிண்ணத்துக்காக பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சதுரங்கத் தொடரில் ஆண்கள் பிரிவில் கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியனானது. பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு இரண்டாம் இடம் கிடைத்தது.

கரவெட்டி பிரதேச செயலக அணி யாழ்ப்பாணம், மருதங்கேணி, காரைநகர் ஆகிய பிரதேச செயலக அணிகளுடனும், யாழ். மாவட்டச் செலயக அணியுடனும் மோதிப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிடம் பிடித்தது. (ம-422)

## வடக்குக்கு வெள்ளி



யாழ்ப்பாணம், செப். 9

தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் பெண்கள் பிரிவில் வடமாகாணத்துக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. விளையாட்டு அமைச்சின் கொழும்பு உள்ளரங்கில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற பெண்களுக்கான போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி.ஆசிகா 58 கிலோ எடைப் பிரிவில் 135 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தை வென்றாள். (ம-23)

## பல்கலையின் எல்லே: தவறியது அரையிறுதி


யாழ்ப்பாணம், செப். 9

அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவு ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி அரையிறுதி ஆட்டத்துக்கான வாய்ப்பைத் தவறவிட்டது. வயம்ப பல்கலைக் கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில், யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி பலப்பரீட்சை நடத்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக் கழக அணி 30 பந்துகளில் இரண்டு ஓட்டங்களைப் பெற்றது. மூன்று ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜெயவர்தனபுர பல்கலைக்கழக அணி 15 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்து, அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. யாழ். பல்கலையின் பயணம் காலிறுதியுடன் முடிவு கண்டது. (ம-23)

# செரீனா வில்லியம்ஸ் அரையிறுதிக்கு தகுதி

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் செரீனா வில்லியம்ஸ்.

நடப்பு வருடத்தில் கடைசி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான அமெரிக்க ரென்னிஸ் தொடர் அந்த நாட்டின் தலைநகர் நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனாவை எதிர்த்து 5 ஆம் இடத்தில் உள்ள வீராங்கனையான கேலப் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் செரீனா வில்லியம்ஸ் கைப்பற்றிய போதிலும், இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் கேலப். சரிவிலிருந்து மீண்டு இறுதி செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய செரீனா வில்லியம்ஸ் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



மாற்றுத் திறனாளிகளுக்கான பராலிம்பிக் போட்டிகள் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) ஆரம்பமாகின. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

சமுர்த்தி
பிரிவு I
சனி,ஞாயிறு,திங்கள்
காலை9.00-3.00 மணிவரை
பிரிவு II
ஒவ்வொருநாளும்
மாலை 5.00-6.30 மணிவரை

நன்நடத்தை உத்தியோகத்தர்
சனி,ஞாயிறு

சட்டமானி நுழைவு
சனி,ஞாயிறு
1.00-5.00 மணிவரை

ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு
10.00-3.00 மணிவரை

இறைவரி,கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி ஞாயிறு
2.00-5.00 மணிவரை

பேராதனை வெளிவாரி நுழைவுக்கான GK,IQ
பிரதி ஞாயிறு
3.00-5.00 மணிவரை

T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
464,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கியருகில்)

# எதிர்ப்புக்களுக்குப் பணிந்த பன்னாட்டு கிரிக்கெட் சபை

டெஸ்ட் ஆட்டங்களை இரு பிரிவாக நடத்த வேண்டும் என்ற பரிந்துரையைத் திரும்பப் பெறுவதாக பன்னாட்டு கிரிக்கெட் சபை அறிவித்தது.

ரி-20 ஆட்டங்களின் அறிமுகத்துக்குப் பின்னர் டெஸ்ட் ஆட்டங்கள் ரசிகர்களை இழந்து வருகின்றன. இதனால் மீண்டும் விறுவிறுப்புத் தன்மையை கட்டியெழுப்பும் நோக்கில் சில திட்டங்களைப் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை பரிந்துரைத்தது. இருபிரிவாக டெஸ்ட் ஆட்டங்களை நடத்துவதும் அவற்றில் ஒன்றாகும். இதன்படி ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படும். தரப்படுத்தலில் முதல் ஏழு இடங்களுக்குள் உள்ள அணிகளுக்கு ஒரு பிரிவாகவும், அடுத்த ஐந்து இடங்களுக்குள் உள்ள அணிகளுக்கு பிறிதொரு பிரிவாகவும் தொடர்கள் நடத்தப்படும். இந்த முறைக்கு இங்கிலாந்து, ஆஸ்திரேலியச் சபைகள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பெரும் எதிர்ப்பையும் வெளியிட்டு சில விமர்சனங்களையும் முன்வைத்தது. கடைசி ஐந்து அணிகளதும் டெஸ்ட் வாழ்க்கை, குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கருத்தாக அமைந்தது.




இலங்கை, பங்களாதேஷ், சிம்பாப்வே கிரிக்கெட் சபைகள் இந்தியாவுக்கு ஆதரவைத் தெரிவித்தன. இதனையடுத்து குறித்த பரிந்துரையைத் திரும்பப் பெறுவதாகப் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் ரிச்சட்சன் தெரிவித்தார். (ம)

# பரா ஒலிம்பிக் தொடரில் நிலத்தில் வீழ்ந்தது தீபம்

மாற்றுத் திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடர் நேற்று ஆரம்பமானது. தீபத்தைக் கொண்டு சென்ற பிரேஸிலின் முன்னாள் வீராங்கனை நிலத்தில் வீழ்ந்தார். அவருடன் தீபமும் கீழே வீழ்ந்தது.

ஒலிம்பிக் தொடர் நடைபெற்ற ரியோ டி ஜெனிரோ நகரிலேயே மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் தொடரும் நடைபெற்று வருகிறது. இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) நடைபெற்றது. தீபத்தைக் கொண்டு செல்லும் ஓட்டத்தில், கடந்த 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் தொடரில் 200 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தில் பங்கெடுத்து தங்கப் பதக்கம் வென்ற பிரேஸிலின் மார்சியா மல்சர் என்ற வீராங்கனையும் கலந்துகொண்டார். மழையும் பெய்தமையால் அவர் தடுமாறிக் கீழே விழுந்தார். தீபம் கீழே வீழ்ந்தது. இருப்பினும் அது அணைய வில்லை. (ம)





ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இன்று நடைபெறும் இரண்டாவதும், இறுதியானதுமான ரி-20 ஆட்டத்துடன் பன்னாட்டு கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுக்கும் டில்சான், நேற்று அணியுடன் இணைந்து தனது இறுதி வலைப் பயிற்சியில் ஈடுபட்டார். (ம)

## தலையில் பந்து தாக்கி ஓஜா மருத்துவமனையில்

இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் ஓஜாவின் தலையில் பந்து தாக்கியதால் அவர் மயக்க மடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தியாவின் உள்ளூர் அணிகளுக்கு இடையே பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தியா புளூ, இந்தியா கிரீன் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில், இந்தியா கிரீன் அணியின் ஓஜா களத்தடுப்பில் ஈடுபட்டபோது அவரது தலையைப் பந்து பலமாகத் தாக்கியதால் மயங்கி விழுந்தார். சிகிச்சை வழங்கப்பட்டது. தற்போது அவர் நலமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# அமெரிக்க நீச்சல் வீரர்களுக்குத் தடை

சமீபத்தில் முடிந்த ரியோ ஒலிம்பிக் தொடரின் போது தங்களை துப்பாக்கி முனையில் மிரட்டி வழிப்பறி செய்ததாக நாடகமாடிய அமெரிக்க நீச்சல் வீரர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.



ரியோ ஒலிம்பிக் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, தமது போட்டிகள் முடிவடைந்ததும், ஒலிம்பிக் கிராமத்தை விட்டு வெளியேறிய அமெரிக்க நீச்சல் வீரர்கள் நால்வர், மதுபோதையில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்குள் சென்று சேதங்களை ஏற்படுத்தினர். இதனையடுத்து நிலையப் பாதுகாவலர்கள் அவர்களிடமிருந்து நட்டஈடாக பணத்தைப் பெற்றுக்கொண்டு பின்னர் அவர்களை விடுவித்தனர்.

தமது தவறை மூடிமறைத்த வீரர்கள் தம்மிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்தனர். இதனால் ஒலிம்பிக் தொடரை நடத்திய பிரேஸிலின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீது அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. ஆனால் வீரர்களிடத்தில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளிலும், கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகளின் அடிப்படையிலும், தவறு வீரர்களிடம் உள்ளமை வெளிப்பட்டது. இதை வீரர்களும் ஏற்றுக் கொண்டனர். இதனையடுத்து குறித்த வீரர்களுக்குக் குறுகிய காலத் தடை விதிக்கப்பட்டது. தடை பெற்றவர்களில் 12 ஒலிம்பிக் பதக்கம் வென்ற ரயான் லோக்ட்டும் உள்ளடங்குகிறார். (ம)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் உத்தியோகத்தர்களை (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் :- புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.
திகதி :- 11.09.2016 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9 மணிமுதல்
பிற்பகல் 4.30 மணிவரை

வளவாளர்கள்
துறைசார் தென்பகுதியில் இருந்து வருகை தரும் நிபுணத்துவ வளவாளர்களுடன் எமது மாவட்ட துறைசார் வளவாளர்கள்.

திரு.ஐ.அலியார் - தென்பகுதி வளவாளர்
திரு.ஆ.இரகுநாதன் - மாவட்ட வளவாளர் (கிளிநொச்சி)
திரு. இ. சர்வேஸ்வரா - மாவட்ட வளவாளர்(யாழ்ப்பாணம்)

மாதிரி வினாத்தாள்கள் மற்றும் பரீட்சைக்கான வழிகாட்டல் குறிப்புக்கள் வழங்கப்படும்.
அனுமதிக்கட்டணம் - 1000 ரூபா மட்டும்.
முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்

நிர்வாகி,
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 021 222 8148, 021 568 9477,
077 607 1954, 077 846 9721

Study in Australia




Spot Admission on 10-Sep-2016

❖After G.C.E. O/L or G.C.E A/L or Degree
❖Foundation / Diploma / Bachelors / Masters
படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
❖July 1st இருந்து இலகு Visa நடைமுறைகள்
❖குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
❖Spouse can travel together
❖பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20 Hours per week)

Admission open for 2016/2017 Intake

iCS Foreign Education Services
Admission Help line
077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo 06

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 10.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00

வாரநாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம் 12.09.2016
காலை 10.00-12.00 மாலை 04.30-06.00

பாடப்புத்தகங்கள் சான்றிதழ், மற்றும் mp3/DVD அனைத்தும் இலவசம்.

SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

விசேட கருத்தரங்கு
Sep - 18 ஆம் திகதி நடைபெறவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் போட்டிப்பரீட்சை வகுப்புகள்
காலம் - 10/09, 11/09, 12/09, 16/09, 17/09 5Days
நேரம் 9.00 - 3.00 pm
முற்றிலும் எதிர்பார்க்கத விடயங்கள் ஆராயப்படும்.
வடமாகாண பட்டதாரி ஆசிரியர் போட்டிப்பரீட்சை வகுப்பு பிரதி ஞாயிறு 9.00 - 4.00 Pm
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்நகர்
T.P : 077 4696695

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.